கழக வெளியீடு: அ௨க

தமிழ்ப் புலவர் வரிசை

[பன்னிரண்டாம் புத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Dec., 1955.

THAMIZHP PULAVAR VARISAI - XII.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம்நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் பதினொரு நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் பன்னிரண்டாம் புத்தகமாகும்.

இதன்கண் கோ. வடிவேல் செட்டியார் முதல் சூலியன் வின்சோன் ஈறாக ௨௮ புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித்தந்த திரு. கு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் பதினொரு புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	கோ. வடிவேல் செட்டியார்	1
உ.	தில்லைநாயக முதலியார்	6
ங.	சிவஞானம் பிள்ளை, சே.	8
ச.	இராசகோபாலையங்கார், வே.	10
ரு.	உமாமகேசுவரன் பிள்ளை	15
சு.	சிவானந்த யதீந்திரர்	19
எ.	கன்னைய நாயுடு	24
அ.	சுவாமி ஞானப்பிரகாசர்	29
கூ.	கந்தசாமியார், ரா.	39
க0.	நடேச முதலியார், மு.	51
கக.	இராகவையங்கார், ரா.	54
கஉ.	திரு. நாராயண ஐயங்கார்	58
கங.	இரமண மகரிஷி	64
கச.	சீநிவாச ஐயங்கார், தி. செ.	70
கரு.	காரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை	75
கசு.	சிவகுருநாத பிள்ளை, ந.	84
கஎ.	பூவராகம் பிள்ளை, ஆ.	90
கஅ.	செவ்வந்திநாத தேசிகர்	94
ககூ.	முத்துசிவன், ஆ.	97
உ0.	சங்கர சிந்தாமணிப் புலவர்	102
உக.	சொக்கநாதப் புலவர்	107
உஉ.	பொன்னம்பலக் கவிராயர்	115
உங.	மதுரைச் சிதம்பரம் பிள்ளை	117
உச.	வெண்பாப்புலி வீரகவிராயர்	121
உரு.	கல்போது பிச்சுவையர்	129
உசு.	களத்தூர் வேதகிரி முதலியார்	134
உஎ.	வண்டானம் முத்துச்சாமி ஐயர்	137
உஅ.	சூலியன் வின்சோன்	142

தமிழ்ப் புலவர் வரிசை

[பன்னிரண்டாம் புத்தகம்]

க. கோ. வடிவேல் செட்டியார்

தோற்றம்

இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த போதகாசிரியர் என்னுஞ் சிறப்புப் பெயருடன் விளங்கிய வடிவேல் செட்டியார் சென்னையிலுள்ள கோமளேசுவரன் பேட்டையில் 1863-ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் பெயர் சுப்பராய செட்டியார், தாயார் பெயர் தனகோடி அம்மையார்.

கல்வி

வடிவேலர் ஐந்தாம் அகவையில் பள்ளியில் வைக்கப் பட்டார். பத்தாவது அகவைவரையில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்விபயின்றார். வாணிகம் கைத்தொழில் முதலிய தொழின்முறைக் கல்வியை ஒருவாறு கற்றுக் கொண்ட வடிவேலர் பன்னிரண்டாம் அகவை முதற் கொண்டு இருபத்தாறும் அகவை வரையில் குலத்தொழிலாகிய வாணிபத்தில் ஈடுபட்டார். பலசரக்குக் கடை வைத்து வாணிகம் நடத்தினர்.

புலமைக்கல்வி

வாணிபத்தில் ஈடுபட்டிருக்கும் நாளையில் புலமைக் கல்வியைக் கற்றுச் சிறப்படையவேண்டும் என்னும் எண்ணம் இவருக்குண்டாகியது. இராமாநுச நாயகர் என்னும் அறிஞரிடம் கல்விகற்கத் தொடங்கினார். அவரிடம் ஏழு ஆண்டுகள்வரை இலக்கண இலக்கியங்களைக் கருத்துடன் பயின்றார். பிறகு பெரும்புலவர் காஞ்சி இராமசாமி நாயுடு, மயிலை அறிஞர் சண்முகம்பிள்ளை ஆகியவர்களிடம் பல நூல்களைக் கற்றார். அந்நாளில் சென்னையில் புகழ் பெற்று விளங்கியவரும் வேதாந்தம் தருக்கம் ஆகிய நூல்களிற் சிறந்த புலமை பெற்றவரும் சென்னை ரிப்பன் அச்சுக் கூடம் என்னும் பதிப்பகத்தைத் தொடங்கி நடத்தியவருமாகிய சாது இரத்தின செட்டியாரிடம், பன்னிரண்டு ஆண்டுகள்வரை கூடப்பழகி வேதாந்த நூல்களையும் தருக்க நூல்களையும் நன்கு கற்றுத் தேறினார்.

37 ஆண்டுகள் வேலை

சென்னையிற் புகழ்பெற்று விளங்கும் இந்து தியலாசிகல் உயர்நிலைப்பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழாசிரியராகத் தொழில் புரிந்தார். ஒரே இடத்தில் இவ்வளவு ஆண்டுகள் தொடர்ந்து வேலைசெய்தவர்களை நாம் காண்பது அருமை. செட்டியார் இவ்வாறு தொடர்ந்து ஆற்றிய பணியைப் பாராட்டிப் பள்ளியதிகாரிகள் அவருக்கு வாணாள்வரை உதவிப்பொருளும் வழங்கினர்.

கலைத்தொண்டு

செட்டியார் பள்ளிவேலையோடு தமது கடமை தீர்ந்ததென்று ஓய்ந்திருக்கவில்லை. பள்ளிக்கு வெளியிலே செட்டியார் 'செய்த வேலைதான் அரிய கலைத்தொண்டாகியது. திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்க

வுரை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். கைவல்ய நவ நீதம், வேதாந்த சூடாமணி முதலிய வேதாந்த நூல்களை உரைநடையாக எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். நானுசிவவாதக் கட்டளை என்னும் நூலுக்குக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்தார். 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு' என்னும் நூலுக்கு உரையெழுதினர். 'காரைக்காலம்மையார்' வரலாற்றைப் புனிதவதியார் என்னும் பெயரோடு இனிய நாடகமாக எழுதி வெளியிட்டார்.

லோகோபகாரி

லோகோபகாரி என்னும் கிழமைப் பத்திரிகையை 1911-ஆம் ஆண்டு முதல் பத்தாண்டுகள் வரையில் சிறந்த முறையில் நடத்தினர். உலகச் செய்திகள் பலவும் லோகோபகாரியில் வெளியானதோடு செட்டியார் வேதாந்தக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதிவெளிப்படுத்தினர். பிறகு அக்கட்டுரைகள் நூல்வடிவமாக வெளிப்படுத்தப்பட்டன. சக்கரவர்த்தினி என்னுந் திங்கள் வெளியீட்டையும் ஐந்தாறு ஆண்டுகள்வரை நடத்தினர். சச்சிதானந்த அச்சுக்கூடம் என்னும் பெயரோடு அச்சுக்கூடம் ஒன்றை அமைத்திருந்தார். லோகோபகாரிப் பத்திரிகை அந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டதன்றி வேதாந்த சித்தாந்த இலக்கண இலக்கிய நூல்கள் பலவும் செட்டியாருடைய பார்வையில் அழகாகவும் திருத்தமாகவும் வெளிப்படுத்தப்பட்டன.

பொதுத்தொண்டு

பல இடங்களில் செட்டியார் வேதாந்த சங்கங்களை அமைத்து அங்கு வேதாந்த பாடங்கள் நடத்தினர். வேதாந்தச் சொற்பொழிவுகளையும் அன்பர்கள் விரும்பிய இடங்களில் ஆற்றினர். செட்டியாரிடத்தில் வேதாந்த நூல்

களைப் பாடங்கேட்டுச் சிறந்தவர்கள் பலர். பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், புலவர் ச. கந்தசாமி முதலியார், மொ. க. துரையரங்கனுர் முதலியோர் செட்டியாரிடம் பாடங்கேட்டவர்களிற் சிலராவர்.

திருமணம்

தகுந்த காலத்தில் செட்டியாருக்குத் திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக அமைந்த அம்மையாரின் பெயர் பூங்காவனம். நான்கு பெண் மக்களும் ஓர் ஆண்மகனும் செட்டியாருக்கு மக்கட்பேருக உண்டாயினர்.

தமிழ் ஞாயிறு

வடிவேல் செட்டியாரிடத்திலே, திரு. வி. கல்யாண சுந்தரனுர் அவர்கட்குப் பெருமதிப்புண்டு. செட்டியாரைத் தமிழ் ஞாயிறு என்று திரு. வி. க. குறிப்பிட்டுள்ளார். "இத்தமிழ் ஞாயிறு இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம், பொதுமை, ஒழுக்கம், ஒப்புரவு முதலிய கதிர்கள் கான்றிய வண்ணமாயிருந்தது. ஒருவிதக் கலையில் பலர் புலவர் ஆகலாம். பலவிதக் கலையில் பலர் புலவராதல் அருமை. மிகச்சிலரே பல்கலைப் புலவராகின்ருர். அப்பேறு அறிஞர் வடிவேல் செட்டியார்க்கு வாய்த்திருந்தது. செட்டியார் பலகலைப் புலவர். கலைகள் செட்டியார் உள்ளத்தில் ஒன்றி, அவர்தம் உள்ளமாய், ஊனுய், உடலாய்ப் பரிணமித்திருந்தது. கலைகளே செட்டியார்; செட்டியாரே கலைகள். செட்டியார் ஒரு பல்கலைக் கழகம்போல் விளங்கினர்." என்று திரு. வி. க. புகழ்ந்து போற்றியுள்ளார்.

சொற்போர்வீரர்

செட்டியார் காலத்தில் சென்னையில் இருந்த புலவர்கள் செட்டியாரையே தலைமைப் புலவராக மதித்திருந்தனர்.

செட்டியாரோடு சொற்போரிடுதற்கு எவருந் துணியார். துணிந்து சொற்போரிடுவாராயின் தோல்வியுறுவது திண்ணம். யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை, திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளின் அருட்பாவை மருட்பா என்றிகழ்ந்து வீணுகத் தூற்றிக்கொண்டு திரிந்த காலத்தில், செட்டியார் பேரவையொன்று கூட்டினுர். தம் எண்ணத்தை எடுத்துக் கூறுமாறு கதிரைவேலரை வடிவேலர் அழைத்தார். கதிரைவேலர் செட்டியாருடைய கண்ணுக்கு அகப்படாது மறைந்து போனுர். வேறுபல புலவர்களுடைய அவையிலும் செட்டியார் சென்று அவர் தங் கூற்றைக் கண்டிப்பான் புகுந்தபோது அப்புலவர்கள் எதிர்த்துச் சொற்போரிடாது ஓடிப்போயினர்.

குண நலன்கள்

செட்டியார் தமது வாணுள் முழுமையும் செந்தமிழ்ப் பணிக்கே பயன்படுத்தினுர். பெரும் புலவராக இவர் விளங்கியதற்கேற்பக் குணநலன்களும் பெருந்தன்மை யமைந்தனவாகவே விளங்கின. எவரையும் வலியச் சென்று சொற்போருக்கு இழுக்கமாட்டார். பகைவர்களிடத்திலும் நட்பு முறையிலேயே நடந்து கொள்ளுவார். வேதாந்த நூற்கல்வியை ஏட்டளவில் வைத்திராமல் நடைமுறையிலுங் கடைப்பிடித்தார்.

இறுதி

சிறந்த செந்தமிழ் வாணராக விளங்கிய இப்பெரியார் தமது எழுபத்துமூன்றும் அகவையில் 1936-ஆம் ஆண்டில் வீடுபேற்றையடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கம்
2. கைவல்ய நவநீத உரைநடை

3. வேதாந்த சூளாமணி உரைநடை
4. மகாராசா துறவு உரைநடை
5. வியாசபோதினி இரண்டுபகுதி
6. புனிதவதி நாடகம்
7. மெய்ஞ்ஞானபோதம்
8. பிரமஞானோபதேசம்
9. சிவப்பிரகாசப் பெருந்திரட்டு உரை
10. பகவத்கீதை வசனம்
11. நாஞ்சிவவாதக் கட்டளைக் குறிப்புரை
12. கட்டளைச் சங்கை நிராகரணம்
13. குசேலோபாக்கியான வசனம்
14. சித்தாந்தபிந்து மொழிபெயர்ப்பு
15. தருக்கபரிபாடை
16. சிவஞானபோதம் உரை

மற்றும் பல.

இவர் உரையெழுதிய நூல்கள் சில இவருடைய மாணவர்கள் பெயராலும் வெளியாகியுள்ளன.

உ. தில்லைநாயக முதலியார்

தோற்றம்

தில்லைநாயக முதலியார் என்பவர் சிதம்பரம் என வழங்கும் திருத்தில்லையிலே, (1876-ஆம் ஆண்டு) தாது ஞூ ஐப்பசி மீ 30-ஆம்தேதி தோன்றினார். தந்தையார் பெயர் வெல்லப்பிறந்தான் முதலியார்.

கல்வி

இவர் பள்ளிக் கல்வியைப் பயின்று முடித்தபின் ஈசானிய மடம் இராமலிங்க அடிகளிடத்திலே இலக்கண இலக்கியங்களை வரன்முறையாகக் கற்றுத்தேறினார்.

தமிழ்த்தொண்டு

தமிழ்க்கல்வியை நன்கு கற்றுத்தேறிய இவர் சைவத்திற்குந் தமிழுக்குந், தக்கவாறு இளமையிலிருந்தே தொண்டு செய்தார். பல சங்கங்களினும் அவைகளினும் அரிய சொற்பொழிவுகள் பல செய்தார். திருத்தில்லையில் செந்தமிழ்ச் சங்கம் என்னும் பெயருடன் தமிழ்க்கழகம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் துணைத்தலைவராக இருந்து மாணவர் பலருக்குக் கல்வி போதித்தார். நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் புலவர் வகுப்பில் நாள்தோறும் இரண்டு மணி நேரம் வரையில் ஊதியம் பெறாமல் பாடஞ் சொல்லி வந்தார். சென்னை அரசினரால் ஏற்படுத்தப் பட்ட தமிழ் அகரவரிசைக் குழுவில் உறுப்பினராகவும் இருந்தார்.

மாணவர்கள்

இவரிடம் கல்விகற்றுத் தேறிய மாணவர்கள், திருநாரையூர் முத்துக்குமரபிள்ளை, வேலூர் ஊர்கீஸ் கல்லூரித் தமிழாசிரியர் சி. எஸ். இராசாப்பிள்ளை, காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் ஏகாம்பர ஐயர், நாவலர் கல்லூரி ஆசிரியர்களான வேங்கடாசலம்பிள்ளை, கிருட்டிணமூர்த்தி ஐயர், உடன்குடி, புகழ். முத்துச்சாமிப் பிள்ளை முதலிய பலராவர். தம் குடும்பத்து முன்னோர்களைப் போலவே தில்லைநாயக முதலியாரும் புலவர்களையும் அடியார்களையும் அன்போடு ஆதரித்து வள்ளன்மையையும் மேற்கொண்டு விளங்கினார்.

இவர் இயற்றிய நூல்

செய்யுள் செய்வதிலும் வல்லவராக விளங்கிய இவர் திருத்தில்லையில் எழுந்தருளிய முருகக்கடவுள்மீது, "குமரவேள் மும்மணிக்கோவை," என்னும் அரிய சித்தாந்தக்

கருத்துக்கள் அடங்கிய நூல் ஒன்றை இயற்றினர். இந் நூல், திருவாங்கூர் பொன்னம்பலம்பிள்ளை, உ. வே. சாமி நாதையர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் முதலிய பலருடைய பாராட்டைப்பெற்றது.

"ஏற்றிவர் எம்மான் குமாரன் முருகன் எழிற்புலிசை
மாற்றுயர் பொன்னம் பலமிட மாஞேன் வளர்மொழியின்
பாற்றரு வள்ளி மணாளன் திருத்தகு பாதமலர்
போற்றி வணங்கிலை நெஞ்சே உனக்கெவர் போதிப்பரே."

என்பது அந் நூலில் உள்ள ஒரு செய்யுளாகும்.

இறுதி

இவர், 1917-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் பத்தாம் நாள் (பிங்கள ஆண்டு புரட்டாசித்திங்கள் உரு-ஆம் நாள்) தமது நாற்பத்தொன்றும் அகவையில் இவ் வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

---

௩. சிவஞானம் பிள்ளை

பிறப்பு

சே. சிவஞானம் பிள்ளை 1871-ஆம் ஆண்டில் சென்னை மயிலாப்பூரிலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வெள்ளியம்பல உபாத்தியாயர். வெள்ளியம்பல உபாத்தி யாயர் திறமைவாய்ந்த புராணச் சொற்பொழிவாளராகவும் தமிழ்ப் புலவராகவும் விளங்கினர்.

கல்வி

சிவஞானம் பிள்ளை தமது இளமையிலேயே தமிழ் நூல்களையும் சமய நூல்களையும் தம் தந்தையாரிடம் ஓதி யுணர்ந்தார். இவரோடு இவர் தந்தையாரிடங் கல்வி கற்ற வர்களில் கா. நமச்சிவாய முதலியாரும் ஒருவர். தந்தையா

ராகிய வெள்ளியம்பல உபாத்தியாயர் காலஞ்சென்றபின், சிவஞானம் பிள்ளையும் நமச்சிவாய முதலியாரும் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையிடத்திலும், பிறகு காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு இடத்திலும் பல நூல்களைப் பாடங்கேட்டார்கள்.

அரசாங்க அலுவல்

பிறகு சிவஞானம் பிள்ளை அரசாங்கக் கல்விப் பிரிவில் எழுத்தாளராக அமைந்தார். 1926-ஆம் ஆண்டு வரையில் அவ் வேலையைத் திறமையாகப் பார்த்துப் பிறகு ஓய்வு பெற்றார்.

நூல்கள் இயற்றுதல்

வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின் தமது முழுப் பொழுதையும் நூலாராய்ச்சியிலும் நூல்கள் எழுதுவதிலும் செலவிட்டார். இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் சில பெரிய தேர்வுகட்குப் பாடப்புத்தகங்களாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் வைக்கப்பட்டன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் வரலாறுகளையும் பற்பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் எழுதினார். கந்தபுராணம் முழுமையையும் நன்கு ஆராய்ந்து அரிய பாடல்களைத் திரட்டிக் கந்தபுராணச் சுருக்கம் என்னும் பெயரோடு வெளியிட்டார். பெரியபுராணக் கதைகளையும் தெளிவான முறையில் எழுதி வெளியிட்டார். கல்விகற்க விரும்பிய பலருக்குப் பெரியபுராணம். திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களை எளிய முறையில் விளக்கமாகப் போதித்தார்.

இறுதி

இவ்வாறு தமிழ்த்தொண்டு செய்து கொண்டிருந்த இவர் 1933-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் பத்தொன்பதாம்

நாள் சனிக்கிழமை தமது அறுபத்து மூன்றாம் அகவையின் தொடக்கத்தில் இறைவன் திருவடி நீழலை எய்தினார்.

தன்மை

இவர் நாள்தோறும் திருக்கோயில் வழிபாடு சிவபூசை முதலியவைகளை வழக்கமாகப் புரிதலை முறைமையாகமேற் கொண்டிருந்தார். தஞ்சை மாவட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, தேவாரம் பெற்ற சிவப்பதிகளில் பலவற்றைப் போற்றி வழிபட்டார். சமய குரவர்கள் நால்வரின் வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் நிகழ்ந்த சிவப்பதிகட்குச் சென்று, ஆங்காங்குள்ள சான்றுகளை நேரிற் கண்டு தொகுப்பதில் இவர் மிகுந்த கருத்துச் செலுத்தினார்.

---

௩. இராசகோபாலையங்கார்

பிறப்பு

சோழவள நாட்டிலே திட்டாணி வட்டம் என்னும் ஊரிலே வைணவ அந்தணர் குலத்திலே 1882-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் (சித்திரபாநு ஆண்டு ஆவணித்திங்கள் இருபதாம்நாள்) வே. இராசகோபாலையங்கார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வேங்கடேச ஐயங்கார். தாயார் பெயர் அரங்கநாயகியம்மாள்.

கல்விப் பயிற்சி

தொடக்கப்பள்ளியிற் கற்கவேண்டிய கல்வியைக் கற்ற பின் கும்பகோணஞ் சென்று ஆங்கிருந்த ஊர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். ஆங்கிலக்கல்வியை மெட்ரிக்குலேஷன்வரை பயின்றார். அப்போது அப்பள்ளியில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் தமிழாசிரியராக அமர்ந்திருந்

தார். அவர் தமிழ்மொழியைப் போதித்த திறம் இவருக்குத் தமிழினிடத்திலே மிகுந்த பற்றை உண்டாக்கியது. அவரிடம் தமிழ் நூல்களைப்படித்தார். இவருடைய ஏழாம் அகவையிலே தந்தையாரும் பதினாறாம் அகவையிலே தாயாரும் வைகுந்தஞ் சென்றார்கள். தமிழ்க் கல்வியை ஊக்கத்துடன் பயின்ற ஐயங்கார் சில ஆண்டுகளில் தமிழ்மொழியில் வல்லவரானார்.

ஆசிரியத் தொழில்

தமிழ்மொழியில் புலமைபெற்ற இவர் கும்பகோணம் நேடிவ்-ஐஸ்கூலில் 1909-1910-ஆம் ஆண்டுகளில் தமிழாசிரியராக அமர்ந்து வேலை பார்த்தார். பிறகு நெல்லூர் உயர்நிலைப்பள்ளியிலும் சில ஆண்டுகள் வேலை பார்த்தார். அந்நாளிலேயே நூலெழுதுந்தொழிலிலும் ஈடுபட்டார். முதன் முதலில் 'ஐவன்கோ' என்னும் ஆங்கில நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தார். கதைக்கொத்து முதலிய சிறு நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

சுதேசமித்திரன் உதவியாசிரியர்

1912-ஆம் ஆண்டில் ஐயங்கார் சென்னையை அடைந்து அவ்விடமே தங்கி வாழ்க்கையை நடத்தத் தொடங்கினார். அப்பொழுது சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவியாசிரியராக அமர்த்தப்பெற்று அவ்வேலையை இரண்டு மூன்று ஆண்டுகள் பார்த்தார்.

நூல்கள் எழுதுதல்

பத்திரிகை வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பள்ளிச்சிறுவர்கள் படித்து மகிழுமாறு இனிய எளிய தமிழ்நடையில் சிறுகதைப் புத்தகங்கள் பலவற்றை எழுதினார். அவைகளைப் பள்ளியாசிரியர்களும் பிறரும் நன்கு மதித்துப் போற்றினர். ஆசிரியர்கள் தத்தம் பாட

சாலைகளில் பாடப்புத்தகங்களாக வைத்து ஐயங்காருக்கு ஊக்கம் உண்டாக்கினர். சென்னைக் குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் கம்பெனியார் ஐயங்காருடைய நூல்கள் சில வற்றை ஏற்றுப் பதிப்பித்து வெளியிட்டனர். நூல்கள் யாண்டும் பரவித் தக்க பயனை உண்டாக்கினமையால் தாம் மேற்கொண்டிருந்த சுதேசமித்திரன் உதவியாசிரியர் வேலையை விட்டுவிட்டுப் பாடநூல்கள் எழுதி வெளியிடு வதற்கே தமது முழுநேரத்தையும் செலவிட்டார். இத் தொழில் இவருக்கு மிகுந்த பயனையளித்தது.

கம்பர் விலாசம்

ஐயங்கார் பொருள்வருவாய் ஒன்றையே குறிக் கோளாகக்கொண்டு தமது தமிழறிவை அதற்கே உரிமை யாக்கிவிடவில்லை. தமிழ்நூல்கள் பலவற்றையும் நன்கு கற்று அருங்கலை விநோதராகப் பொழுதுபோக்குதலையும் மேற்கொண்டார். கம்பருடைய இராமாயணம் இவருக்கு மிகுந்த இன்பத்தை உண்டாக்கியது. அதனிடத்திலே மிகுதியாக ஈடுபட்டார். கம்பராமாயணச் சொற்பொழிவு கள் பல நிகழ்த்தினர். திருமயிலையில் தாம் கட்டிய இல்லத்திற்குக், "கம்பர் விலாசம்" என்று பெயரிட்டார். கம்பர் விலாசம் என்னும் இவருடைய இல்லப்பெயர் எங்கும் புகழ் பெற்றதாயிற்று.

சங்க நூல்கள்

சங்க நூற்பயிற்சி மிக்கவரான நாராயணசாமி ஐயரி டத்திலே கல்வி பயின்றமையின் இவருக்குஞ் சங்கநூற் பயிற்சியில் திறமும் அவாவும் மிகுதியாக இருந்தன. சங்க நூற் செய்யுட்கள் பலவற்றைப் பாராமல் ஒப்புவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். சங்ககாலத்து அரசர் புலவர் வரலாறுகளைச் சிறுவர் முதல் யாவரும் உணர்ந்துகொள்ள

வேண்டும் என்று விரும்பினர். அவ் வரலாறுகளைச் சிறு உரைநடை நூல்களாக எழுதிப் பரவச் செய்தார். நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய நூல்களை உரைகள், குறிப்புரைகள் முதலியவைகளுடன் வெளியிட்டார். எட்டுத்தொகையுள் ஒன்றான அகநானூற்றைப் பல சுவடிகளைக்கொண்டு ஆராய்ந்து பதிப்பித்துத் தமிழ் மக்கட்கு உதவினர். தாம் தகுந்த தமிழாராய்ச்சி அமையப்பெற்றவராக இருந்தும் அகநானூற்றின் பெருமையைக் கருதி அதனை முகவை ரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார் முதலிய அறிஞர்களுடைய மேற்பார்வையில் வெளியிட்டார்.

இறுதி

அகநானூற்றின் முதற்பதிப்பு முற்றுஞ் செலவானதும் இரண்டாம் பதிப்பைச் சிறந்த முறையில் வெளியிட எண்ணினர். நூல் முழுதிற்கும் உரை, ஆராய்ச்சிக் குறிப்பு, பொருட்குறிப்பு முதலியன எழுதிமுடித்தார். ஆயினும் இரண்டாம் பதிப்பை உரையுடன் வெளியிட்டுப் பார்க்கும் பேறு இவருக்குக் கிடைக்கவில்லை. இவரைப் பல ஆண்டுகளாக வருத்திநின்ற இருமல்நோய் மிகுதிப்பட்டது. தமது ஐம்பத்திரண்டாம் அகவையில் 1935-ஆம் ஆண்டு சூன் திங்கள் இருபத்துநான்காம் நாள் இவ்வுலகவாழ்வைத் துறந்து வைகுந்தஞ் சென்றார். இவர் நல்லொழுக்கமும் நற்குணமும் அமையப்பெற்றவர், உயர்குணங்கள் பல இவரிடம் குடிகொண்டிருந்தன. எத்தகைய இடையூறுகள் நேரினும் தாம் எடுத்துக்கொண்ட செயலை இவர் முடித்தே தீருவார். தமிழறிஞர்களிடத்திலும் தமிழ்மொழியிடத்திலும் இவருக்குப் பேரன்பு மிகுதியாக அமைந்திருந்தது. வடவேங்கடமலையில் எழுந்தருளிய வேங்கடேசப் பெருமாள் மீது ஆராக்காதல்கொண்டு விளங்கினர்.

இவர் இயற்றிய நூல்கள்

1. கதைக்கொத்து ஆறுபகுதி
2. தங்கக்கிளி
3. பொன்னாடு
4. சண்பகமொட்டு
5. உத்தம சேவகன்
6. மாம்பழ மங்கை
7. தங்கமோதிரம்
8. மயில்நர்த்தனம்
9. இராச வைத்தியன்
10. செங்கை வளவன்
11. சங்கச் சிந்தாமணி
12. சீலசம்பன்னன்
13. மல்லிகா
14. தமிழ் இலக்கணம் 3 பகுதிகள்
15. கதாமணி மகுடம்
16. தெனாலிராமன்
17. ஐவன்கோ
18. அன்புவல்லி

பதிப்பித்து வெளியிட்ட நூல்கள்

1. அகநானூறு குறிப்புரை
2. நாலடியார் பதுமனார் உரை
3. நான்மணிக்கடிகை பழையவுரை

ரு. உமாமகேசுவரன் பிள்ளை

தோற்றமுங் கல்வியும்

செந்தமிழ்ப் புரவலர் இராவ் சாகிப் த. வே. உமாமகேசுவரன் பிள்ளை சோழவள நாட்டிலே தஞ்சையிலே பிறந்தார். இவருடைய குலம் அகமுடைய வேளாளர் குலம். தந்தையார் பெயர் வேம்பப்பிள்ளை. அவர் தஞ்சைவள நாட்டிலே தாசில்தாராக வேலைபார்த்துக்கொண்டிருந்தவர். அவருடைய அருங்குணங்களை மக்கள் இந்நாளினும் பாராட்டிப் பேசுவார்கள். இந்த வேம்பப் பிள்ளை உமாமகேசுவரனுடைய இளம்பருவத்திலேயே காலமானார். பிறகு உமாமகேசுவரனார் தம் சிறிய தாயார், அவருடைய கணவன் ஆகியவர்களுடைய ஆதரவிலே வளர்ந்தார். கல்வியைத் தளராத ஊக்கத்துடன் கற்றார். தஞ்சையில் அப்போதிருந்த செயின்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வி பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

வழக்கறிஞர்

பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு சிலகாலம் மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் அலுவல் பார்த்தார். பிறகு சட்டக்கல்லூரியிற் பயின்று பி. எல். பட்டம் பெற்றுத் தஞ்சையில் வழக்கறிஞராக அமர்ந்தார்.

முப்பத்திரண்டு ஆண்டுகள் வரை வழக்கறிஞராக வேலை பார்த்தார். இவர் பொய்வழக்குகளை ஏற்றுக் கொண்டு வழக்காடார். உண்மை யென்று உணர்ந்த வழக்குகளை மட்டும் ஏற்று வாதிப்பார். அந்நாளில் நீதித் தலைவர்கள், பொதுமக்கள், கட்சிக்காரர்கள் முதலிய எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார்.

பொதுநலத்தொண்டு

உமாமகேசுவரனுடைய தகுதியை அறிந்த அரசாங்கத்தார் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவராக இவரை

ஏற்படுத்தினார்கள். பதினைந்தாண்டுகள் வரை இப் பதவியில் அமர்ந்து மக்கட்குப் பலவகையான நன்மைகளைச் செய்தார். திருவையாற்று அரசர் கல்லூரியில் தனித் தமிழ்ப் புலவர் வகுப்புக்கள் ஏற்படுவதற்கும், தமிழ் மாணவர்கள் பலர் சேர்ந்து படிப்பதற்கும் இவர் செய்த முயற்சிகளே காரணமாயின.

கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவியக்கத்திற் சேர்ந்து மக்கட்குப் பெரும் பணி புரிந்தார். தஞ்சை திராவிட பாங்கு, நில அடமான பாங்கு, கூட்டுறவுப் பதிப்பகம் முதலியன இவருடைய முயற்சியால் தோன்றியனவாகும்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

சோழவள நாட்டிலே தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்று இவருடைய இளவல் இராதாகிருட்டிண பிள்ளை தஞ்சை கருந்திட்டைக் குடியில் "கரந்தைத்தமிழ்ச் சங்கம்" என்னும் பெயரோடு சங்கம் ஒன்றை நிறுவித் தண்டமிழ்த் தொண்டு செய்யத் தொடங்கினார். இத் தொண்டு சீரியதென்பதை யறிந்த இவர் அத் தொண்டில் பங்கு கொண்டு உழைக்கத் தொடங்கினார். உடல் பொருள் ஆவி ஆகியவைகளை அச்சங்கத்திற்கே உரிமையாக்கி உழைக்கத் தொடங்கினார். முப்பத்தைந்தாவது அகவையிலேயே வாழ்க்கைத் துணைவியை இழந்த இவர் மீண்டும் மறுமணஞ் செய்து கொள்ளாது தம் வாணாளைச் செந்தமிழ்ப் பணிக்கே உரிமையாக்கினார். கனவிலும் நனவிலும் சங்கத்தொண்டே அவருடையதாயிற்று. "கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்றால் உமாமகேசுவரன் பிள்ளை." "உமாமகேசுவரன் பிள்ளை என்றால் கரந்தைத் தமிழ்ச் சங்கம்." என்று சொல்லும் அளவிற்குத் தாம் சங்கத்தோடு ஒன்று பட்டுச் சங்கத்தைத்

தம்மோடு ஒன்று படுத்திவிட்டார். தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, புலவர் பள்ளி, பதிப்பகம், பத்திரிகை முதலிய எல்லாவற்றையும் நிறுவினார். புலவர் கல்லூரியில் எளிய மாணவர்கள் உணவு உறையுள் முதலியவைகளைப் பெற்றுக் கல்வி கற்றற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தமைத்தார். சங்கம் போதிய பொருளாதாரம் பெறாது என்றும் தளர்ந்த நிலையிலேயே தொண்டு செய்தது. சங்கத்திற்குப் பெரும் பொருள் தேடி மூலதனங்கள் அமைக்கவேண்டும் என்றும் சோழவள நாட்டுக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் புகழ் எண்டிசையிலும் மண்டவேண்டும் என்றும் சலியா உழைப்பை மேற்கொண்டார். ஆண்டுவிழாக்களில் பெரும் புலவர்களும் குறுநில மன்னர்களும் கலந்து கொண்டு சங்கத்தை வளமுறச் செயதற்கு ஆவன பேசியும் செய்தும் வந்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் புகழ் தமிழ் நாடு முழுவதும் பரவி மிளிர்ந்தது. சங்கத்தை எவ்வெவ் வகைகளில் சிறப்புடையதாக்கலாமென்று ஆராய்ந்தார்.

வடநாடு செல்லுதல்

வடநாட்டிற்குச் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களையும், மக்கள் முன்னேற்றம், மொழி முன்னேற்றம் முதலியவற்றைக் கருதி உழைத்துவரும் சங்கங்களையும் பார்த்துவர வேண்டுமென்று நீண்டகாலமாக எண்ணியிருந்தார். வடநாட்டுக் கலைக்கழகங்களில் நாட்டுமொழிகள் போற்றப்பெற்று வரும் வழிகளை நேரே தெரிந்து வர வேண்டுமென்பது அவருடைய நோக்கம். அதன்பொருட்டு வடநாடு நோக்கிப் புறப்பட்டார். சென்னையில் தங்கிச் சங்கப் புலவர் கல்லூரி, தொடக்கக் கல்லூரி முதலியவற்றின் உயர்வுக்காக வேண்டியவைகளை அங்குள்ள அதிகாரிகளிடங் கலந்து பேசினார். கல்க்த்தாவில் சில நாள்கள்

தங்கித் தண்டமிழ் அன்பர்களைக் கண்டுரையாடினார். தமிழ் விரிவுரைகள் சில நிகழ்த்தினார். பிறகு சாந்திநிகேதனத் திற்குச் சென்று கவியரசர் இரவீந்திரநாத தாகூரின் பணி களைப்பார்த்து மகிழ்ந்தார். பிறகு காசிக்குச் சென்று கங்கையில் நீராடினார். விசுவநாதக் கடவுளைப் போற்றினார். இந்து பல்கலைக் கழகத்தைக் கண்டார். பிறகு பிரயாகை சென்று நீராடி விட்டு மேலும் வடக்கு நோக்கிப் புறப்பட் டார்.

அயோத்தியில் இறுதி

அயோத்தியை அடைந்தார். சிறிது காய்ச்சல் நோய் கண்டது. அயோத்திக்கு அண்மையில் உள்ள பைசாபாத் என்னும் ஊரில் இறங்கினார். கணபதிப் பிள்ளை என்னும் அவர்தம் மைத்துனர் உமாமகேசுவரனாரோடு வழித் துணையாகச் சென்றிருந்தார். தமிழவேளுக்கு உடல்நலங் குறைந்ததைக்கண்டு அவர் உள்ளங் கலங்கினார். அங் கிருந்த மருத்துவசாலையொன்றுக்குக் கொண்டு போனார். சிலநாள் அங்கிருந்தார். மேற்கொண்டு செல்லவேண்டிய ஊர்களைப் பற்றியும் கணபதிப் பிள்ளையோடு உரையாடிக் கொண்டிருந்தார். 9-5-41 வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்குச் சிறிது மருந்தும் பாலும் உண்டார். 3-30 மணிக் குத் திடீரென்று கண்மூடினார். அவருடைய ஆருயிர் இறைவன் திருவடி நீழலையடைந்து விட்டது. உடனிருந்த அன்பர் சரயு ஆற்றின் கரையில் தமிழவேளின் உடலைத் தீக்கடவுளுக்கு இரையாக்கிவிட்டுத் திரும்பினார்.

தமிழ்நாட்டினர் துன்பம்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் வடநாடு சென்றவர் ஒரேயடியாக வடநாடு சென்று விட்டார் என்னுஞ் செய்தி தமிழ்நாடு முற்றும் பரவியது. தமிழன்பர்கள் கண்கலங்கி

வருந்தினர். பாவாணர்கள் இரங்கற்பாக்களின் மூலம் தம் துன்பத்தை வெளியிட்டனர். அவரைக் குறித்துக் கூறிய இரங்கலுரைகள் 'துன்பமாலை' என்னும் பெயரால் தனி நூலாக வெளிவந்துளது.

* "தம்பியார் உளங்குளிர்ந்து வித்திடத்தோன்
றியகரந்தைத் தமிழ்ச்சங் கப்பேர்ப்
பைம்பயிரை வளர்த்துலகம் பயன்பெறற்கே
முயன்றனையப் பயனை முற்றும்
இம்பரிடைத் தமிழ்மக்கள் எய்துதல்கண்
டின்புறு தேகி ஞயவ்
வும்பருல கின்பிதனில் சிறந்ததென
எங்ஙனம்நீ உளங்கொண் டாயோ?

---

௬. சிவானந்த யதீந்திரர்

பிறப்பு

சோழவளநாட்டிலே தஞ்சைமாவட்டத்திலே திருத்துறைப்பூண்டிச் சிறு பிரிவிலே சிறந்து விளங்குவது வேதாரணியமென வழங்கும் திருமறைக்காடாகும். இந்தத் திருமறைக்காட்டிற்கு மேல்பால் ஏழுகல் தொலைவில் உள்ள ஆயக்காரன்புலம் என்னுஞ் சிற்றூரிலே அகமுடையார் குலத்திலே ஏறக்குறைய இற்றைக்கு எழுபத்தைந் தாண்டுகட்கு முன்னர்ச் சிவானந்த யதீந்திரர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சாமித்தேவர்; தாயார் பெயர் மதுரம்மாள், இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர் கலியபெருமாள்.

கல்வி

"ஐயாண்டளவிலே மையேடு கைபிடி," என்னும் பெரியார் முதுமொழிக்கிணங்கக் கலியபெருமாள் ஐந்தாம்

* பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் பாட்டு.

அகவையில் பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். அக்காலத்திய பள்ளிகளிலே சிறு நூல்களில் இருந்து பெருநூல்கள்வரை ஒரு கணக்காயரே கற்பிப்பார். பள்ளி, திண்ணைப்பள்ளி யெனப் பெயர்பெறும். நிகண்டு, அருணசல புராணம் முதலியவைகளைக் கற்கும் மாணவன் பள்ளிக்கூட இறுதி வகுப்பு மாணவனுக எண்ணப்பெறுவான். இத்தகைய பள்ளி யொன்றிலே கலியபெருமாள் சில ஆண்டுகள் கல்விகற்ருர். பழம் பிறப்பின் நல்வினையினுல் இவருக்குக் கல்வி எளிதாக உள்ளத்திற் பதிந்தது. அகவை பன்னிரண்டு முடிவதற்குள்ளேயே எல்லாவற்றையும் நன்கு கற்றுக்கொண்டு பள்ளிப் படிப்புக்குப் புள்ளி வைத்துவிட்டார்.

துறவியாதல்

> "எல்லார்க்குங் காலன் துறவீவன்
> ஈயாமுன், நல்லோர் துறப்பர்"
> "நரைவரும்என் றெண்ணி நல்லறி வாளர்
> குழவி யிடத்தே துறந்தார்."

என்னும் பெரியார் அருண்மொழிகள் கலியபெருமாள் உள்ளத்தில் நலிவு செய்துகொண்டே இருந்தன. ஊரில் உள்ள மடங்கட்குச்சென்று அங்குள்ள பெரியோர்களைப் போற்றுதல் இறைவழிபாடு செய்தல் முதலியன கலிய பெருமாளுக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தன. அண்மையில் உள்ள ஒரு மடத்திற்கு ஒருநாள் சென்று அங்கிருந்த பெரியார் ஒருவரைப் பணிந்து போற்றினுர். அப்பெரியாருடைய பெயர் இராமையா அடிகள் என்பது. அப்பெரியார் இச் சிறுவருடைய பணிவு ஒழுக்கம் முதலியவைகளைப் பார்த்து மகிழ்ந்தார். இவ்வளவு இளம் பருவத்தில் இவ்வளவு அடக்க ஒடுக்கத்துடன் ஒரு சிறுவன் இருப்பது அருமை என்று வியந்தார். கலியபெருமாளைப் பார்த்துத், "தம்பி! இவ்விடமே என்னேடு தங்கியிருக்கிருயா?"

என்று உசாவினர். இத்தகைய சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கலியபெருமாள் உடனே அதற்கு இணங்கினார். அப் பெரியாரிடம் சோணசைலமாலை, பட்டினத்தார் பாடல், கீதாசாரத்தாலாட்டு, கட்டளை, மகாராசா துறவு என்னும் பல நூல்களைப் படித்துணர்ந்தார்.

மேலும் அதிகமாகச் சமய நூல்களைக் கற்க விரும்பிய கலியபெருமாள், இராமைய அடிகள் என்னும் அப் பெரியாருடைய உடன்பாடுபெற்றுக்கொண்டு பாண்டிமண்டலத்திலே சிறந்து விளங்கும் கோயிலூர் என்னும் சிவப்பதியை அடைந்தார். அங்கு வேதாந்தமடம் ஒன்று சிறந்து விளங்குகின்றது. அந்த மடத்தில் அந் நாளில் வீரசேகர ஞான தேசிகர் என்னுப் பெரியார் மடாலயத் தலைவராகவும் ஞானசிரியராகவும் எழுந்தருளியிருந்தார். கலியபெருமாள் அப் பெரியாரைக் கண்டு போற்றி அம் மடத்தில் சில ஆண்டுகள் தங்கிக் கைவல்லியம் ஞானவாசிட்டம் முதலிய அறிவு நூல்களைக் கற்றுணர்ந்தார். பிறகு ஞான தேசிகர் இவருடைய பக்குவங்கண்டு கல்லாடை யீந்து துறவு நிலையை அருளித் தீக்கையும் வழங்கிச் சிவானந்தர் என்று தீக்கைப் பெயருங்கொடுத்தார்.

காசிக்குச் செல்லுதல்

பிறகு சிவானந்தர் காசிமாநகரையடைந்து வடமொழி நூல்களைக் கற்றுணர விரும்பினர். தம்முடைய ஞானசிரியரின் உடன்பாடு பெற்றுக்கொண்டு புறப்பட்டுக் காசியை அடைந்தார். அங்குப் பத்தாண்டுகள் வரையில் தங்கி வடமொழியில் உள்ள வேதாந்தம் தருக்கம் இலக்கணம் முதலிய எல்லா நூல்களையும் ஐயந்திரிபற நன்கு கற்றுத் தேறினர்.

நூல்கள் இயற்றல்

காசியில் வடமொழி இலக்கணம், இலக்கியம், தருக்கம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை, சாங்கியம், யோகம் முதலிய எல்லா நூல்களையும் நன்குணர்ந்த இவர், அவ்விடமே தங்கித் துறவிகட்கு வேதாந்த நூல்களை ஓதி வைத்துக்கொண்டு தங்கியிருந்தார். இச் சமயத்தில் ஆசிரியராகிய வீரசேகரஞானதேசிகர் வீடுபேற்றையடைந்தார். இச் செய்தியைக்கேட்ட சிவானந்தர் தம் ஆசிரியரின் திருவுடல் சமாதி வைக்கப்பெற்ற திருக்களரையடைந்து சிவலிங்க ரூபமாக எழுந்தருளியிருக்கும் ஆசிரியரைப் போற்றிப் பரவினர். கோவிலூர் நான்மணிமாலை, திருக்களராண்டவர் புராணம், புராண உரைநடை முதலிய நூல்களை இயற்றி ஆசிரியர் திருவடிகளில் வைத்து வணங்கினர்.

வேத மொழிபெயர்ப்பு

பிறகு சிவானந்தர் பல இடங்களினுஞ் சுற்றிக்கொண்டு சென்னைமாநகரை அடைந்தார், அப்பொழுது அங்கு த. ப. ராமசாமிப்பிள்ளை யென்னுஞ் செல்வர் ஒருவர் வள்ளலாகவும் நல்லறிவாளராகவும் விளங்கியிருந்தார். முக்தாநந்த அடிகள் என்னும் பெரியார் ஒருவரால் மேற்படி இராசாமிப் பிள்ளை என்பவருக்கும் சிவானந்தருக்கும் அறிமுகம் உண்டாயிற்று. "வேதத்தைத் தமிழிலே பெயர்த்துத் தமிழ் நாட்டில் விளங்குமாறு செய்யலாமா? அந்தணர் அம்மறையின் ஒலிதானும் நஞ்செவிகளில் கேட்கக் கூடாது என்கின்றனரே, அடிகள் மறையைத் தமிழில் மொழிபெயர்த்தருள்வீர்களா?" என்று இராமசாமிப் பிள்ளை இவரைப் பார்த்து உசாவினர். சிவானந்தர், "அவ்வாறே மொழி பெயர்த்து வெளியிடலாமென்றும், அதனால் தவறொன்றும் இல்லை" யென்றுஞ் சாற்றினர்.

உடனே வேத மொழிபெயர்ப்பு வேலை தொடங்கப் பட்டது. இராமசாமிப் பிள்ளை மொழிபெயர்ப்பளராகிய சிவானந்த அடிகளார்க்கு இருப்பிடம், உணவு வசதி, வேண்டிய புத்தகங்கள் முதலியன அமைத்துக்கொடுத்தார். வட மொழி வேதங்களையும், மற்றும் வேதாங்கங்களையும், மற்றும் பல நிருத்தம், நிகண்டு, அகராதி முதலிய நூல்களை யும் ஆயிரக்கணக்கான ரூபாய்கட்கு வாங்கிக்கொடுத்தார்.

சிவானந்தர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் சாம வேதம் முழுவதையும் தமிழில் இனிய நடையில், பதவுரை கருத்துரை, குறிப்புரை ஆகியவைகளுடன் மொழிபெயர்த் தார். பிறகு எசுர் வேதத்தையும் மொழிபெயர்த்து முடித் தார். இவ் வேத மொழிபெயர்ப்புக்களை த. ப. இராம சாமிப்பிள்ளை உடனுக்குடன் அச்சிற் பதிப்பித்து வெளிப் படுத்தினர்.

இறுதி

வேத மொழிப்பெயர்ப்போடு வேறு பல நூல்களையும் இயற்றித் தமிழ்த்தொண்டு செய்துகொண்டிருந்த இவர் தாரண ஆண்டு ஐப்பசித் திங்கள் பதினைந்தாம் நாள் பரணி விண்மீனில் வீடுபேற்றையடைந்தார்.

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. கோயிலூர் நான்மணிமாலை
2. வீரசேகரபுராணம் (தமிழ்ச்செய்யுள்)
3. வச்சிரசூசிகை யுபநிடதம் (மொழிபெயர்ப்பு)
4. சாமவேத மொழிபெயர்ப்பு
5. எசுர்வேத மொழிபெயர்ப்பு
6. இருக்குவேத ருத்திரி
7. சாமவேத ருத்திரி
8. சங்கர திக்குவிசயம் (உரை நடை)
9. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

10. தாயுமானவர் நன்னிலைத் தீர்ப்பு
11. சைவத் தெளிவு
12. அத்வைதத் தீர்ப்பு
13. சிவஞானபோத சாரம்
14. திருவொற்றியூர் மான்மியம்
15. கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு
16. வேலூர் தோபா சுவாமிகள் வரலாறு
17. திருமண விளக்கம்
18. இருட்டிஞேபனிடதம்

முதலியன.

எ. கன்னைய நாயுடு

தோற்றம்

தொண்டைவளநாட்டிலே உள்ள சென்னை மாநகரில் 1884-ஆம் ஆண்டு (சுபானு ஆண்டு மாசித்திங்கள் இருபத்தொன்பதாம் நாள்) ஆ. வீ. கன்னையநாயுடு தோன்றினார். தந்தையார் பெயர் வீராச்சாமிநாயுடு. தாயார் பெயர் மங்கையம்மாள்.

தந்தையார்

தந்தையார் வீராச்சாமிநாயுடு ஆரணியைச்சேர்ந்தவர். நாயுடு வகுப்பில் பலிச குலத்தைச் சேர்ந்தவர். இவர் வாணிபத்தின் பொருட்டுச் சென்னைமாநகருக்கு 1882-ஆம் ஆண்டில் குடியேறினார்.

கல்வி கற்றல்

கன்னையர் கல்விகற்கத் தகுந்த பருவத்தையடைந்ததும் பெற்றோர்கள் இவரைப் பள்ளிக்கு அனுப்பினர். இவர் கல்வியை மிகுந்த விருப்பத்தோடும் ஊக்கத்தோடும் கற்கலானார். 1899-ஆம் ஆண்டில் அக் காலத்து லோயர்

செகண்டரி படிப்பிலும், 1911-ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளி ஆசிரியர் உயர்தரக்கல்வியிலும் தேர்ச்சி பெற்றார். பிறகு எஸ். எஸ். எல். சி. வரை ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டார். தாய்மொழியாகிய தெலுங்கையும் ஒருவாறு கற்றுக்கொண்டார். தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களைக் கா. ர. கோவிந்தராச முதலியார், சூளை வேலுமுதலியார் முதலியவர்களிடஞ் சிறிது பயின்றார். இவர் ஆசிரியரிடம் பாடங்கேட்டுக் கற்றுணர்ந்த இலக்கண இலக்கிய நூல்கள் மிகச் சிலவேயாம். பெரும்பாலும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் சங்க நூல்களையும் தாமாகவே நன்கு கற்று ஆராய்ந்து அவைகளில் தெளிந்த அறிவைப்பெற்றார். மேலும் தம்முடைய வைணவ சமயத்திற்குரிய நூல்களையும் நன்கு ஆராய்ந்து அவைகளினுந் தெளிந்த புலமை பெற்றார்.

மணமும் மக்கட்பேறும்

இவர் 1904-ஆம் ஆண்டில் கோதை என்னும் மாதைக் கடிமணம் புரிந்து ஆண்மக்கள் நால்வரையும் பெண்மக்கள் அறுவரையும் பெற்றார். இவர் தம்முடைய முன்னோர்களைப்போல் தம் குலத்திற்குரிய தொழிலைச் சிறிதுகாலஞ் செய்தார். பிறகு வாணிபத்தில் வெறுப்புக்கொண்டு அத்தொழில் செய்வதை நிறுத்தினர்.

தமிழாசிரியர்

இவருடைய நோக்கம் தமிழ்ப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்துடையதாக இருந்தது. முதன் முதலில் சூளை இந்து யூனியன் கமிட்டி செகண்டரி பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். அதன்பிறகு 1912-ஆம் ஆண்டில் பிரம்பூரில் இருந்த ஆங்கிலோ வெர்னகுலர் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்தார். அப்பள்ளியில் எட்டாண்டு

கள் பணிபுரிந்தார். அதன்பின் 1919-ஆம் ஆண்டில் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். அப் பள்ளியில் இருபத்திரண்டு ஆண்டுகள் இடையறாதுழைத்து அரும்பணி புரிந்தார். 1941-ஆம் ஆண்டில் வேலையில் இருந்து ஒய்வுபெற்றார்.

சொல்லாற்றல்

இவருக்குச் சொல்லாற்றல் நன்றாக அமைந்திருந்தது. இவருடைய போதனுமுறையை மாணவர்கள் பெரிதும் விரும்பினர். பள்ளிக்கூடத்தில் கல்விகற்ற மாணவர்களை யன்றித் தனிப்பட்ட முறையிலும் பலர் வீட்டிலே கல்வி கற்றார்கள். அவ்வாறு கற்ற மாணவர்கள் பலரும் நன்னிலையை எய்தினர். அத்தகையாருள் திரு. ரா. நடேச நாயகர் என்பவர் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்திருக்கிறார்.

தொழிலாளர் சங்கம்

தம் மைத்துனர் ஜி. செல்வபதி செட்டியார் ஏற்படுத்திய வேங்கடேச குணாம்ருத வர்ஷணி சபையில் சமய சம்பந்தமான சொற்பொழிவுகளாற்றினார். இவர் 1917-ஆம் ஆண்டுமுதல் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரோடு நெருங்கிய தொடர்புகொள்வதற்கும் இச்சபையே காரணமாக இருந்தது. சபைக்கு வருந் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை மிகுதிப்பட்டுக்கொண்டே வந்தது. பிறகு இச்சபையே தொழிலாளர் சங்கமாக உருமாறியது. இந்தியாவிலேயே முதன்முதலாக ஏற்பட்ட தொழிலாளர் சங்கம் இதுவேயாகும். பொதுமறையாகிய திருக்குறளைத் தொழிலாளர்களிடையே பரப்புவதற்குத் திருக்குறள் வகுப்பைச் சிறிது காலம் நடத்தினார். இவர் சொற்பொழிவாற்றும் முறையும் செயலாற்றுந்திறனும் நன்கு உணர்ந்த

வராக இருந்தபடியினால் தொழிலாளர் கூட்டம் இவரைப் பெரிதும் விரும்பியது.

சமய வெறுப்பு அற்றவர்

இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராயினும் பிற சமயத்தினை இழித்துக்கூறும் புன்மையுடையவரல்லர். மற்றைச் சமய நூல்களையும் விரும்பிக்கற்று அவைகளின் உண்மையையும் ஆய்ந்தறியும் இயல்புடையவர். எச் சமயத்தையும் ஒரே தன்மையுடன் நோக்கும் பரந்த மனப் பான்மை இவரிடம் குடிகொண்டிருந்தது. வெளிப்பகட் டான வாழ்க்கையை வெறுத்து எளிய வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார்.

தமிழ்த்தொண்டு

இவர் பள்ளி வேலையோடு தம் கடமை தீர்ந்ததென்று ஒய்ந்திருக்கவில்லை. தமிழ்த்தாய்க்குத் தம்மாலாந் தொண் டினைப் புரியவேண்டும் என்னும் தணியா வேட்கைகொண்டு நூல்கள் பலவற்றை எழுதினர். இவருடைய திருவேங் கடச் செய்யுட்கோவை என்னும் செய்யுள் நூல், நால் வகைப்பாக்களும் அவைகளின் இனங்களும், அகப்பொருள் துறைகளும் தன்கண் செறியப்பெற்றுக் கற்பவர்கட்குக் கழிபேருவகையளிப்பதாகச் சிறந்து விளங்குகின்றது.

கலிங்கத்துப்பரணியுரை

கலிங்கத்துப்பரணி என்னும் நூலுக்கு முதன்முத லாக உரையெழுதியவர் இவரே. இந்தக் கலிங்கத்துப் பரணியின் உரையருமையைக்கொண்டே இவருடைய அறி வாற்றலை நாம் ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். இந் நூலில் வரும் அணிகளையும் இலக்கணக் குறிப்புக்களையும், வரலாற்றின் கால ஆராய்ச்சியையும் ஆங்காங்கு நன்கு விளக்கியிருக்கின்றார். அல்லாமலும் தற்கால உரையாசி

ரியர்கள் எடுத்துக்காட்டாத ஒன்பதுவகைச் சுவைகளையும் புறப்பொருள் துறைகளையும் இவர் தமது உரையில் விளக்கியிருக்கிறார். கலிங்கத்துப்பரணி நூலாராய்ச்சி ஒன்றையும் எழுதியிருக்கிறார்.

இவரால் எழுதப்பட்ட நூல்கள்

1. கலிங்கத்துப்பரணி உரை
2. கலிங்கத்துப்பரணி நூலாராய்ச்சி
3. மேகவிடு தூது உரை
4. அழகர் பிள்ளைத்தமிழ் உரை
5. இளைஞர் சிற்றிலக்கணம்
6. தமிழைப் பிழையின்றி எழுதும் முறை
7. சங்ககாலப்புலவர்கள் சரிதை
8. மணிமேகலை சரிதை
9. சீவகன் சரிதை
10. அரிச்சந்திரன் சரிதை
11. கர்ணன் சரிதை
12. நந்தனார் சரிதை
13. மூன்று பாலபக்தர்கள் சரிதை
14. மூன்று பெண்மணிகள் சரிதை
15. நீதிக் கதைக்கொத்து
16. செய்யுட்கொத்து முதல்பாகம்
17. மாணவர் தமிழ் வாசகங்கள்
18. திருவேங்கடச் செய்யுட்கோவை

இறுதி

இப் புலவருடைய இறுதி புதுமையான முறையில் முடிவுபெறுகிறது. தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தனிப் பெருந்தொண்டு செய்துகொண்டிருந்த இவர் 1945-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் முப்பத்தொன்றும் நாள், சென்னைக் குயப்பேட்டை படவேட்டம்மன் நகராண்மைக் கழகப்பள்ளியில் ‘ஆண்டாள் திருக்கலியாணம்’ என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்துவிட்டு, வழக்கம்

போல் உலாவுதற்கு மக்கள் காட்சிச்சாலை உள்ள தோட்டத்திற்குச் சென்றவர், இதுவரையிலும் திரும்பவில்லையாம். இவருடைய வருகையை உறவினர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்.

அ. சுவாமி ஞானப்பிரகாசர்

ஞானப்பிரகாசர்

தமிழ் நாட்டிலே கமலைஞானப்பிரகாசர், கச்சிஞானப் பிரகாசர், திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர் எனப் பல ஞானப்பிரகாசர்கள் இருந்தனர். அவர்களெல்லாரும் சைவ ஞானப்பிரகாசர்கள். இங்கு கூறப்பெறுபவர் கிறித்துவ ஞானப்பிரகாசர்.

தோற்றம்

ஈழவள நாட்டிலே யாழ்ப்பாண நகருக்கு வடக்கே யுள்ள மானிப்பாய் என்னுஞ் சிற்றூரிலே சைவ வேளாளர் குலத்திலே 1875-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் முப்பதாம் நாள் சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் இராசசிங்கம் சுவாமிநாதபிள்ளை. தாயார் பெயர் தங்கமுத்து அம்மையார்.

தந்தையார்

இராசசிங்கம் சுவாமிநாதபிள்ளை மானிப்பாயில் இருந்த தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக வேலைபார்த்துக் கொண்டிருந்தார். அவர் சைவ சமயத்தில் அழுந்திய பற்றுடையவர். இலக்கண இலக்கியங்களையுஞ் சிறிது கற்றுத் தேறியவர். பள்ளிக்கூடத்துக் கணக்காயராக இருந்த அவர் தம்மிடம் படித்த பிள்ளைகளுடைய படிப்பிலும் ஒழுக்கத்திலும் மிகுந்த கருத்துச் செலுத்தியவராய் மாண

வர்களின் முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். அவருடைய மனைவியாரும் கணவனுக்கேற்ற மனைவியாய் இல்லறத்தைச் சிறப்புடன் நடத்திக்கொண்டிருந்தார்.

தந்தையார் முடிவு

சுவாமி ஞானப்பிரகாசருக்கு இடப்பட்ட பிள்ளைப் பெயர் வைத்தியலிங்கம் என்பது. வைத்தியலிங்கம் சிறு குழந்தையாக இருந்தபோது தந்தையார் இராசசிங்கம் சுவாமிநாதபிள்ளை விண்ணுலகம் ஏகினர்.

தாயார் மறுமணம்

கணவனையிழந்த தங்கமுத்து அம்மையார் உள்ளம் அல்லலுற்றது. அவர்களுடைய குடும்பம் மிக எளிய நிலைமையை உடையது. மைந்தனை வளர்த்தற்கும் கல்விகற்பித்தற்கும் யாது செய்வதென்று அம்மையார் திண்டாடினர். ஆதரிக்கக்கூடிய தக்க உறவினர்களும் இல்லை. அந்நாளிலே யாழ்ப்பாணம் அச்சுவேலி என்னுஞ் சிற்றூரில் தம்பி முத்துப்பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கத்தோலிக்குச் சமயத்தைச் சேர்ந்தவர். சிறந்த அறிஞர். 'ஞானப்பிரகாச அச்சகம்' என்னும் பெயருடன் அச்சகம் ஒன்றை அமைத்து, 'சன்மார்க்கபோதினி' என்னுங் கிழமைத்தாளை வெளியிட்டுக்கொண்டிருந்தார். அவர் தங்கமுத்து அம்மையாரின் திக்கற்ற நிலைமையைக்கண்டு உள்ளம் இரங்கினர். அம்மையாரின் உடன்பாடு பெற்று அவரைக் கைம்மை மணஞ் செய்துகொண்டார்.

ஞானப்பிரகாசர்

அம்மையாரின் புதல்வராகிய வைத்தியலிங்கத்திற்குச் சமய முறைப்படி ஞானநீராட்டினர். ஞானப்பிரகாசம் என்று பெயரிட்டுத் தம் வளர்ப்புமகனுக ஏற்றுக்கொண்டார்.

கல்வி

வளர்ப்புமகனுகிய ஞானப்பிரகாசத்தின் கல்விப்பயிற்சியில் தம்பிமுத்து மிகுந்த கருத்துச் செலுத்தினுர். உரிய பருவத்தில் தொடக்கப்பள்ளியிற் சேர்த்தார். ஞானப்பிரகாசர் இயற்கையாகவே மதிநலமும் சுறுசுறுப்பும் அமையப்பெற்றவராக இருந்தபடியால் கல்வியைக் கருத்துடன் கற்ருர். ஆசிரியரிடம் பள்ளிக்கூடத்தில் படித்ததேயல்லாமல் வீட்டில் தம் சிறிய தந்தையாகிய தம்பிமுத்துப்பிள்ளையிடமும் சிறிய அறநூல்களைக் கற்றுணர்ந்தார். பள்ளிக்கூடத்து வகுப்புத் தேர்வுகளில் எல்லாம் முதன்மையாகத் தேறி எல்லோராலும் போற்றப் பெற்ருர். கல்வியை அரைகுறையாக நிறுத்திவிட விரும்பவில்லை. தொடர்ந்து கற்க விரும்பினுர். ஆங்கிலங் கற்க வேண்டும் என்னும் அவா இவருக்கு மிகுதியாக இருந்தது. அக்காலத்தில் அரசினரால் நடத்தப்பெற்ற ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் இல்லை. கிறித்தவ சங்கத்தினர் பல இடங்களில் ஆங்கிலக் கல்விச்சாலைகளை அமைத்து மக்களுக்கு ஆங்கிலங் கற்பித்தனர். வட்டுக்கோட்டையில் அத்தகைய ஆங்கிலக்கல்விச்சாலை ஒன்று இருந்தது. ஞானப்பிரகாசர் அந்தக் கல்விச்சாலையிற் சேர்ந்து கற்க விரும்பினுர். தம்பிமுத்துப்பிள்ளை அவ்வாறே சேர்ந்து கற்கச் செய்தார். அப் பள்ளியில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். பிறகு புனித பத்திரிசிரியார் கல்லூரியிற் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினுர். கல்லூரிக் கல்வியையும் அவர் நன்ருகக்கற்று யாவராலும் சிறப்பாகப் போற்றப் பட்டார்.

அலுவல்

அந்நாளில் இலங்கைப் புகைவண்டி நிலையத்தார் புகைவண்டி நிலையத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு தேர்வு

ஒன்று நடத்தினார்கள். கல்லூரிப்படிப்பை முடித்திருந்த ஞானப்பிரகாசர், அத்தேர்வில் எழுதி முதன்மையாளராக வெற்றிபெற்றார். இவருடைய நுண்ணறிவைப் பார்த்து அதிகாரிகள் பாராட்டினார்கள். கொழும்புக்கோட்டைப் புகைவண்டி நிலயத்துக்குத் தலைவராக அமர்த்தினார்கள். ஞானப்பிரகாசர் அவ் வேலையைப் பொறுப்புடனும் சிறப்புடனும் செய்தார்.

துறவியாதல்

ஞானப்பிரகாசருடைய உள்ளம் இல்லற வாழ்க்கையை விரும்பவில்லை. கிறித்தவத் துறவியாக இருக்க வேண்டும் என்றும் சமயத்தொண்டும் கலைத்தொண்டும் செய்யவேண்டும் என்றும் எண்ணினார். தமது வாணாள் முழுவதையும் பிறருக்கு உதவி செய்வதிலே கழிக்கவேண்டும் என்று உறுதிகொண்டார். தமது கருத்தைத் தம்முடைய வளர்ப்புத் தந்தையாகிய தம்பி முத்துப்பிள்ளையிடஞ் சாற்றினார். இதனைக்கேட்ட தம்பி முத்துப்பிள்ளை முன்னர் இணங்கவில்லை. பிறகு எல்லாம் பரமன் செயல் என்று தேறி உடன்பாடு கொடுத்தார். ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்தில் பரிசுத்த மார்ட்டீன் குருமடத்திற் சேர்ந்து மதபோதகராவதற்குப் பயிற்சி பெற்றார். சமயக் கல்வியைக் கற்றபின் 1901-ஆம் ஆண்டின் டிசம்பர்த்திங்களில் தமது இருபத்தாறுவது அகவையில் குருப்பட்டம் பெற்றார். அன்றுமுதல் அவருடைய பெயர் சுவாமி ஞானப்பிரகாசர் எனவும் ஞானப்பிரகாச அடிகள் எனவும் மக்களால் வழங்கப்படலாயிற்று.

சமயத்தொண்டு

ஊர்க்காவல்துறை என்பது யாழ்ப்பாணத்திலே ஓர் ஊர். அவ்வூர் மக்களிற் பெரும்பாலனவர்கள் கிறித்தவ

மதத்தைத் தழுவியவர்கள். அவ்வூரில் இருந்த குரு சிறந்த பண்புகள் அமையப்பெற்றவராக இருந்தார். அவர் முதுமை மிக்கவராக இருந்தமையின் அவர் தமது வேலையைத் தொடர்ந்து செய்யமுடியாதவராக இருந்தார். ஆகவே, ஞானப்பிரகாசர் அந்தக் குருவுக்கு உதவிக்குருவாக அனுப்பப்பட்டார். ஞானப்பிரகாசர் அந்தக் குருவுக்கு ஆகவேண்டிய உதவிகளைச் செய்துகொண்டு அவரோடு தங்கியிருந்தார். தமக்குக் கொடுக்கப்பட்ட சிறு தொகையைச் சிக்கனமாகச் செலவுசெய்தார். எஞ்சிய தொகையைக்கொண்டு எளிய மக்களுக்கு உதவிபுரிந்தார். எந்தச் சமயத்திலும் சிறிது நேரங்கூடச் சோம்பியிராமல் மக்களுக்குப் பணிசெய்வதிலும் நூல்களை ஆராய்ச்சி செய்வதிலும் தமது பொழுதைச் செலவிட்டார்,

யாழ்ப்பாணத்தில்

மேற்குறிப்பிட்டவாறு ஞானப்பிரகாசர் ஊர்க்காவல் துறையில் இருந்துகொண்டிருக்கும்போது, யாழ்ப்பாண அத்தியட்ச குருவால், யாழ்ப்பாண மேற்றிராசனக்கோவில் பங்குக் குருவுக்கு உதவியாக அனுப்பப்பட்டார். யாழ்ப்பாணத்திலேயும் ஞானப்பிரகாசர் தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றி அரும்பெருந்தொண்டு செய்தார். இளைஞர்களோடு கலந்து பழகி அவர்களை நன்னெறிப்படுத்தினர். யாழ்ப்பாணமக்களுக்கு ஞானப்பிரகாசர் செய்த உதவிகள் பல. பிறகு நல்லூர் முதலிய இடங்களிலும் அரிய தொண்டுகள் செய்தார்.

கல்வித்தொண்டு

அக்காலத்திய மக்கள், அதிலும் நாட்டுப்புற மக்கள், கல்வியின் அருமைபெருமைகளைச் சிறிதும் அறியாதவர்களாக இருந்தார்கள். ஞானப்பிரகாசர் மக்களுக்குக் கல்வி

யின் அருமைபெருமைகளைக் குறித்துப் பல சொற்பொழிவுகள் செய்தார். இவருடைய சொற்பொழிவுகளைக்கேட்ட மக்கள் கல்வியின் அருமைபெருமைகளை நன்கு அறிந்து கொண்டார்கள். மேலும் சிற்றூரில் வாழ்ந்த மக்களின் பொருட்டு ஆங்காங்குப் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். மிகு விரைவில் பெரும்பாலான மக்கள் கல்வி மணம் பெற்றவர்களானர்கள். கல்வியறிவு இல்லாத மக்களின் உள்ளத்தில் சமயக்கோட்பாடுகள் உரம்பெற்று நில்லா என்பதை ஞானப்பிரகாசர் உணர்ந்தே கல்வித் தொண்டில் கருத்தை மிகுதியாகச் செலுத்தினர்.

கோயில்

ஞானப்பிரகாசர் மானிப்பாயில் கோவில் ஒன்று கட்ட விரும்பினர். கோயில் கட்டும் முறையை நன்ருக அறிந்திருந்த சிற்பிகளிடம் கோயிலுக்குரிய படம் ஒன்று எழுதித் தருமாறு கேட்டார். அவர்களும் அவ்வாறே எழுதிக்கொடுத்தார்கள். பிறகு ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் பெரும்பொருள் திரட்டி ஞானப்பிரகாசர் அந்தக் கோயிலைக்கட்டி முடித்தார்.

தமிழாராய்ச்சி

ஞானப்பிரகாசருக்குத் தாய்மொழி தமிழ்மொழி யாதலின், தமிழ்மொழிமீது தணியாப் பெருங்காதல் கொண்டார். ஆங்கிலம் முதலிய பல்வேறு மொழிகளைப் பயின்ருலும் முழுக்கருத்துந் தமிழ் மொழியிடமே பதிந்திருந்தது. எச்சமயத்திலும் தமிழ்நூல்களைக் கற்றுக் கொண்டேயிருந்தார். முதல் தடவை பார்க்கும்போது விளங்காமலிருக்கும் ஒரு செய்திமறு முறைபார்க்கும் போது சிறிது விளக்கமாகும். மேலும் மேலும் அதனைப் பன்முறை பார்த்தாலோ பார்க்கப் பார்க்கப் பெருஞ்செய்தி

களில் இருந்து பல புதுச்செய்திகளும் கருத்துக்களும் வெளிப்படும். இதனையே அறிஞர் ஆராய்ச்சி என்பர். இவ்வாறு ஆராய்ச்சி செய்து நூல்களைப் பயில்வோர் அந்நூல்களில் பெரும்புலமை பெறுவதும் மற்றவர்கள் வியக்குமாறு புதுப்புதுப் பொருள்களைப் புகல்வதும் இயற்கையாகும். ஞானப்பிரகாசர் தாம் படித்த பல நூல்களையும் ஆராய்ச்சி முறையிலேயே ஆழ்ந்து கற்றார். இதனால் இவருடைய தமிழ்ப்புலமை வளம்பெற்றதாயிற்று. தமிழ்மொழிச் சொற்களோடு ஏனைய மொழிச் சொற்களை ஒப்புநோக்கிச் சிறந்த முறையிற் பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். இவர் தாம் கண்டுபிடித்த உண்மைகளைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்தினார். அறிந்தவர்கள் ஞானப்பிரகாசரின் ஆராய்ச்சி முறையைப் போற்றித் தக்கவாறு ஊக்கம் அளித்தனர்.

சொற்பிறப்பு ஒப்பியல் அகரவரிசை

சொல்லடிகள் மூலம் தமிழ்மொழிச் சொற்கள் வளர்ச்சி பெற்றுப் பிறமொழிச்சொற்களின் கருத்துக்களைப் பெறுகின்றன என்று ஆராய்ச்சி மூலம் உறுதிசெய்து முதன்முதலாக வெளிப்படுத்தியவர் ஞானப்பிரகாசரே யாவர். இவருடைய ஆராய்ச்சி தமிழ்மொழியின் தொன்மையையும் பெருமையையும் உலகெங்கும் பரப்புவதற்கு ஏதுவாயிற்று. ஞானப்பிரகாசர் தமது ஆராய்ச்சி நூலை அச்சிற்பதிப்பித்து வெளியிடுவதற்கு எண்ணினார். தமிழ் நாட்டின் உதவியை நாடித் தமிழ் நாட்டிற் சுற்றுப்பயணஞ் செய்தார். சென்னை, புதுச்சேரி, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் சென்றார். மதுரையில் செந்தமிழ்ப் பத்திராசிரியராக இருந்த நாராயண ஐயங்கார் தலைமையிலும், சிதம்பரத்தில் பெரும்பேராசானாக விளங்கிய

தண்டபாணி தீட்சிதர் தலைமையிலும் சொற்பொழிவுகள் செய்தார். ஆதீனத் தலைவர்களையும் பெருஞ்செல்வர்களை யும் பார்த்துப் பேசினார். திருவாவடுதுறையாதீனத் தலைவர், திருப்பனந்தாள் காசிமடத் தலைவர், இராமநாத புரம் அரசர் முதலியோர் தக்கவாறு நல்லுதவி செய்தார் கள். ஞானப்பிரகாசர் சொற்பிறப்பு ஒப்பியல் அகர வரிசையின் முதல் மடலின் ஆறு பகுதிகளையும் அச்சிட்டு முடித்தார். ஒரு பல்கலைக் கழகம் பெருமுயற்சி செய்து முடிக்கவேண்டிய வேலையை ஞானப்பிரகாசர் ஒருவரே செய்து முடித்தது வியக்கத்தக்க செயலாகும்.

இவர் இயற்றிய நூல்கள்

இவர் தாம் மேற்கொண்ட பெருநூல் ஒன்றோடு தமது தமிழ்ப்பணியை முடித்துக்கொண்டாரல்லர். வேறு பல நூல்களையும் எழுதினார்.

தமிழ்

1. தமிழரின் பூர்வசரித்திரமும் சமயமும்
2. யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி
3. போர்த்துகீசர் ஒல்லாந்தர்கால யாழ்ப்பாண சரிதை
4. தமிழ் அமைப்புற்ற வரலாறு
5. தருக்கம்
6. துறவி ஞானம்
7. திருச்சபைச் சரித்திரம்
8. தேவ ஆராதனை முறை
9. ஆண்டவர் சரித்திரம்
10. கிறித்துநாதர் சரித்திர ஆராய்ச்சி
11. கத்தோலிக்குத் திருச்சபையும் அதன் போதகங்களும்

ஆங்கிலம்

1. யாழ்ப்பாண அரசர்
2. பண்டைய இந்திய சரிதையும் ஆண்டு வரிசையும்
3. தமிழரின் சாதி உற்பத்தி

என்பன, சொற்பிறப்பு ஒப்பியல் ஆராய்ச்சியைத் தவிரப் பிற நூல்களாம்.

பன்மொழி அறிஞர்

ஞானப்பிரகாசருக்குப் பல மொழிகளினும் பயிற்சியுண்டு. ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கீஸ், டச்சு, செர்மன், இத்தாலி, பிரஞ்சு, தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்க்ருதம் முதலிய பதினெட்டு மொழிகளில் பேசவும் எழுதவும் திறமை வாய்ந்திருந்தார். தென்னாட்டு மொழிகள், வடநாட்டு மொழிகள், பிறநாட்டு மொழிகள் எல்லாம் சேர்ந்து ஏறக்குறைய எழுபது மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார் என்று தெரிகிறது.

பத்திரிகைத் தொண்டு

இவர் தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இலக்கியக் கட்டுரைகள் முதலியவற்றை, லோகோபகாரி, சத்திய நேசன், ஈழகேசரி, சத்தியவேதபாதுகாவலன், சர்வவியாபி முதலிய பல பத்திரிகைகளில் வெளியிட்டுப் பத்திரிகைத் தொண்டு செய்ததுடன், கத்தோலிக்குச் சமய மக்களுக்குச் சமயக்கொள்கைகளைப் போதிப்பதற்காகவும் அவர்களுடைய அறிவை வளர்ப்பதற்காகவும் குடும்ப வாசகம் என்னும் பத்திரிகையைத் தாம் ஆசிரியராக இருந்தும் நடத்தினர்.

குண நலன்கள்

இவர் பெரும்புலவராக விளங்கியிருந்தும் பெருமிதத்தை வெளிப்படுத்தாமல் அடக்கத்தை மேற்கொண்டிருந்தார். இவருடைய அடக்கத்தைக் கண்டவர்கள் மிகுந்த வியப்படைந்தனர். இவர் தாம் பெரியரென்று ஆணவங்கொண்டு தனித்திராமல் ஏழை எளியவர் பணக்காரர் முதலிய எல்லோரிடமும் ஒரே தன்மையாகப்

பழகித் தம்முடைய குணநலத்தைப் புலப்படுத்தினார். கையில் ஒரு பொருளை வைத்துக்கொண்டு இல்லையென்று இயம்பமாட்டார். கூடிய வரையில் தமது செலவைக் குறைத்துக்கொண்டு பிறருக்கு உதவி செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் பொன்மொழி ஒரு சமயத்திற்கு மட்டும் உரியதன்று. இம்மொழியை எல்லாச் சமயத்தினரும் பின் பற்றலாம். ஞானப்பிரகாசர் இப் பொன்மொழியைக் கடைப்பிடித்துப் பிறருக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகப் பற்றி யிருந்தார். இவருடைய புகழ், யாழ்ப்பாணத்தில் மட்டு மன்றி இந்தியா, மலேயா, ஐரோப்பா முதலிய வெளி நாடுகளினும் பரவியிருந்தது. ஒருமுறை இவர் செர் மனிக்குச் சென்றார். இவரது புலமைத் திறத்தைப் பாராட்டுவதற்காக இவருடைய உருவந்தாங்கிய தபால் தலைகளை அரசியலார் வெளியிட்டு ஞானப்பிரகாசரைப் பெருமைப்படுத்தினார்கள்.

இறுதி

வாணாள் முழுவதையுந் தமிழ்த் தொண்டிற்கும் சமயத் தொண்டிற்குமே செலவிட்ட இவர் தமது எழுபத் திரண்டாவது அகவையில் 1947-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாள் மண்ணுலக வாழ்வைத் துறந்தார்.

௯. கந்தசாமியார்

பிறப்பு

ஈண்டிய புகழ்சேர் பாண்டிமாநாட்டில் வத்திராயிருப்பு என்னும் பேரூர்க்கு அண்மையில் உள்ள கூமாப்பட்டி என்னுஞ் சிற்றூரிலே, சர்வசித்து ஆண்டு கார்த்திகைத்திங்கள் பதினாறும்நாள் ரா. கந்தசாமியார் பிறந்தார். தந்தையார் பெயர் இராமசாமித்தேவர். தாயார் பெயர் வேலம்மாள். தோன்றிய குலம் மறவர்குலம்.

கல்வி

கந்தசாமியார் இளம்பருவத்தில், ஐந்தாண்டளவில் உள்ளூரில் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டுச் சில ஆண்டுகள் கல்வி கற்றார். இவருடைய தந்தை கந்தசாமியார் ஐந்தாண்டுச் சிறுவராக இருக்கும்போதே காலமானார். ஆகவே கந்தசாமியார், பத்துப் பன்னிரண்டு ஆண்டுச் சிறுவராக இருக்கும்போதே குடும்பத்தொழிலில் ஈடுபட நேர்ந்தது.

மூக்குப்பொடி

இக்காலத்திலே ஏழாண்டு நிரம்பப்பெற்ற சிறுவர்கள் பலர் மறைமுகமாக மூக்குப்பொடி போட்டுக் கொள்ளுதலைக் காண்கிறோம். கந்தசாமியாரும் பன்னிரண்டு பதின்மூன்று ஆண்டுச் சிறுவராக இருக்கும்போதே மூக்குத்தூள் போடும் வழக்கத்தைப் பழகிவிட்டார். உடன் பிறந்தார்களோடு கந்தசாமியார் உழவுத்தொழிலை மேற்கொண்டார். வயலுக்கு நீர் பாய்ச்சும் பொருட்டு ஏற்றம் ஓட்டுதல் வேண்டும். கந்தசாமியார் இவ்வேலையை மிகுந்த விருப்பத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருநாள் மூக்குப்பொடி வாங்கும் பொருட்டுக் கந்தசாமியார் தம் பாட்டியாராகிய நாச்சியாரம்மாளிடம் தானியங்கேட்டார்.

அந்த அம்மையார் சிறிது சோளங்கொடுத்தார். அதனைக் கொண்டுபோய்க் கடையிலே போட்டுவிட்டுப் பொடி வாங்கினார். பொடி விரைவாகத் தீர்ந்துபோய்விட்டது. மேலே பொடி வாங்கவேண்டுமே என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் தமையனார் பழனிச் சாமித்தேவர் வயலுக்குத் தண்ணீர் இறைக்கக் கூப்பிட்டார். கந்தசாமியார் விரைவாகப் புறப்படவில்லை. காலந்தாழ்த்திக் கொண்டிருந்தார். தமையனார் கடிந்து பேசியதுடன் ஓர் அடியுங் கொடுத்துவிட்டார். கந்தசாமியார் மீண்டுந் தம்முடைய பாட்டியாரிடஞ்சென்று பொடி வாங்கவேண்டும் என்றார். பாட்டியாருக்குச் சினம் உண்டாகியது. "ஒரு நாளைக்கு எத்தனைமுறை பொடி வாங்குவது? இருக்கிற தானியங்களெல்லாம் உனக்குப் பொடி வாங்குவதற்கே தீர்ந்து போகும்போல் இருக்கிறதே," என்று வைது கொண்டே மீண்டுஞ் சிறிது சோளம் கொடுத்தார். தமையன் கடிந்து பேசியடித்ததும், பாட்டியார் வைததும் கந்தசாமியாருடைய உள்ளத்தை மாற்றிவிட்டன. உறவினர் யாவரிடத்தினும் அவருக்கு மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. உறவினரையும் குடும்பத்தையும் வெறுத்து வீட்டைவிட்டு வெளியேறிவிடுவதென்று முடிவுசெய்தார். எவ்விதமான முடிவுஞ் செய்துகொள்ளாமலும் எவருக்குஞ் சொல்லாமலும் வெளிப்பட்டு வழிநடந்தார். மதுரைக்கு அண்மையில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரையடைந்தார். அப்பொழுது இவருக்கு அகவை பதினாறு. வீட்டைவிட்டு வெளியேறிய காலம் 1903-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள்.

துறவியாகிக் கல்விகற்றல்

சோழவந்தானில் 'கிண்ணிமடம்' என்னும் பெயருடைய மடம் ஒன்று இருக்கிறது. அந்நாளில் அம்மடத்தில் சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார் ஒருவர் தங்கி

யிருந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சோதிடத்திலும் மிகுந்த புலமையுடையவர். துறவற வாழ்க்கையை மேற்கொண்டொழுகியவர். ஒருபொழுதே உண்ணும் வழக்கம் உடையவர். அரசஞ் சண்முகனார் முதலிய பலருக்குக் கல்விகற்பித்தவர். சோழவந்தானை யடைந்த கந்தசாமியார் அந்த மடத்திற்குச் சென்று சிவப்பிரகாச அடிகளாரின் ஆதரவில் தங்கினார். அங்கிருந்த துறவிகள் முதலியோர்களோடு கல்வி கற்கவேண்டும் என்று எண்ணினார்.

முதலியார்

அங்கு அப்பொழுது சுப்புமுதலியார் என்னும் பெய ருடைய முதலியார் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ் செல்வர். வண்மையில் சிறந்தவர். அம்முதலியார் கந்த சாமியாருடைய இளம்பருவத் தோற்றத்தையும் எளிய நிலைமையையுங் கண்டார். வரலாற்றைக் கேட்டார். கந்த சாமியார் தமக்குக் கல்வி கற்றலில் உள்ள விருப்பத்தையும் திண்ணிமடத்திலுள்ள அடிகளாரிடம் கல்விகற்க விரும்பு வதையுந் தெரியப்படுத்தினார். முதலியார் கந்தசாமியா ருடைய விருப்பத்தை நிறைவேற்ற எண்ணினார். இரண்டு புதிய வேட்டிகள் வாங்கிக்கொடுத்தார். தம்முடைய இல்லத்திலேயே சாப்பிட்டுக்கொண்டு அடிகளாரிடம் படிக்கலாம் என்றார். கந்தசாமியார் முதலியாருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி செலுத்தினார். முதலியார் வீட்டிற் சாப்பிட்டுக்கொண்டு சிவப்பிரகாச அடிகளாரிடம் சில சிற்றிலக்கியங்களையும் நன்னூலையும் பாடங்கேட்டார். அரசஞ் சண்முகனாருடைய நட்பும் வேறு சில துறவிகளுடைய பழக்கமும் கந்தசாமியாருக்கு ஏற்பட்டன.

தமையனார் வருகை

கந்தசாமியாருடைய உறவினர்கள் கந்தசாமியாரைப் பல இடங்களினுந் தேடினார்கள். இவரைப்பற்றிய செய்தி வெகுநாள் தெரியாமல் இருந்தது. பிறகு சோழவந்தான் கிண்ணிமடத்தில் இருத்தலை அறிந்தார்கள். கந்தசாமியாருடைய தமையனார் பழநிச்சாமித்தேவர் கந்தசாமியாரை ஊருக்கு அழைத்துக்கொண்டு போகும் பொருட்டுச் சோழவந்தானுக்கு வந்தார்.

மதுரைக்குச் செல்லுதல்

தமையனார் வந்திருத்தலைக் கந்தசாமியார் அறிந்தார். உடனே புறப்பட்டு மதுரைக்குப் போய்விடுவதென்று முடிவு செய்தார். புகைவண்டி நிலையத்தையடைந்து மதுரைக்குச் சீட்டு வாங்கிக்கொண்டு வண்டியிலேறினார். தமையனாரும் இவரைப் பின்தொடர்ந்து புகைவண்டியிலேறினார். மதுரையை அடைந்து இறங்கிய கந்தசாமியார் தமையனாருடைய கண்களுக்குத் தோன்றாமல் சந்து பொந்துகளில் நுழைந்து அகப்படாமலே போய்விட்டார்.

தமிழ்ச்சங்கத்தில் கல்விகற்றல்

பாண்டித்துரைத்தேவரால் தோற்றுவிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம் அறிஞர்களைத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது. தமிழ்ச்சங்கத்தில் மாணவர்கள் பலர் சேர்ந்து கல்விபயின்றனர். நாராயண ஐயங்கார் முதலிய நல்லாசிரியர்கள் மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைச் சீர்பெறக் கற்பித்தனர். ஆண்டுகள்தோறுந் தேர்வுகள் நடத்தித் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பட்டமும் பரிசும் வழங்கப்பெற்றன. மதுரையை அடைந்த கந்தசாமியார் தமிழ்ச்சங்கத்திற் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினார். 1907-ஆம் ஆண்டிற் புகுமுக வகுப்புத் தேர்வில் இரண்

டாவதாகத் தேர்ச்சியடைந்தார். பாலபண்டித வகுப்புத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்றுப் புதுக் கோட்டை மன்னரால் கொடுக்கப்பெற்ற மெடலைப்பெற்றார். பாண்டித்துரைத்தேவர் தமிழ்ச்சங்கத்திற்கு வரும்போது அவரிடம் அளவளாவி அவருடைய நன்மதிப்பையும் கந்தசாமியார் பெற்றார்.

ஆசிரியத் தொழில்

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். பாண்டித்துரைத்தேவர் கந்தசாமியா ரையே ஆசிரியராக இருத்தினார். தமிழ்ச்சங்க ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்பொழுது இவரிடம் பலபேர் கற்றுத் தேறினார்கள். காலஞ்சென்ற பூவராகன் பிள்ளை, தற்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித்துறையில் பணிபுரியும் திரு. புருஷோத்தம நாயுடு ஆகியோர் கந்தசாமியாரிடம் கற்றுத் தேர்ந்த மாணவர்களே. பிறகு மேலைச்சிவபுரியில் கணேசர் செந் தமிழ்க் கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றினார். அப்பொழுது பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலிய பல அறிஞர்கள் கந்தசாமியாருக்குப் பழக்கமாயினர்.

மண வெறுப்பு

இவர் மேலைச்சிவபுரியில் ஆசிரியராக இருக்கும்போது புதுக்கோட்டைப் பக்கத்தில் இருந்த மறவர்குலச் செல்வர் ஒருவர் தம்மகளை இவருக்கு மணஞ்செய்விக்க எண்ணினார். இவ்வாறு அவர் எண்ணங்கொண்டதற்குக் காரணம் கந்தசாமியாருடைய அறிவு மாட்சியையும் பெருமையை யும் நன்குணர்ந்ததே. ஆனால் கந்தசாமியார் தமக்கு மணஞ் செய்துகொள்ளும் நோக்கமில்லையென்று மறுத்து விட்டார்.

சோழவந்தானில் தமிழாசிரியர்

பிறகு சோழவந்தான் போர்டு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். கந்தசாமியாருடைய அறிவாற்றலுக்கு ஏற்ற வேலை அப் பள்ளியில் இல்லை. ஆயினும் மாணவர்கள் தமிழ்மொழியிடத்தில் பற்றுக்கொண்டு பயிலும் வகையில் இவர் எளிதாகவும் இனிதாகவும் தமிழ்ப் பாடங்களைக் கற்பித்தார். இதனால் மாணவர்கள் தமிழ்ச் சுவையை நன்குணர்ந்து களித்தனர்.

மீனாட்சி கல்லூரியில் வேலை

அரசர் அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்திலே மீனாட்சி கல்லூரியை அமைத்தார். அதற்கு உ. வே. சாமிநாதையர் தலைமைப் பேராசிரியராக அமர்ந்தார். அவரோடு பொன்னோதுவார், வித்துவான் வேங்கடராசுலு ரெட்டியார், வித்துவான் அருணாசல தேசிகர் முதலியோர் ஆசிரியர்களாக அமர்ந்திருந்தனர். உ. வே. சாமிநாதையர் கல்லூரியைவிட்டு நீங்கியவுடன் பொன்னோதுவார் தலைமைப் பேராசிரியரானார். வேங்கடராசுலு ரெட்டியார் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றபிறகு அவருக்குப் பதிலாகத் தக்க புலவர் ஒருவரை ஏற்படுத்தவேண்டிய வேலை ஏற்பட்டது. புலவர் வகுப்பிற்குப் பாடஞ் சொல்லத்தக்க அறிஞர்கள் அகப்படுவது அருமையாக இருந்தது. பொன்னோதுவார், சர்க்கரை இராமசாமிப் புலவர் ஆகியோருடைய முயற்சியினால் கந்தசாமியார் அந்த வேலையில் அமர்ந்தார். புலவர் வகுப்பிற்குத் தொல்காப்பியம் புறநானூறு திருக்குறள் முதலிய நூல்களைக் கற்பித்தார். மேலும் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பில் தொல்காப்பியம் சேனாவரையம் முதலிய இலக்கண நூல்களையும் கற்பித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

அரசர் அண்ணாமலைச் செட்டியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அமைத்தார். மீனாட்சி தமிழ்க் கல்லூரி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டது. புலவர் புகுமுக வகுப்பொன்று தனியாகச் சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது. கந்தசாமியார் அவ் வகுப்பின் பொறுப்பை யேற்றுக்கொண்டு ஓர் ஆண்டு திறம்பெற நடத்தினார். பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக அமர்ந்து தொடர்ந்தாற்போல் பல ஆண்டுகள் பணியாற்றினார். விபுலாநந்த அடிகள், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலிய பேராசிரியர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்த்துறையில் நன்றாகப் பணியாற்றினார். தொல்காப்பியம் யாப்பருங்கலம் முதலிய பெரிய தமிழ் இலக்கண நூல்களையும், அகநானூறு புறநானூறு முதலிய சங்க நூல்களையும், தேவாரம் முதலிய திருமுறைகளையும் நன்கு ஆராய்ந்து மாணவர்கட்கு நன்றாகக் கற்பித்தார். எத்தகைய தமிழ் நூல்களையும் நன்றாகக் கற்பிக்கக்கூடிய ஆற்றல் அமையப் பெற்றவர் என்று இவரைப் பலரும் ஒருமுகமாகப் போற்றினர்.

ஆழ்ந்தகன்ற கல்வி

இவர் ஆழ்ந்து அகன்ற கல்வியறிவு அமையப் பெற்றவர். கிண்ணிமடம் அடிகளாரிடத்தும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் கற்றதோடு அமையவில்லை. பல புலவர்களிடத்திலும் அரிய நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்திருந்தார். தஞ்சையில் இருந்த ஒரு புலவரிடம் தருக்க நூலைக் கற்றுணர்ந்தார். தாம் அரிதாகச் சேர்த்துவைத்திருந்த இருநூறு வெண்பொற்காசுகளை நன்கொடையாக வழங்கிச் சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரிடம் தணிகைப் புராணத்

தைப் பாடங்கேட்டார். திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளிடம் பிரபுலிங்க லீலையைக் கற்ருர். அந் நூலைக் கற்கும்போது அடிகளார் இவருடைய உணவிற்காக வண்டிப்பாளையத்தில் செல்வராயிருந்த ஒரு செங்குந்த முதலியாரிடம் நாள்தோறும் மூன்றணுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். கந்தசாமியார் அந்த மூன்றணுவுக்குங் கோயிற் சோறு வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

தொல்காப்பிய இலக்கண நூலை நன்ருக ஆராய்ச்சி செய்து கற்றிருந்தார். எழுத்ததிகாரத்திற்கு நச்சினர்க்கினியர் உரையையும், சொல்லதிகாரத்திற்குச் சேனவரையர் உரையையும் நன்கு கற்றுத் திருத்தஞ் செய்து வைத்திருந்தார். தொல்காப்பியச் சேனவரையர் உரை இவருடைய திருத்தத்தோடு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களினும், புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களினும், திருக்கோவையார், பெரியபுராணம் முதலிய திருமுறைகளினும் நல்ல பழக்கம் உடையவர். தணிகைப் புராணத்தைப் படிப்பதிலும் அந்நூற் செய்யுளின் சுவையைப் பிறரிடங் கூறுவதிலும் இவருக்குத் தனி இன்பம் உண்டு. இந் நூலுக்குப் பல ஆண்டுகள் முயற்சி செய்து உரை யெழுதி வந்தார். சமயம் நேரும் போது அவ் வுரையைத் தக்க புலவர்களிடம் படித்துக்காட்டி அவர்களுடைய கருத்தை அறிந்து வந்தார்.

பாடஞ் சொல்லுதல்

பாடஞ் சொல்லுங்கால் இடையில் மாணவர்கள் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்டுத் தடை செய்யாமல் இருப்பார்

களாயின் தங்கு தடையின்றி ஆற்றொழுக்கைப் போல் தொடர்ந்து சொல்லிக்கொண்டே செல்வார். வேண்டிய இடங்களில் மேற்கோள் உரைப்பார். விளக்க வேண்டிய இடங்களில் நன்றாக விளக்குவார். மேற்கோள் கூறும் போது கையில் உள்ள பொருளை எடுத்துச் செலவழிப்பது போல் நன்றாகச் சொல்லுவார். ஆத்திசூடி முதல் பெருங் காப்பியம் வரையில் எல்லா நூல்களையும் நினைவில் வைத் திருந்து கையாள்வார். உரைகளில் மறுப்புக்களை எடுத்துக் கூறும் போது இவர் மறுப்புரை யாசிரியர் பக்கத்தில் சேர்ந்துகொண்டு, "இவர் மண்டையில் அடித்து வீழ்த்தி ஞர்" என்று கூறுவார் தமிழ் நூல்களில் வரும், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய சமயக் கொள்கை களை நன்றாக விளக்கிச் சொல்லுவார். பழைய தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களையும், தாம் பிறர்பால் கேட் டறிந்த செய்திகளையும் சொல்ல வேண்டிய இடத்திற் சொல்லுவார். மாணவர்கள் கேள்வி கேட்டுத் தம்முடைய புலமையை ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று எண்ணிவிடுவா ராஞல் பிறகு அவரிடம் இருந்து மாணவர்கள் மிகுந்த பயனை எதிர்பார்க்க முடியாது. அவருக்குள்ள ஊக்கம் தடைப்பட்டு நின்றுவிடும். தாம் சொல்வதில் ஐயங்கொள் பவர்களைப் பார்த்துக், "குடலைப் பிடுங்கிக் காட்டினாலும் வாழைமட்டை என்று கூறுபவர்களிடம் நாம் செய்யக் கூடியது யாது?" என்று சொல்லி இரக்கங் கொள்வார்.

குண நலன்கள்

தம்மைக் காணவருபவர்களிடம் இன்முகத்தோடும் புன்னகையோடும் உரையாடுவார். பழைய நண்பர்களைப் பார்ப்பதினும் தமக்குத் தெரிந்தவர்களுடைய நலன்களை உசாவியறிவதினும் மிகுந்த விருப்பம் உடையவர். தாம் பிறந்த பாண்டி நாட்டின் பெருமையையும் பழஞ்சிறப்பை

யும் பாராட்டிப் பேசுவார். தம்மினும் பெரியோரிடம் மிகப் பணிவாக நடந்து கொள்வார். தமக்கு உதவி செய்தவர்களை, "இவருக்கு என்னால் என்ன உதவி செய்யக்கூடும்? இந்நிலையில் எனக்கு உதவி புரிந்தாரே," என்று மற்றவர்களிடம் கூறுவார். இவருடைய உள்ளத்திலுள்ள மறைமுகமான செய்திகளை நெருங்கிய நண்பர்களால் கூட அறிந்து கொள்ள இயலாது. தாம் பிறந்த ஊர் குலம் முதலியவைகளை எவரிடமுங் கூறார். தம்முடைய உறவினர்களை இவர் மதித்துப் பாராட்டியதில்லை. உறவினரல்லாத மற்றையோர்களைப் பார்ப்பதைப் போன்றே உறவினரையும் பார்த்தார். உறவினர்கள் இவரிடம் இருந்து உதவியை எதிர்பார்த்தனர். துறவிக்கோலத்துடன் விளங்கும் தமது பொருள் அவர்கட்குப் பெருக்கத்தினையளியாமற் போவதன்றி, ஏதத்தினை அளிக்குமோ எனும் எண்ணத்தால் இவர் அவர்கட்கு உதவி செய்வதில்லை. தம்மிடம் அன்பு பூண்டொழுகிய மாணவர்களைத் தம் மக்களைப் போலவே கருதி அவர்க்கு ஆவன செய்யத் தாமே முற்படுவார். எவரையும் அளவுக்குமேல் புகழ்ந்து பேசமாட்டார். மிகுந்த பொறுமை யுடையவர். சிறியோர்களால் தமக்கு ஏதேனும் தொல்லை நேருமோ என்னும் அச்சம் இவருக்கு எப்பொழுதும் உண்டு.

பழம் புலவர்களைப் பாராட்டுதல்

பழம் புலவர்கள் எவரையும் இவர் குறைவாகப் பேசமாட்டார். கொள்கைபற்றி ஒருவரை இகழ்ந்துரைத்தலும் புகழ்ந்துரைத்தலும் இவரிடம் இல்லை. உரையாசிரியர்களில் சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பேராசிரியர் இவர்களைப் பாராட்டிப் பேசுவார். பிற்கால உரையாசிரியர்களில் சிவஞான முனிவர், திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர், விசாகப் பெருமாளையர் ஆகியவர்களைப்

புகழ்ந்து பேசுவார். தம்முடன் பழகி வந்த அரசஞ் சண்முகனாருடைய இலக்கணப் புலமையையும் அவர் திருக்குறளுக்கும் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கும் கூறும் நுட்பமான உரைகளையும் போற்றிப்பேசுவார். மேலும் அவர் மறைமலையடிகள், அம்பலவாணநாவலர் முதலிய புலவர்களோடு சொற்போர் புரிந்த திறமையையும் அடிக்கடி கூறுவார். சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயருடைய இலக்கியப் பேரறிவினை மிகுதியாகப் போற்றுவார். அவரை "நடமாடும் அகராதி" என்று பாண்டித்துரைத்தேவர் புகழ்வார் என்றும், தேவர் மதித்த புலவர்கள் மூவர். அவர்களில் இவர் ஒருவர் என்றுஞ்சொல்லுவார். மறைமலையடிகளாருடைய ஆராய்ச்சித்திறன், செய்யுளியற்றுந் திறன், உரைநடையெழுதுந்திறன், சொற்பெருக்காற்றுந் திறன் ஆகியவைகளை நன்கு புகழ்வார். மற்றும் பண்டித மணி, மு. கதிரேசச்செட்டியார், ரா. பி. சேதுப்பிள்ளை, ரா. இராகவ ஐயங்கார், விபுலாநந்த அடிகள் ஆகியோர்களையும் பாராட்டிப்பேசுவார். காலைக்கடன்களை முடித்தவுடன் நீர் உணவு அருந்துவார். மண்பானைச் சமையலையே பெரும்பாலும் விரும்புவார். மிகுந்த புளிப்பும் காரமுங் கூடா. இரவு உணவுக்குப்பின் பாலும் பழமுஞ் சாப்பிடுவார். பெரும்பாலும் நாள்தோறும் கோவிலுக்குச்சென்று கூத்தப்பிரானைப் போற்றுவார்.

கந்தசாமியார்

கந்தசாமியாரைப் புறக்கண்ணாற் பார்க்காதவர்கள் அகக்கண்ணாற் பார்க்குமாறு அவருடைய உருவ இயற்கையை இங்கு இயம்புவோம். இவர் மாநிறம் உடையவர். உடல் தகுந்த அளவாக அமைந்திருந்தது. அஃதாவது, பார்ப்பவர்கள் மெலிந்தவர் என்றோ தடித்தவர் என்றோ உரைக்கமுடியாது. முகம்பொலிவுடன் விளங்கியது. சிவக்

கண்மணி (உருத்திராக்கம்) ஒன்றைப் பட்டுக்கயிற்றில் கோத்து அணிந்திருப்பார். நெற்றியில் திருநீற்றினை யணிந்து சந்தனப்பொட்டு வைத்துக்கொள்வார். மடியில் திருநீற்றுப்பையும் பொடி டப்பியும் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும். இடையில் எட்டுமுழ வெள்ளை வேட்டியைக் கட்டிக்கொள்வார். பள்ளிக்குச் செல்லுங் கால் மூலைக்கச்சமாகக் கட்டிக்கொள்வார். நீண்ட சட்டை யும் தலைப்பாகையும் மேலாடையும் அணிந்துகொள்வார். பள்ளிக்கூட நேரமல்லாதபோது வேட்டி கட்டியிருப்ப தோடு துண்டு ஒன்றை மேலே போட்டிருப்பார்.

ஓய்வு பெற்றபின்

விடுமுறைக்காலங்களில் சோழவந்தானுக்குச் சென்று கிண்ணி மடத்தில் தங்குவது இவருடைய பழக்கம். மடத் தில் நடைபெறுஞ் செயல்களையும் பார்ப்பார். பிற்காலத் தில் இவரை அம்மடத்திற்குத் தலைவராகச் செய்யவேண் டும் என்று பலரும் எண்ணியிருந்தனர். அவ்வாறு தங்கு வதற்கு இவரும் விருப்பமுடையவராக இருந்தார். மேலும் அவ்வூர் மக்களுக்குத் தம்முடைய பொருளைக்கொண்டு கல்வித்தொண்டு செய்யவேண்டுமென்றும் எண்ணியிருந் தார். ஆனால் அவ்வெண்ணம் பிறகு மாறிவிட்டது. தாம் பிறந்த கூமாப்பட்டிக்கே சென்று அவ்வூர் மக்களின் முன் னேற்றத்தின்பொருட்டுக் கல்வித்தொண்டு செய்தல்வேண் டும் என்று முடிவுசெய்தார். அண்ணாமலைநகரில் இருந்த போதே கூமாப்பட்டியில் நிலம் வாங்கினார். சிதம்பரத்தில் இருந்த தம் நூல்களையும் கூமாப்பட்டிக்கே கொண்டு போய்ச் சேர்த்தார்.

இறுதி

1942-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அலுவலில் இருந்து ஓய்வு பெற்றார்.

சோழவந்தானையடைந்து கிண்ணிமடத்தில் சிலநாள் தங்கி யிருந்தார். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார் அளித்த உதவித்தொகை முதலிய பொருள்கள் அப்பொழுது கந்தசாமியாரிடம் இருந்தனவாம். அவ்வாருகக் கந்தசாமியார் 1943-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் ஆரும் நாள் இரவு மூன்றுமணிக்குத் திடீரென்று இவ்வுலக வாழ்வைத் துறந்தார். கீழே விழுந்து உடலில் காயம் உண்டானமையினுல் சாதல் நேர்ந்ததென்று சிலரும், மார்படைப்பினுல் மாண்டார் என்று சிலரும் செய்தியறிவித்தார்கள். உடல் அவ்விடமே அடக்கஞ் செய்யப்பட்டது.

---

௧௦. நடேச முதலியார்

தோற்றம்

திரிசிரபுரம் மலைக்கோட்டையில் 1891-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முப்பதாம் நாள் மு. நடேசமுதலியார் பிறந்தார். தந்தையார் பெயர் முனிசாமிமுதலியார். முனிசாமி முதலியார் தென்னுர்க்காடு மாவட்டத்தில் வாழ்ந்திருந்து திரிசிரபுரத்தில் குடியேறியவர்.

கல்வி

இளமையில் கல்விகற்கத்தொடங்கி மெட்ரிகுலேஷன் வரையில் படித்துத் தேறினுர். மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறியபின் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வேலை பார்த்துவந்தார். ஓய்வுள்ள பொழுதுகளில் தமிழில் உள்ள சிறு நூல்களைப் படிப்பதினும் மற்றவர்கட்குப் பாடஞ்சொல்வதினும் கருத்துச் செலுத்தினுர். தமிழ் நாட்டிற் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களிடத்திலும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளிடத்திலும் அவ்வப்போது சென்று பல தமிழ் நூல்களைப் பயின்றுவந்தார்.

தமிழாசிரியர்

நீதிமன்றத்தில் வேலைபார்த்துவந்த இவர் தமிழ் நூல்கள் பலவற்றைப்பயின்று தேறியமையால் தமிழாசிரியராகத் தொழில்புரியத் தகுதிவாய்ந்தவரானார். 1919-ஆம் ஆண்டில் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். தமிழாசிரியத்தொழிலை மகிழ்ச்சியுடன் பார்த்து வந்தார். உறையூர் வெஸ்லி கிறித்துவ சங்கப்பள்ளியில் சில சமயங்களிற் பாடம் போதித்துவந்தார். திருச்சியில் தனித் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவி அதிற் பல அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவு நடத்திவந்தார்.

சோசப் கல்லூரியில்

1927-ஆம் ஆண்டில் செயிண்ட் சோசப் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக ஏற்படுத்தப்பட்டார். ஹோலி கிராஸ் பெண் பள்ளிக்கூடத்திலும் தமிழ்ப்பாடம் கற்பித்துவந்தார். ஒருவர் தமது வாணாள் முழுவதும் நூல்களைப் படித்துக்கொண்டிருந்தாலுங்கூடக் கல்விக்கடலின் கரையைக்காண இயலாது. நடேசமுதலியார் கல்லூரிக்குச் சென்றபின் இடைவிடா ஊக்கத்துடன் மேலும் பல தமிழ் நூல்களைப் பயிலத்தொடங்கினார். மற்றவர்களையுந் தமிழ் படிக்குமாறு அடிக்கடி ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தார்.

கலைத்தொண்டு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவைகளில் உறுப்பினரானார். பல தமிழ்த் தேர்வுகட்கும், புலவர் தேர்வுக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தேர்வுக்கும் தேர்வு நடத்துபவராக இருந்தார். தமிழ்க் கலையை வளர்க்கும்பொருட்டு நூல்கள் எழுதும் பணியிலும் ஈடுபட்டார். தமிழ் இலவச வகுப்பு ஒன்றை ஏற்படுத்தினார். அதில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்

கும் சங்க நூல்களைப் பாடஞ்சொன்னார். திருச்சி வானொலி யில் அவ்வப்போது இலக்கியப்பகுதிகளை விளக்கிவந்தார். பல ஊர்களினும் உள்ள கழகங்கட்குச்சென்று சொற் பொழிவாற்றும் பணியையும் மேற்கொண்டிருந்தார்.

குண நலன்கள்

சிறு பருவத்தில் நல்ல உடற்கட்டு உடையவராக விளங்கினார். உதைப்பந்தாட்டத்தில் மிகுந்த விருப்பம் உடையவர். எந்தக் கடினமான நூற்செய்திகளையும் கேட் போர் மனதில் பதியுமாறு மிக எளிமையாகப் போதிக்குந் தன்மை அமையப்பெற்றவர். சொற்பொழிவில் தளர் வில்லாதவர். பேச்சுவன்மையும் எழுத்துவன்மையும் உடையவர். எண்ணியவற்றை எண்ணியவாறே முடிக்குந் திண்ணிய மனவலிமையுடையவர். நகைச்சுவை ததும்பப் பேசும் நாவன்மையுடையவர். தம்முடைய உழைப்பினா லேயே முன்னுக்கு வந்தவர்களில் இவரும் ஒருவர்.

இறுதி

இவர் 1942-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் பதின் மூன்றாம் நாள் தமது ஐம்பத்தொன்றாம் அகவையில் இறை வன் திருவடிநீழலை யெய்தினார்.

இயற்றிய நூல்கள்

1. திலகவதியார்
2. புனிதவதியார்
3. மேல் நாட்டுப் பேரறிஞர்
4. சிறுவர் கடமை

முதலியன இவரால் எழுதப்பெற்ற நூல்கள்.

கக. இராகவையங்கார்

பிறப்பு

பாஷாகவிசேகரர் ரா. இராகவ ஐயங்கார் தென்னவ ராயன் புதுக்கோட்டை என்னும் ஊரிலே நயித்துருவ காசிபகோத்திரத்திலே பிறந்தார். இவருடைய தந்தை யார் பெயர் இராமாநுச ஐயங்கார்.

கல்வி

சேது சமத்தானத்திலே அந்நாளில் சிறந்த புலவராக விளங்கிய சதாவதானம் முத்துச்சாமி ஐயங்காருக்கு இராகவ ஐயங்கார் உடன்பிறந்தாளின் மகனுவர். இராகவ ஐயங்கார் தம்மாதுலரிடம் தமிழ்க் கல்வியை நன்கு பயின்று செய்யுள் பாடுந்திறமை கைவரப்பெற்று விளங் கினுர். வடமொழி ஆங்கிலம் முதலியவைகளையும் நன்கு கற்றுணர்ந்தார்.

அவைக்களப் புலவர்

சிறந்த புலவராக மிளிர்ந்த இவர் பாஸ்கரசேதுபதி, அவர் மைந்தரான இராசராசேசுவர முத்து ராமலிங்க சேதுபதி, அவர் மைந்தரான சண்முக ராசேசுவர நாக நாத சேதுபதி ஆகிய மூன்று அரசர்களுடைய காலத் திலும் சமத்தானப் புலவராக வீற்றிருந்து அவர்களுடைய அவையைப் பெருமைப்படுத்திஞர்.

செந்தமிழ் ஆசிரியர்

பாண்டித்துரைத் தேவரால் மதுரைச் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டபொழுது அச்சங்கத்தில் இருந்து 'செந் தமிழ்' என்னும் பெயருடன் பத்திரிகை ஒன்றும் வெளிப் படுத்துவதென்று முடிவாகியது. அப்பத்திரிகைக்கு முத லாவது ஆசிரியராக அமர்ந்து அதனைச் சிறந்த முறையில் நடத்திஞர். அப்பத்திரிகையிற் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வெளிப்படுத்திஞர்.

செந்தமிழ்ப் பத்திரிகையின் பிற்சேர்க்கையாக நூல்கள் பலவற்றை ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்தினர்.

பலவகைத் தொண்டுகள்

தம் ஆயுட்காலம் முழுவதும் தமிழ்ச்சங்கத்தின் செயல்முறைக் குழுவினருள் ஒருவராக அமர்ந்து தக்க வாறு செயலாற்றற்கு உதவி செய்தார். சங்கத்தின் தனித் தமிழ்த் தேர்வுகளுக்குத் தேர்வாளராக இருந்தார். பல ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தேர்வாளரா கவும் பாடப் புத்தகக் குழுவினருள் ஒருவராகவும் இருந் தார். அரசர் அண்ணாமலைச் செட்டியார் அமைத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைத்தலைவராகவும் தேர்வாளராகவும் அமர்ந்து தமிழ் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டு புரிந்தார்.

கலைத்தொண்டு

வடமொழியில் உள்ள பகவத்கீதையையும் சாகுந்தல நாடகத்தையும் தமிழ்ச் சந்தப்பாக்களால் பாடினர். பாரி காதையை இனிய வெண்பாவாகப் பாடிப் பெரும்புலவர் பலரும் வியந்து பாராட்டுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரங்கேற்றினர். இதன்பொருட்டு அண்ணா மலைச் செட்டியார் ஐயங்காருக்கு ஆயிரம் வெண்பொற் காசுகள் நன்கொடை வழங்கினர். மற்றும் இராமாயண சாரம், புல்லையந்தாதி முதலிய நூல்களை இயற்றினர். இவர் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த ஆராய்ச்சி யுடைய இவர் தாஞ்சொல்ல எடுத்துக்கொண்ட செய்தி யைக் கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதில் சிறந்த நாநலம் படைத்தவர்.

சிறப்புப் பெயர்கள்

இவருடைய பெரும்புலமையினை நன்குணர்ந்த மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் இவருக்கு "மகா

வித்துவான்" என்னும் பட்டத்தை வழங்கினர். சென்னை வடமொழிப் பல்கலைக் கழகத்தார், "பாஷா கவிசேகரர்" என்னும் பட்டத்தைக் கொடுத்தனர்.

சிறப்பியல்பு

ஐயங்கார் பெரும்புலமைத் திறம் உடையவராகலின் அவையிலுள்ளோர் எப்பொருளைப் பற்றிப் பேசவிரும்பினும் அப்பொருளைப் பற்றி உடனே விரிவாகச் சொற்பொழிவாற்றும் ஆற்றல் அமையப்பெற்றவர். தாம் உண்மையென்று கண்டதை அஞ்சாது கூறி நிலைநாட்டும் மனவலியும் அறிவாற்றலும் அமையப்பெற்றவர். நூலாசிரியர்களின் ஆழ்ந்த எண்ணங்களை எளிதிலறிந்து மிகச் சுவைபெறப் பேசும் திறமையுடையவர் தமிழிற் கண்ட நயங்களை ஆங்கிலநூலோடும் வடமொழிக்கருத்துக் களோடும் பொருத்தி அறிவுடையோர் வியக்கத்தக்கவாறு பேசுவார். தமிழில் செய்யுளியற்றல் உரைநடை எழுதுதல், ஆராய்ச்சி செய்தல், சொற்பொழிவாற்றல் ஆகிய எல்லாத்துறைகளினும் வல்லவர். சந்தப்பாக்களை இயற்றுவதினும் இவர் மிகவல்லவர். அறிஞர்கள் ஐயங்காரைப் பார்க்கச் சென்றால், ஐயங்கார் தமிழ் இலக்கண இலக்கிய நயங்களையும் தமிழின் பெருமையையுந்தான் மிகுதியாகப் பேசுவார். பொதுவான உலகியற் பேச்சுகளை ஐயங்கார் பேசுவது இல்லை. எவ்வளவு நேரமாயினுஞ் சரி இலக்கண இலக்கிய நயங்களைப் பற்றிப் பேசுவதற்கு இவர் சளைக்கவே மாட்டார்.

இறுதி

சிறந்த நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், பத்திராசிரியராகவும், போதகாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், சமய நூலறிஞராகவும்,

சொற்பொழிவாளராகவும், பாவாணராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் எல்லாவகையானும் சிறந்து விளங்கிய இவர் 1946-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் பதினொன்றாம் நாள் வைகுந்த பதவியடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. புவியெழுபது
2. புல்லை யமகவந்தாதி
3. இராச ராசேசுவரக்கோவை
4. இராமாயண சாரம்
5. பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு
6. சாகுந்தல நாடகம் தமிழ் மொழிபெயர்ப்பு
7. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும்
8. கோசர்
9. தித்தன்
10. சேதுநாடுந் தமிழும்
11. பாரிகாதை
12. குறுந்தொகையுரை
13. தமிழாராய்ச்சித் தொகுதி
14. வஞ்சிமாநகர்

இன்னும் பல.

இவர் பதிப்பித்த நூல்கள்

1. தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையுடன்
2. ஐந்திணை ஐம்பது
3. களவியல்
4. இனியவை நாற்பது
5. நேமிநாதம்
6. பன்னிரு பாட்டியல்
7. திருநூற்றந்தாதி

முதலியன.

கஉ. திரு. நாராயண ஐயங்கார்

பிறப்பு

திக்கெலாம் புகழுந் தென்பாண்டி நாட்டிலே மின்னூர் தடமதில்சூழ் வில்லிபுத்தூருக்குத் தென்கிழக்கே ஏறக் குறையப் பத்துக்கல் தொலைவில் உள்ள எதிர்க்கோட்டை என்னுஞ் சிற்றூரிலே, பாரத்துவாச கோத்திரத்திலே ஆபத் தம்ப சூத்திரத்திலே, திருமாளிகையார் குடியிலே திரு. நாராயண ஐயங்கார் 1861-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பத்தொன்றாம் நாள் வியாழக்கிழமை தோன் றினார். தந்தையார் பெயர் அப்பனையங்கார். தாயார் பெயர் செங்கமலவல்லியம்மையார்.

கல்வி

இளமைப்பருவச் சடங்குகள் யாவும் இவருக்குச் சிறப் பாக நடைபெற்றன. முறைப்படி கல்விப்பயிற்சியுந் தொடங்கப்பெற்றது. வடமொழி தென்மொழி இரண் டையுஞ் சிறிது கற்றார். மேலுங் கல்விகற்க விரும்பினார். அதற்கேற்ற நிலைமை அச்சிற்றூரிலே இல்லை. முகவையில் கல்விகற்றற்கு வாய்ப்பிருக்கிறதென்பதை அகவையிற் சிறியராக இருக்கும்போதே அறிந்தார். அங்குச்சென்று கல்விகற்க விரும்பினார். புறப்பட்டு இராமநாதபுரம் என இயம்பும் முகவையை அடைந்தார். அங்கு அப்பொழுது சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார் என்பவர் புலவர் திலகராய் நிலவி நின்றார். அவரைக்கண்டு தந்நோக்கத் தைச் சாற்றினார். முத்துச்சாமி ஐயங்கார் நாராயண ஐயங் காருக்கு வேண்டிய உதவிகளையெல்லாஞ் செய்தார். அங்கு அப்பொழுது குறுநில மன்னராய் இலகிநின்ற பாற்கர சேதுபதிமன்னர், பாண்டித்துரைத் தேவர், கோட்டைச் சாமித்தேவர் முதலியவர்களையும் அறிமுகஞ் செய்துவைத்

தார். ஐயங்கார் மேற்கூறியவர்களுடைய உதவியைப் பெற்று அவர்களுடைய ஆதரவிலே கல்விகற்கத் தொடங்கினர். முத்துச்சாமி ஐயங்காரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்ருர். பந்தல்குடி உப. வே. வித்துவான் வேங்கடாசாரியாரிடம் வடமொழி வியாகரணம் முதலியவைகளைக் கற்ருர். முகவையில் இருந்த சித்தாத்திக்காடு உப. வே. வித்துவான் சீநிவாசாச்சாரியரிடம் ஸ்ரீ பாஷ்யம், பகவத்விஷயம் முதலிய வைணவ சமய நூல்களைக் கற்றுத் தேறினர். வடமொழியை இவர் கற்றபோது சாமி ஐயங்கார் என்பவர் இவரோடு ஒருங்கு கற்ருர். மற்றும் நாராயண ஐயங்கார் மந்திரம், மருத்துவம், காலக்கணிதம், தருக்கம் முதலிய எல்லாக் கலைகளையும் ஒருங்கு கற்றுத் தேறினர்.

ஆத்தானப்புலவர்

நாராயண ஐயங்காருடைய பலகலைப்புலமையையும் இருமொழித் தேர்ச்சியையும் நல்லொழுக்கம் முதலிய உயர் குணங்களையும் கண்டவர்கள் மிகவும் போற்றிப் பாராட்டினர்கள். சேதுமன்னரும் நாட்டு அதிகாரிகளும் இவரை மதித்தனர். பாலவனத்தம் பெருநிலக் கிழாராக விளங்கிய பாண்டித்துரைத்தேவர் இவரைத்தம்முடைய ஆத்தானப்புலவராக ஏற்றுக்கொண்டார்.

பாட்டு

ஆத்தானப்புலவரானபின் ஐயங்கார் பெரும்பாலும் பாண்டித்துரைத் தேவருடனேயே இருந்தார். ஒருநாள் வடமொழி வாணர் ஒருவர் பாண்டித்துரைத்தேவரிடம் வந்தார். வடமொழிச் சுலோகம் ஒன்றைக்கூறி அதன் பொருள், நயன் முதலியவைகளை விளக்கினர். ஐயங்கார் உடனே அச் சுலோகத்தைத் தமிழில்,

"வெங்களிறு பொங்கரவு மீப்பறவை யாப்புறலும்
செங்கதிர்வெண் திங்களாத் தீண்டுதலும்—தங்குபுகழ்
மிக்க வறிஞர் மிகவறிஞர் ஆதலுங்காண்
தக்க விதிவலிக்கண் சான்று"

என்னும் வெண்பாவாக விரைந்தியற்றிக் கூறினார். இதனைக் கேட்ட தேவர் ஐயங்காருடைய புலமையை வியந்து பாராட்டினார்.

சாதக சந்திரிகை

சாதக சந்திரிகை என்பது வடமொழியிற் சிறந்த ஒரு காலக்கணிதநூல். அதனைத் தமிழில் பெயர்த்து வெண்பாவாகப் பாடுமாறு பாண்டித்துரைத்தேவர் கூறினார். ஐயங்காரும் அவ்வாறே பாடிமுடித்தார். பிறகு அந்நூல் அறிஞர்கள் குழுமிய பேரவைக்கண் அரங்கேற்றப்பெற்றது. புலவர்கள் ஐயங்காருடைய மொழிபெயர்ப்புத் திறமையைப் பாராட்டினார்கள். பிறகு அந்நூல் பாண்டித்துரைத்தேவரால் அச்சியற்றி வெளிப்படுத்தப்பட்டது.

பன்னூற்றிரட்டிற்கு உதவி

பாண்டித்துரைத்தேவர் செந்தமிழ் இலக்கியங்களிலுள்ள அறநெறிப்பாடல்களையெல்லாம் ஒன்றுபடுத்திப் பொருட் கோவைசெய்து ஒரு நூலாக வெளியிட எண்ணினார். இதற்கு ஐயங்காருடைய துணை பேருதவியாக இருந்தது.

கல்லூரி ஆசிரியர்

பாண்டித்துரைத்தேவர் 1901-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை அமைத்தார். சங்கத்தின் சார்பாகக் கல்லூரியொன்றும் நிறுவப்பட்டது. அக்கல்லூரிக்குத் தலைமையாசிரியராக இருத்தற்குத் தகுதிவாய்ந்தவர் ஐயங்காரே என்று முடிவுசெய்த தேவர் இவரைத் தலைமையாசி

ரியராக ஏற்படுத்தினர். ஐயங்கார் அக்கல்லூரியில் தமது இறுதி நாள்வரை ஏறக்குறைய நாற்பத்தாறு யாண்டுகள் தலைமையாசிரியராக இருந்து எண்ணற்ற தமிழ்ப்புலவர் களை உண்டாக்கினர். இவர்பாற் கல்விகற்ற மாணவர்கள் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்து புகழுடன் விளங்குகின்றனர்கள்.

சங்க மேலாளர்

ஐயங்கார் தமிழ்ச்சங்கக் கல்லூரியின் தலைமையாசிரிய ராக இருந்ததுடன் தேவருடைய கட்டளைப்படி சில ஆண்டுகள் சங்கத்தின் மேலாளராகவும் அமர்ந்து சங்கச் செயல்களைச் சீரியமுறையில் நடத்தினர்.

செந்தமிழாசிரியர்

1910-ஆம் ஆண்டுமுதல் செந்தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் பணியையும் மேற்கொண்டு செந்தமிழ்ப் பத்திரிகையை நன்முறையில் நடத்தினர். அக்காலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள் பல. அக் கட்டுரைகள் செந்தமிழ்ச் சிறப்பு, இலக்கண இலக்கியமாண்பு, தருக்கம், காலக்கணிதம், வரலாறு ஆகியவைகளின் வளர்ச்சி முதலியவைகளை அடிப்படையாகக்கொண்டு விளங்கின. இவருடைய கட்டுரைகள் இனிய நடையில் அமைந்து எல்லோருக்கும் எளிதில் விளங்கும் தன்மையுடையனவாக விளங்கின. சொற்போர் முறையில் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆசிரியருடைய பல்கலைத்தேர்ச்சியையும், நடுநிலை பிறழாத சொற்போர் நேர்மையையும், உண்மையினை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் திண்மையையும் நன்கு விளக்கின. சொற்போர் முறையில் இவர் நுழையின் வெற்றி தோல்விகளை ஒரு பொருட்படுத்தார். உண்மையை உள்ளவாறு உலகிற்கு உணர்த்தவேண்டும் என்பதே இவருடைய உயரிய

நோக்கமாக விளங்கும். சொற்போர் முறையில் ஈடுபட்டு எழுதுங்கால் மற்றையோர்க்குத் தாழ்வும் மனவருத்தமும் ஏற்படத்தக்க வகையில் எழுதமாட்டார்.

நூற்பணி

இவர் நூல்களை ஆராய்ந்து திருத்திச் சீரிய முறையிற் பதிப்பிக்கும் தமிழ்நூற்பணியையும் மேற்கொண்டிருந்தார். அநுமானவிளக்கம், பாண்டியம், மாறனலங்காரம், பழமொழி முதல் இருநூறு உரையுடன், அண்டகோள விருத்தி, அமிருத ரஞ்சினி முதலிய நூல்களைத் தக்கவாறு ஆராய்ந்து குறிப்புரை முதலிய சிறப்புரைகளுடன் செந்தமிழ் வெளியீடாக வெளிப்படுத்தினார். இந் நூல்கள் நந்தமிழ் மொழிக்கு அணிசெய்வன வாயின.

சிறப்புப் பெறுதல்

தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆசிரியத்தொழில், செந்தமிழ் ஆசிரியத்தொழில், பதிப்பாசிரியத்தொழில் ஆகியவைகளால் தமிழ்மொழிக்கு ஐயங்கார் அரும்பெருந் தொண்டு செய்துகொண்டு வருதலைச் செந்தமிழ் உலகம் கருத்தூன்றிக் கவனித்துக்கொண்டேயிருந்தது. ஐயங்கார்க்குத் தக்கவாறு கைம்மாறு செய்யமுடியாமற் போயினும் ஏதேனும் ஒரு சிறிதாயினும் உதவி செய்ய வேண்டுமென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தது. 1922-ஆம் ஆண்டில் சனவரித் திங்கள் பதின்மூன்றும் நாளில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தபோது அவருடைய கையால் சென்னை அரசாங்கம் இரண்டு சால்வைகளும் சிங்கமுகத்தோடாவும் பதக்கமும் பரிசளிக்கச் செய்து மேன்மைப்படுத்தியது. பவ ஆண்டு ஆடித்திங்கள் முப்பத்தொன்றும் நாள் நிகழ்ந்த சங்கத்தின் முப்பத்து மூன்றும் ஆண்டு விழாவில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்

ஆயிரத்தைந்நூறு வெண்பொற்காசுகளடங்கிய பணமுடிப்பும் வழங்கிப் பெருமைப்படுத்தினர். தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் சேதுவேந்தருமான பெருமை தங்கிய சண்முக ராசேசுவரநாகநாத சேதுபதியவர்கள் தம் முப்பத்தேழாம் ஆண்டு நிறைவு விழாவில் பொற்பதக்கமும் பட்டும் பரிசு கொடுத்துப் பாராட்டினுர்கள். பாண்டித்துரைத் தேவரின் உடன்பிறந்தவராகிய கோட்டைச்சாமி தேவரின் மகனுராகிய இராமச்சந்திரதேவர் ஒருசமயம் இரண்டு சால்வைகளும் இருநூறு வெண்பொற் காசுகளும் வழங்கினுர்.

சங்கத்தில் பற்று

இவர் விரும்பியிருந்தால் மிக உயர்ந்த ஊதியத்தில் பிற கல்லூரிகட்கு ஆசிரியராகச் சென்று சிறப்புப் பெற்றிருக்கலாம். தமிழ்ச் சங்கத்தினிடத்தில்கொண்ட பற்றுக் காரணமாக இறுதிவரை தமிழ்ச் சங்கத்திலேயே தொண்டு செய்துகொண்டிருந்தார். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகட்குப் பொறுப்பாளராக இருந்ததோடு பிறகல்லூரிகளின் தேர்வுக்காரியங்களிலும் ஈடுபட்டு உதவி செய்தார். இவருடைய அருமைத் திருமகன். டி. என். அப்பனையங்காரும் சிறந்த புலவராக விளங்குகிறுர்.

இறுதி

நீண்டகாலம் தண்டமிழ்த் தொண்டு செய்திருந்த இப்பெரியார் தமது எண்பத்தாறும் அகவையில் 1947-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் செங்கண் மாலின் திருவுலகப் பேறுற்றுர்.

௧௩. இரமண மகரிஷி

பிறப்பு

மதுரை மாவட்டத்திலே உள்ள திருச்சுழி என்னும் சிற்றூரில், 1879-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் இருபத் தொன்பதாம் நாள் இரவு ஒரு மணிக்கு இரமண மகரிஷி பிறந்தார். தந்தையார் பெயர் சுந்தரம் ஐயர். தாயார் அழகம்மையார். இரமண மகரிஷிக்கு இடப்பட்ட பிள்ளைப் பெயர் வேங்கடராமன்.

கல்வி

வேங்கடராமன் உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் சில காலம் படித்தார். பிறகு திண்டுக்கல் சென்று அங்கு ஓராண்டு ஐந்தாவது வகுப்பிற் படித்தார். பிறகு மதுரையை அடைந்து ஸ்காட்ஸ் மிடில் பள்ளியிலும், கிறித்துவ சங்க உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார். பள்ளி யிற் படித்தகாலத்தில் மற்றைய மாணவர்களைப் போலவே வேங்கடராமனும் பொதுவான நிலையில் இருந்தார். அகவை பதினாறு நிரம்பும் வரையில் படிப்பில் கழிந்தது.

அருணையை அறிதல்

1895-ஆம் ஆண்டில் வேங்கடராமனுடைய உறவினர் ஒருவர் மதுரைக்கு வந்தார். அவரைப் பார்த்த வேங்கட ராமன், "எங்கிருந்து வருகிறீர்?" என்று உசாவினார். அவர், "அருணாசலத்தில் இருந்து வருகிறேன்," என்று மறுமொழி கூறினார். அருணாசலம் என்னுஞ்சொல் வேங்கடராமனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. பெரியபுராணம் முதலிய நூல்களை வேங்கடராமன் படித் தார். அதனாலும் உள்ளத்திலே சிறிது மாறுதல் ஏற் பட்டது. அவருடைய மனம் மெய்ஞ்ஞானியின் உள்ளத் தைப்போல் மாறத்தொடங்கியது.

ஆன்ம உணர்ச்சி

வேங்கடராமருக்கு நாள் தோறும் ஆன்ம உணர்ச்சி முற்பிறப்பின் நல்வினைப் பயனால் வளர்ந்துகொண்டு வந்தது. வேங்கடராமனுடைய மாறுதலை உறவினர்கள் கண்டார்கள். இப்படி ஞானியைப் போல் காணப்படுகிறானே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தனர். படித்துக் கொண்டிருந்த வேங்கடராமன் ஒருநாள் புத்தகங்களை மூலையில் வீசிவிட்டு நிட்டையில் அமர்ந்துவிட்டார். வேங்கடராமனுக்கு அண்ணனும் தம்பியும் இருந்தனர். அண்ணனுடைய பெயர் நாகசாமி. தம்பியாகிய வேங்கடராமன் நிட்டையில் இருப்பதைப் பார்த்த நாகசாமி சினங்கொண்டார். தம்பியைப் பார்த்து, "என்னடா பெரிய ஞானியைப் போல் இருக்கிறாய்? இப்படி இருப்பவனுக்குப் படிப்பெல்லாம் எதற்கு?" என்று கடிந்துகொண்டார்.

அருணைக்குச் செல்லுதல்

அருணையைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல் வேங்கடராமனுடைய உள்ளம் அருணையையே பற்றிக்கொண்டிருந்தது. வீட்டைவிட்டு வெளியேறி அருணைக்குச் சென்று விடுவதென்று முடிவுசெய்தார். "பள்ளிக்கூடத்தில் இன்று தனி வகுப்புக்குப் போய்விட்டு வருகிறேன்," என்றார். தமையனார். "போய்வா. என்னுடைய பள்ளிக் கூடச் சம்பளத்தையும் கட்டிவிட்டுவா; பெட்டியில் பணம் இருக்கிறது ஐந்து ரூபா எடுத்துக்கொண்டு போ," என்றார். வேங்கடராமன் தேசப்படத்தை எடுத்துத் திருவண்ணாமலை எங்கிருக்கிறது என்று பார்த்தார். திண்டிவனத்திற்கு மேற்கே இருக்கிறது. திண்டிவனத்தில் புகைவண்டியைவிட்டு இறங்கி நடந்துசெல்லுதல் வேண்டும், மூன்றுரூபா போதும் என்று முடிவுசெய்தார். அதற்குள் பணம் இவரிடம் வந்து சேர்ந்தது. தாம் வீட்டைவிட்டுப்

புறப்படுஞ் செய்தியை ஒரு கடிதத்தில் எழுதினர். இரண்டு ரூபாயையும் கடிதத்தையும் கண்பார்வைக்கு எளிதாக அகப்படக்கூடிய இடத்தில் வைத்துவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டார்.

திண்டிவனத்திற்குச் சீட்டு

திண்டிவனத்திற்குப் புகைவண்டிச் சீட்டுப்பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறினர். வெகுதொலை சென்ற பிறகு வண்டியில் இருந்த ஒருவர் வேங்கடராமனிடம் பேச்சுக் கொடுத்தார். அவரோடு உரையாடிக்கொண்டிருந்த வேங் கடராமன் "திண்டிவனம் புகைவண்டி நிலையத்தில் இருந்து திருவண்ணுமலை எத்தனைகல் தொலைவு இருக்கும்?" என்று உசாவினர். அந்த நண்பர், "திருவண்ணுமலைக்குச் செல் வதற்குத் திண்டிவனஞ் செல்லவேண்டியது இல்லை என்றும், விழுப்புரத்தில் இருந்து புகைவண்டியிலேயே திருவண்ணுமலைக்குப் போகலாம்," என்றுந் தெரியப்படுத் தினர். பிறகு வேங்கடராமன் விழுப்புரத்தில் இறங்கினர். கால் நடையாகவே நடந்துபோய்விடலாம் என்று முடிவு செய்தார். சிலதொலை நடந்து சென்றார். பிறகு ஓர் ஊரில் தமது காதில் அணிந்திருந்த கடுக்கனைக் கழற்றி ஒருவரிடத்தில் அடகுவைத்துச் சிறிதுதொகை கடன் பெற்றுக்கொண்டு புகைவண்டியேறித் திருவண்ணுமலையை அடைந்தார்.

அருணையில் தவம்

திருவருணையை அடைந்த வேங்கடராமன் அருணு சலப் பெருமானைக் கண்டு போற்றிப் பணிந்தார். கோவிலை விட்டு வெளியே வந்தார். நாவிதன் ஒருவன் எதிர்ப் பட்டான். "தலையை மொட்டையடித்துவிடவா?" என் ருன். எல்லாம் அருணுசலப்பெருமான் திருவிளையாடல்

என்று எண்ணிக்கொண்டே வேங்கடராமன் தலையை மயிர்களைந்து மொட்டையடித்துக்கொண்டார். இடையில் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்து ஒரு கோவணங் கிழித்துக்கட்டிக்கொண்டார். எஞ்சியிருந்த பொருளைத் துணியில் முடிந்து தொலையில் வீசினார். ஆன்மாவுக்குத் தீட்டில்லை. அஃது எங்கும் நிறைந்துள்ளது. இவ்வுடலோ மண்ணில் இருந்து உண்டாகிறது. மண், நீர், தீ, காற்று, வான் என்பவைகள் எங்குமுள்ளதாய்த் தீட்டற்றபொருள்களாய் விளங்கும்போது இவ்வுடலுக்குமட்டும் எவ்வாறு தீட்டு ஏற்படும் என்று முடிவுசெய்து நீராடலையும் விட்டார். கோயில் மண்டபம், தோப்பு, மலை முதலிய விருப்பமான இடங்களில் அமர்ந்து பல ஆண்டுகள் தவம் புரிந்தார். பழம்பிறப்பின் தவக்குறைவால் தோன்றிய இவர் எந்த ஆசிரியரையும் அடுத்ததாகவும் அருளுரை பெற்றதாகவும் தெரியவில்லை. அருணாசலக் கடவுளையே ஆசிரியராகவும் மற்ற எல்லாமாகவுங் கொண்டார். சில ஆண்டுகளில் இவருடைய தவம் சிறந்து விளங்கி மெய்யறிவாகிய பயனை வழங்கத்தொடங்கிவிட்டது.

மாணவர் குழாம்

வேங்கடராமனின் தவப்பெருமை நாளடைவிற் சிறிது சிறிதாக எங்கும் பரவத்தொடங்கிவிட்டது. இவருடைய இருப்பிடத்தை யறிந்த உறவினர்களும் இவரை வந்து பார்த்துச் சென்றனர். காவியகண்ட கணபதிசாத்திரி, சேஷையர், உத்தண்டிநயினார் முதலிய பலர் இவரை வணங்கித் தங்கள் ஐயங்களைப் போக்கி மெய்யறிவு பெற்றனர் காவியகண்ட கணபதிசாத்திரி வேங்கடராமனுக்கு "இரமண மகரிஷி" என்று பெயர் சூட்டினார். அதுமுதல் "இரமண மகரிஷிகள்" என்னும் பெயரே யாண்டும் வழங்கத்தொடங்கியது. இவர் அடியார்கட்கு அருளிய மெய்

யறிவுரைகள் ஒன்று திரட்டப்பட்டு நூல் வடிவாக்கப் பட்டன. தவத்தாற் சிறப்புற்ற இவரிடம் மக்கள் கூட்டம் மிகுதியாக வந்து அருள்பெற்றதன்றி மலையிலும் மலைப் பக்கங்களினும் வாழ்ந்திருந்த அஃறிணைக் கூட்டங்களாகிய குரங்கு முதலியவைகள்கூட அருள்பெற்றுச் சிறப்படைந் தன.

ஆசிரமம்

இரமணரின் தாயாராகிய அழகம்மையார் இளவலாகிய நிரஞ்சனனந்தர் முதலியோர் இவரையே பற்றுக்கோடாக அடைந்து பணிபுரிந்தனர். தாயார் காலமானவுடன் அவ்வம்மையார் உடலை மலைக்குத் தென்பால் உள்ள ஓர் இடத்தில் அடக்கஞ்செய்து இரமண மகரிஷிகளும் அவ்விடமே தங்கலானார். அதுமுதல் அந்த இடம் பெருஞ் சிறப்புடன் விரிவடைந்து ஒரு சிற்றூராகவே மாறிவிட்டது. சென்னைக் கவர்னராக இருந்த பவநகர் மன்னர், இராசேந்திரபிரசாத், இராசகோபாலாச்சாரியார், மேல்நாட்டினர் பலர் ஆகியோர் இரமணரின் பெருமையை உணர்ந்துவந்து போற்றி அருள்பெற்றனர். மேல்நாட்டினர் இரமணரின் பெருமையைப் பத்திரிகைகளின் வாயிலாகவும் நூல்களின் வாயிலாகவும் தம் நாடுகளினும் பரவச் செய்தனர். சில மேனாட்டினர் இரமணரின் மாணவர்களாகி ஆசிரமத்திலேயே தங்கியும் விட்டனர். இரமண மகரிஷியை உள்ளன்புடன் போற்றிய சிலர் மெய்யறிவு பெற்றனர். சிலர் நோய் நீங்கப்பெற்றனர்.

இரமணரின் மெய்யறிவு

முற்பிறப்பின் நல்வினையினால் இரமண மகரிஷிக்கு மெய்யறிவு இளம் பருவத்திலேயே உண்டாகிவிட்டது. இவருடைய உரைகள் ஒவ்வொன்றும் மெய்யறிவுக்கு வழி

காட்டியாயின. மக்களிடமும் மாக்களிடமும் இவர் மாறுபாடு காட்டவில்லை. ஆசிரமத்தில் புகுந்த கள்ளர்களிடமும் இவர் நல்லருளுடன் நடந்து கொண்டார். ஆசிரமத்தில் இருந்தவைகளில் வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு போகுமாறும் அன்புடன் மொழிந்தார். அறிவற்றவர்களாகிய அவர்கள் இவருடைய பெருமையை உணர்ந்து கொள்ளாமல் தடிப்பூசையும் வழங்கிவிட்டுச் சென்றனர். இரமணரைத் தடியால் தாக்கியவன் கை அன்றே நோய்க்குள்ளாகி அவன் வருந்திக் கதறும்படியாக ஆகிவிட்டது.

நூல்கள்

உலகப் புகழ்பெற்ற மெய்யறிவாளராக விளங்கிய இவர் அருள் நூல்கள் சிலவற்றையும் ஆக்கினர். அருணசலப் பெருமான் மீது வணக்கச் செய்யுள்கள் பல பாடினர். விவேக சூடாமணி என்னும் நூலை எளிய உரைநடையில் எழுதினர். இவர் வெண்பா முதலிய பாக்களின் இலக்கணங்களை எந்நாள் உணர்ந்தனரோ தெரியவில்லை. ஆசிரமத்தில் இருந்த இலக்குமி என்னும் பசு வீடு பேற்றையடைந்த போது இரமணர்,

> "சருவதா ரிப்பேர்கொள் சம்வச் சரத்து
> வருமானி யைந்துசனு வாரம்—மருவுமுற்
> பக்கத் துவாதசிவி சாகம் பசுவாமி
> லக்குமிவி முக்தரா ளாம்."

என்னும் வெண்பாவைப் பாடினர். இவ் வெண்பாவை அப் பசுவின் சமாதியிலும் எழுதிவைத்துள்ளனர்.

1. அருணசல சிவத்துதி
2. அருணசல அட்சரமண மாலை
3. நான் யார்?
4. உபதேச நூன்மாலை
5. அநுவாத நூன்மாலை

6. விவேக சூடாமணி உரைநடை
7. அருண்மொழித் தொகுப்பு
8. ஆன்ம போதம்
9. இரமண கீதை

முதலியன இப் பெரியாரால் இயற்றியருளப் பெற்ற நூல்கள்.

இறுதி

இப் பெரியார், தம் தாயாரை அடக்கஞ் செய்த விடத்தில், திருக்கோயில் முதலியன அன்பர்கள் அமைத்தமையின் அவ்விடமே தங்கியிருந்து 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினான்காம் நாள் வெள்ளிக்கிழமை தமது எழுபதாவது அகவையில் வீடு பேற்றை யடைந்தார்.

கசு. சீநிவாச ஐயங்கார்

பிறப்பு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராகவும் புலவராகவும் வள்ளலாகவும் விளங்கியிருந்த தி. செ. சீநிவாச ஐயங்கார் சேது நாட்டிலே சிறந்து விளங்கும் திருப்புல்லாணி என்னும் ஊரிலே 1876-ஆம் ஆண்டு மேத் திங்கள் எட்டாம் நாள் [தாது ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள்] பிறந்தார். தந்தையார் பெயர் செல்லம் ஐயங்கார்.

கல்வி

இவர் இளம் பருவத்திலேயே தந்தையை இழந்தார். தொடக்கப் பள்ளியிற் சிறிது கல்வி கற்றபின் ஒன்பதாம் அகவையிலே இராமநாதபுரத்தை அடைந்தார். சேது மன்னர் உதவிபெற்றுக் கல்வி கற்கத் தொடங்கினார். இலக்குமி நரசிம்மபாரதியார் என்பவரிடத்தில் சில நாள்

பயின்றார். பிறகு சுவார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கற்றார். 1891-ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறினார். பிறகு மேற்படிப்புப் படிக்கும் பொருட்டு மதுரைமாநகரை யடைந்து மதுரைக் கல்லூரியில் எப். ஏ. வகுப்பிற் சேர்ந்தார். நன்கு கற்று எப். ஏ. த் தேர்வில் தேறிப் பொற் பதக்கம் பரிசு பெற்றார்.

தேர்வில் தவறுதல்

அந்நாளில் மதுரையில் பி. ஏ. படிப்புக்கு வாய்ப்பில்லாமல் இருந்தபடியால் திருச்சிராப்பள்ளியை அடைந்து செயின்ட் சோசப் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் 1904-ஆம் ஆண்டிற் சேர்ந்தார். 1905-ஆம் ஆண்டில் தேர்விற்குச் சென்று எழுதினார். தமிழ்ப்பாடப் பிரிவில் மதிப்பீட்டெண் குறைந்தபடியால் தேறவில்லை.

பாண்டித்துரையிடம் படித்தல்

பி. ஏ. தேர்வில் தோல்வியடைந்த இவர் மீண்டும் படித்துத் தேர்வு எழுத முடியாத நிலையில் இருந்தார். ஏதேனும் அலுவலை மேற்கொண்டு குடும்பத்தை நடத்தலாம் என்று முடிவு செய்தார். திருமணமும் ஆகியிருந்தது. ஆகவே தாலுகா அலுவல் நிலையத்தில் காலியாயிருந்த அலுவல் ஒன்றுக்கு விண்ணப்பம் போட்டார். அஃது எழுத்தாளர் வேலை. அப்போது பாண்டித்துரைத் தேவர் தாலுகா போர்டின் துணைத்தலைவராக இருந்தார். விண்ணப்பத்தைக் கண்ணுற்ற அவர் சீநிவாச ஐயங்காரை நேரில் அழைத்துப் பார்த்தார். உதவி செய்தால் உயர்ந்த நிலைக்கு வரக்கூடியவர் என்று உணர்ந்தார். மேலும் படிக்கும்படியும் தாம் உதவி செய்வதாகவும் கூறி உதவியளித்து ஊக்கினார். அன்றியும் தமிழில் நல்ல பயிற்சி யுண்டாகுமாறு பல நூல்களையும், பி. ஏ. தேர்விற்குரிய தமிழ்ப் பாடங்

களையுந் தாமே கற்பித்தார். பிறகு பி. ஏ. தேர்விற்குச் சென்று வெற்றி பெற்றார். மேலும் பாண்டித்துரையின் பொருளுதவி பெற்றுச் சென்னைமாகாணக் கல்லூரியிற் சேர்ந்து படித்துச் சட்டத் தேர்விலும் தேறினார்.

வழக்கறிஞர்

பிறகு மதுரையை அடைந்து தம் உறவினரான கோபால ஐயங்கார் என்பவரை யடுத்து அவரோடு சேர்ந்து வழக்கறிஞர் தொழிற் ப்யிற்சி பெற்றார். பிறகு 1900-ஆம் ஆண்டு முதல் தாமே தனித்து வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்தார். இவர் தம்முடைய நுண்ணறிவாலும் சட்ட நூற்பயிற்சியாலும் நீதிமன்றங்களில் திறமையாகச் சொற்போரிட்டு நீதித்தலைவர்கள் பொதுமக்கள் முதலி யோருடைய நன்மதிப்பைப் பெற்றார். தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களிலெல்லாம் இவருடைய பெயர் புகழ்பெற்று விட்டது. எனவே இவருடைய செல்வமும் வாழ்க்கைச் சிறப்பும் பெருகின.

சங்கப்பணி

பாண்டித்துரைத் தேவர் 1901-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார். பாண்டித்துரைத் தேவர் தமக்குச் செய்த பேருதவிகளால் அவரிடத்திலே மிகுந்த பற்றுக்கொண்ட இவர் தமிழச்சங்க வளர்ச்சிக்கு உழைத் தலைத் தமது கடமையாகக் கொண்டார். முப்பது ஆண்டு களுக்கு மேல் சங்கத்தின் சிறப்புச் செயலாளராகவும், 1935-ஆம் ஆண்டுமுதல் தம் வாணாள் முழுவதும் சங்கத் துணைத்தலைவராகவும் இருந்து சங்கப் பணிகளை யெல்லாம் நன்றாகச் செய்தார். பாண்டித்துரைத் தேவருக்குப்பின் அச் சங்க வளர்ச்சியிலே கண்ணுங் கருத்துமாக இருந்து ஆவன புரிந்தார்.

மாணவர்கட்கு உதவி

தம் முயற்சியால் பொருளீட்டிய இவர் எளியார் பலருக்கு உதவி செய்தார். மாணவர்கட்கு உண்டியும் உடையும் உறையுளும் புத்தகமும் பள்ளிக்கூடக் கட்டணமும் உதவினர். அவரவர் தகுதிக்கேற்றவாறு உதவி புரிந்தார். இவருடைய உதவியாற் பலர் வழக்கறிஞரானார்கள். பலர் பள்ளிகளில் ஆசிரியரானார்கள். பலர் பலவகையில் முன்னுக்கு வந்தார்கள்.

நூல் இயற்றல்

பாண்டித்துரைத் தேவர்பால் தமிழ் பயின்ற இவர் சிறந்த தமிழ்ப்புலமையுடையவராக விளங்கினர். வடமொழியில் உள்ள திருப்புல்லாணி மான்மியத்தைத் தெள்ளிய தமிழ் உரைநடையாக மொழிபெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தினர், கம்பராமாயணம் திருக்குறள் முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் சிறப்புக்களைக் குறித்து அவைகளிற் சொற்பொழிவு நிகழ்த்தினர். சிறந்த நூல்களைப் படித்துப் பத்திரிகைகளில் மதிப்புரை எழுதினர்.

புலவர் புகழ்ச்சி

புலவராகவும் புரவலராகவும் விளங்கிய இவர்மீது புலவர்கள் பலர் அவ்வக்காலங்களில் பலவகையான செய்யுட்களை இயற்றிவந்து பரிசில் பெற்றுச் சென்றனர். இவர்மீது இயற்றப்பெற்ற சித்திரகவிகளும் தனிப்பாடல்களும் பல. அன்றியும் நான்மணிமாலை, இரட்டைமணிமாலை, உலா முதலிய தனி நூல்களும் உள்ளன. அந்தணாளர்கள் வாங்குதலையன்றி வழங்குதலையுஞ் செய்யக்கூடியவர்கள் என்பதை உலகம் இவர்பால் கண்டுமகிழ்ந்தது.

பலவகைப் பணிகள்

இவர் தமிழ்நாட்டில் இருந்த சங்கங்கள் பலவற்றினும் இடம்பெற்றிருந்தார். இராமநாதபுரம் தாலுகா போர்டு, ஜில்லா போர்டு முதலியன இவருடைய தொண்டைப் பெற்றுச் சிறப்பெய்தின. மதுரை வழக்கறிஞர் சங்கத் தலைவராக இருந்தார். கலைக்கழகத்தின் தலைவராக இருந் தார். மதுரைநகர மன்ற நிருவாகிகளில் ஒருவராக இருந்தார். சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருப்பதி வேங்கடேசுரர் கோயில் நிருவாகக்குழு, கீழைத் திசைக்கழகம் ஆகியவைகளில் உறுப்பினராக இருந்தார். 1920-ஆம் ஆண்டுமுதல் 1940-ஆம் ஆண்டுவரை மும்முறை சென்னை சட்டசபை உறுப்பினராயிருந்து அரசியற்பணியும் புரிந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர்க்கு 1914-ஆம் ஆண்டுமுதல் 1950-ஆம் ஆண்டுமுடிய 36 ஆண்டுகள் தீபாவளிக்கு உடை வாங்கிக் கொடுத்தார். 1918-ஆம் ஆண்டுமுதல் 1946-ஆம் ஆண்டு வரை சங்கக் கலாசாலையிற் கற்ற மாணவருள் ஒருவருக்கு உண்டி உடை முதலிய எல்லாச் செலவுக்கும் பெரும் பொருள் வழங்கினார். தமிழ்ச்சங்கத்திலுள்ள பாண்டியன் புத்தகசாலைக்கு 1123 புத்தகங்கள் வழங்கினார்.

இறுதி

இவ்வாறு சிறந்த தமிழ்த்தொண்டு புரிந்திருந்த இவர் தமது எழுபத்தைந்தாம் அகவையில் 1951-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் ஒன்பதாம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வைப்பெற்றார். இவருடைய மறைவு பலருக்கும் பெருவருத்தத்தை யளித்தது.

௫. கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை

பிறப்பு

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தை வளர்ப்பதிற் கண்ணுங்கருத்துமாக இருந்த கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை 1888-ஆம் ஆண்டில்-வியஆண்டு மார்கழித் திங்கள் ஐந்தாம்நாள், கந்தருவ கோட்டைக்கு அண்மையில் உள்ள மோகனூர் என்னும் சிற்றூரில் யாதவகுலத்தில் தோன்றினார். தந்தையார் பெயர் அரங்கசாமிப்பிள்ளை.

கல்வி

இளமைக்காலத்தில் கரந்தையில் இருந்த தூய பேதுரு பள்ளிக்கூடத்தில் கல்விபயின்றார். வேங்கடாசலம்பிள்ளையோடு அந்நாளில் உடன்பயின்றவர்கள் பிற்காலத்தில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திய இராதா கிருட்டிணபிள்ளை, தட்சிணாமூர்த்திபிள்ளை முதலியோராவர். அந்நாளில் கரந்தையில் தமிழ்ப்புலமை வாய்ந்து விளங்கிய வேங்கடராமபிள்ளை என்பவரிடம் தமிழ்ப் பயின்றார். தந்தையார் காலமாகவே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு வேங்கடாசலம்பிள்ளைக்கு உண்டாகியது. தம் குடும்பத்தவர் மேற்கொண்டிருந்த உழவுத்தொழிலை மேற்கொண்டதுடன் ஊரின் கணக்கப்பிள்ளையாகவும், மணியக்காரராகவும் இருந்து பணியாற்றினார். ஆயினும் அடிக்கடி கரந்தைக்குச்சென்று நண்பர்களைக்கண்டு அளவளாவிவந்தார். தூயபேதுரு கல்லூரியில் தமிழ்ப்புலவராக இருந்த சுப்பிரமணியஐயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். அவர்மீது, “ஆசாறுற்றுப்படை” என்னும் நூலையும் இயற்றினார். அந்நாளில் கந்தர்வகோட்டையில், மன்னார்குடி ம. நா. சோமசுந்தரம்பிள்ளை போலீஸ் சப் இன்ஸ்பெக்டராக வேலைபார்த்துக் கொண்டிருந்தார். வேங்கடாசலம்பிள்ளைக்

கும், சோமசுந்தரம்பிள்ளைக்கும் பழக்கமும், நட்பும் ஏற்பட்டது. சோமசுந்தரம்பிள்ளை இலக்கணப்புலமை அமையப் பெற்றவர். அவருடைய பழக்கம் இவருடைய இலக்கண அறிவு வளர்வதற்குக் காரணமாயிற்று.

தமிழாசிரியர்

இலக்கண இலக்கிய அறிவு நன்கு அமையப்பெற்றவுடன் கணக்கப்பிள்ளை வேலை முதலியவைகளை விட்டார். தமிழாசிரியராக வேலைபார்க்கத் தொடங்கினர். இப்பொழுது கோநகர் எனவழங்கும் கோனபட்டில் (கோனூர் பற்று) இருந்த கல்விநிலையம் ஒன்றில் வேலைபார்க்கத் தொடங்கினர். அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்பொழுது பண்டிதமணியின் நட்பும் இவருக்கு ஏற்பட்டது. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் தொடர்பும் ஏற்பட்டது. உ. வே. சாமிநாதையர், ரா. இராகவஐயங்கார், அரசஞ் சண்முகனார், மு. இராகவஐயங்கார், அநந்தராமையர் ஆகியோர்போன்ற பெரும் புலவர்களின் பழக்கமும் ஏற்பட்டது. கவியரசரின் புகழ் சிறிது சிறிதாக எல்லா இடங்கட்கும் பரவத்தொடங்கியது.

கரந்தைக்கு வருதல்

கரந்தையில் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது. முதன்முறையாகக் கவியரசர் தமிழ்ச்சங்கச் சார்பில் அமைக்கப் பட்ட கல்விநிலையத்தில் ஆசிரியராகஅமர்ந்து சிலகாலம் வேலைபார்த்தார். இச்சமயத்தில் பண்டித. ந. மு. வேங்கடசாமிநாட்டாருக்கும் இவருக்கும் தொடர்பு ஏற்பட்டது.

பீட்டர்ஸ் உயர்நிலைப்பள்ளியில்

1922-ஆம் ஆண்டில் பீட்டர்ஸ் உயர்நிலைப்பள்ளி அதிகாரிகள் இவரைத் தம்பள்ளியில் ஆசிரியராக

அமர்த்தலாமா என்று எண்ணமிட்டார்கள். அதற்குரிய தகுதி இவரிடம் உண்டா இல்லையா என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே அவர்கள் கவியரசரைப் பார்த்து, "தாங்கள் பண்டிதர், வித்துவான் முதலிய தேர்வுகளுக்கு எழுதித் தேர்வடைந்திருக்கிறீர்களா?" என்று உசாவினர்கள். உடனே கவியரசர் "நான் அப்படித் தேர்வு எதற்கும் எழுதித் தேர்ந்ததாக எனக்கு நினைப்பில்லை. எனக்கு இவ்வேலையை ஏற்கத் தகுதியுண்டா என்பதை நீங்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டுத் திரும்பினர். பள்ளி யதிகாரிகள், "கரந்தையில் உள்ள வேங்கடாசலம்பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வுகளில் எழுதித் தேர்ச்சி பெற்றிருக்கிறாரா? அவர் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருப்பதற்கு தகுதியுடையவரா?" என்றுஎழுதிக்கேட்டார்கள். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார், "வேங்கடாசலம்பிள்ளை தமிழ்ச் சங்கத் தேர்வுகள் எதிலும் எழுதவில்லை. ஆனால் ஒரு பெரும் புலவர். தமிழ்ச்சங்கத் தேர்வாளர் தலைவராக இருக்கிறார்," என்று மறுமொழி யனுப்பினர்கள். மறுமொழியைப்பார்த்த பள்ளியதிகாரி கள், ஆள் பெரிய ஆளாக இருக்கிறார். இதனை முன்னரே அறியாமற்போனோமே என்று எண்ணி அவரைத் தமிழாசிரியராக ஏற்படுத்தினர்கள். இவர் வேலையற்ற சமயத்தில் அங்கு வேலைபார்த்துக்கொண்டிருந்த பொன் னண்ணு களத்தில்வென்றார் என்ற பெரும் புலவர் "நான் தலைமைத் தமிழாசிரியனாக இருக்கத்தக்க தகுதிவாய்ந்தவ னல்லன். வேங்கடாசலம்பிள்ளையே தலைமைத்தமிழாசிரிய ராக இருக்கத்தக்க தகுதி வாய்ந்தவர்" என்றுகூறித் தாம் கவியரசரின் கீழே வேலைபார்க்கத் தொடங்கினர்.

தெய்வச்சிலையார் உரை வெளியீடு

தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குத் தெய்வச்சிலையார் என்பவர் எழுதிய உரையொன்று இருந்தது. அதன் பிரதியை உ. வே. சாமிநாதையரிடம் இருந்து பெற்றுப் பரிசோதித்துக் கரந்தை தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிப்படுத்தினர்.

அரசர் கல்லூரியில்

1932-ஆம் ஆண்டில் கவியரசர் திருவையாற்றில் உள்ள அரசர் கல்லூரிக்குத் தமிழாசிரியராகச் சென்று அங்குப் பத்து ஆண்டுகள் வரை வேலைபார்த்தார். அரசர் கல்லூரியில் கல்விகற்ற மாணவர்கட்குக் கவியரசரின் பேரறிவு நல்விருந்தாக அமைந்தது. அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்தபோதும் தஞ்சைக்கு வந்து கரந்தைத் தமிழ்ச்சங்கப்பணி, நாட்டாரோடு உரையெழுதும் பணி ஆகியவைகளையுஞ் செய்தார்.

அறுபதாம் ஆண்டுவிழா

1942-ஆம் ஆண்டில் திருவையாற்று அரசர் கல்லூரியினின்றும் ஓய்வுபெற்ற பிறகு கரந்தையில் தங்கிச் சங்கச் சார்பில் நிகழும் புலவர் கல்லூரியில் தொண்டு செய்யலானார். நாட்டார் தலைவராகவும் கவியரசர் துணைத்தலைவராகவும் இருந்து தமிழ்ப்பணி புரிந்தனர். பின்னர்த் தலைவராகவும் இருந்து பணிசெய்தார். அப்பொழுது இவருக்கு அகவை அறுபது நிரம்பியது. அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக்கொண்டாட வேண்டுமென்று நண்பர்கள் முயற்சி செய்தனர். அப்போது சங்கத்தலைவராக இருந்த ஆ. யா. அருளானந்தசாமி நாடார், சங்க அமைச்சர் நீ. கந்தசாமிப்பிள்ளை, திரு. அ. கணபதிப்பிள்ளை, திரு. அ. பொன்னண்ணு களத்தில்வென்றார்,

திரு. தட்சிணாமூர்த்திப்பிள்ளை முதலியோர் பெருமுயற்சி செய்து விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். அப்பொழுது கவியரசருக்கு ஆறாயிரம் வெண்பொற் காசுகள் அன்பர்களிடமிருந்து திரட்டி வழங்கினர். கவியரசருக்குக், "கரந்தைக் கவியரசு" என்னும் சிறப்புப்பெயர் சங்க வெள்ளி விழாக் கூட்டத்தில் வழங்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஞானியாரடிகள் தலைமை தாங்கினார். பண்டிதமணி, கதிரேசன் செட்டியார் கவியரசுப் பட்டத்தை வழங்கினார்.

நகைச்சுவை

கவியரசர் மாணவர்கட்குப் பாடம் போதிப்பதில் பெருந்திறமைபெற்று விளங்கினார். மாணவர்கட்கு எளிதில் விளங்காத இலக்கணங்களையெல்லாம் கதைகளின் மூலம் விளக்கிவிடுவார். இவரிடம் நகைச்சுவை மிகுதியாக இருந்தது. எச்செய்தியுள்ளும் நகைச்சுவையைப் புகுத்திக் கேட்பவர்களை நகைக்கச் செய்துவிடுவார். இவர் கல்லூரிகளில் வேலைபார்த்தபோது மாணவர்கள் கருத்து முழுவதையுஞ் செலுத்தி இவர் கூறுவதைக் கேட்பார்கள். முதன்முதலாக இவர் வேலைபார்க்கச்சென்ற உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், இவர் வகுப்பில் பகடிசெய்து விளையாடிக் காலம்போக்கலாம் என்று எண்ணினார்கள். ஆனால் கவியரசர் தொடக்கத்திலேயே மாணவர்களுடைய அறிவை அறிவு வழியிலே திருப்பிவிட்டார்.

தெற்கத்தியான்

பள்ளி மாணவர்கள் கவியரசரின் ஊரைப்பற்றி ஆராயத் தொடங்கினார்கள். தெற்கேயுள்ள மோகனூர் என்று தெரியவே அவரைத் தெற்கத்தியான் என்று கேலிசெய்ய எண்ணினார்கள். ஒரு மாணவன் எழுந்து, "இவன் என்னைத் தெற்கத்தியான் என்று சொல்லுகிறான்" என்று

சொன்னான். கவியரசர் செய்தியை உணர்ந்துகொண்டார். அவர் உடனே பாடஞ் சொல்வதை நிறுத்திவிட்டு, "இங்குள்ள எல்லோருமே தெற்கத்தியார்கள்தாம். அஃதெப்படியெனில் தஞ்சைக்கு வடக்கேயுள்ள ஊர்க்காரர்கள் தஞ்சையில் இருப்பவர்களைத் தெற்கத்தியார் என்றுதானே சொல்வார்கள். சென்னையில் இருப்பவர்களை அதற்கு வடக்கேயுள்ளவர்கள் தெற்கத்தியார்கள் என்று சொல்லலாமல்லவா? இப்படியே பார்த்துக்கொண்டு சென்றால் வடதுருவக்கோடியில் இருப்பவர்களைத் தவிர மற்ற எல்லோரும் தெற்கத்தியார்கள்தாம். உன்னைத் தெற்கத்தியான் என்று சொன்னவனும் ஒரு தெற்கத்தியான்தான். ஆகையால் அதுபற்றி நீ கவலைப்படவேண்டாம்," என்று கூறினார். மாணவர்கள் தங்கள் வாலை மடக்கிக்கொண்டார்கள்.

கருஞாயிறு

திருவையாற்று அரசர் கல்லூரியிலே ஆண்டுவிழா ஒன்று நடந்தது. அதில் பேச்சாளராக இருந்த ரெட்டியார் ஒருவர் தமிழ்மொழியை இன்று 'செந்தமிழ்' என்று வழங்குவதால் ஒரு காலத்தில் இத்தமிழ் கொடுந்தமிழாகத்தான் இருந்திருக்கவேண்டும். மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளால்தான் தமிழுக்குச் சிறப்புண்டாகிறது" என்று பேசினார். இக்கூற்று கவியரசருக்குப் பிடிக்கவில்லை, இறுதியில் இவர் எழுந்து, "சூரியனை இன்று 'செஞ்ஞாயிறு' என்று நாம் கூறுவதால் அஃது ஒரு காலத்தில் கருஞாயிறாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று ரெட்டியார் அவர்களுடைய பேச்சால் உணர்ந்துகொண்டேன்," என்று கூறினார். அவையில் பலமான கைதட்டலும் ஆரவாரமும் உண்டாயின.

கரந்தையில் சாகை

ஒரு நண்பர் கவியரசரைப் பார்த்துத் தங்கள் இருப்பிடம் எங்கே என்று கேட்க எண்ணினர். ஆனால் இவ்வாறு கேளாமல், "தங்களுடைய சாகை எங்கே?" என்று கேட்டார். சாகை என்றால் இறப்பு என்றும் இருப்பிடம் என்றும் பொருள்படும். இதனை எண்ணிய கவியரசர் "எனது சாகை கரந்தையில்தான்" என்று கூறினர். கரந்தைத் தமிழ்ச்சங்கத்திடத்தில் பெரும்பற்றுக்கொண்டிருந்த கவியரசர் வேறு எங்கும் சென்று சாதலை விரும்பவில்லை. அவர் விருப்பப்படியே கரந்தையில்தான் காலஞ் சென்றார்.

சூட்டுப்போடுதல்

முதியவர் ஒருவர் கவியரசரிடம் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலச் சொற்களையும் கலந்து பேசும் வழக்கமுடையவர். தமக்குப் பணங்கொடுக்க வேண்டிய ஒருவர் அதனைக்கேட்டதும் கொடாதபடியால் அவர்மீது வழக்குப்போட எண்ணினர். இதனைக் கவியரசரிடம் சொல்லியபோது நான் சூட்டுப்போடப் போகிறேன் என்றார். [சூட்டு என்றால் வழக்கு என்றும் காற்சட்டை என்றும் பொருள்படும்.] இதனைக்கேட்ட கவியரசர் அந்த நண்பரைப்பார்த்து, "நீங்கள் இவ்வளவு முதியவராக இருந்துகொண்டு சூட்டுப்போட்டால் அது பார்வைக்கு நன்றாக இராது. சூட்டுப்போடுதல் இளைஞர்கட்குத்தான் நன்றாக இருக்கும்," என்று கூறினர். உடனிருந்த கவியரசரின் மாணவர்கள் விழுந்து விழுந்து நகைக்கத் தொடங்கிவிட்டார்கள். முதியவருக்கோ அவர்கள் நகைப்பதன் காரணம் விளங்கவில்லை. ஒருவர் விளக்கிய பிறகு தான் விளங்கியது. அதன் பிறகு அவரும் விழுந்து விழுந்து நகைக்கத்தொடங்கினர்.

பணமுடையேன்

கவியரசர் எப்பொழுதும், அஃதாவது பணம் தாராளமாக இருக்கும்பொழுதும், செலவுக்கு இல்லாமல் இருக்கும்போதும், "பணமுடையேன், பணமுடையேன்," என்றே சொல்லிக்கொண்டிருப்பார். ஒரு நாள் ஒரு நண்பர், "உங்களுக்குப் பணம் இல்லையா? முடையாக இருக்கிறதா? நான் ஏதாவது செலவுக்குத் தரட்டுமா?" என்று கேட்டார். அதற்குக் கவியரசர், "வேண்டாம்; நான் இப்பொழுது பணம் உடையேனாகத்தான் இருக்கிறேன் வேண்டாம்," என்றார். வேறொரு சமயம், "பணமுடையேன்-பணத்திற்கு முடைப்படுபவனாக இருக்கிறேன்." என்று விரித்தார்.

கவியரசு

ஒருநாள் கவியரசர் சிலரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அவர்களைப்பார்த்து,"எனக்குக் கவியரசு என்று பட்டப்பெயர் கொடுத்திருப்பதைப் பார்த்து நான் கவி பாடுவதில் சிறந்தவன் என்று நீங்கள் எண்ணிவிடாதீர்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் எனக்குக் கவியரசு என்று பட்டப்பெயர் கொடுத்ததற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம்: எங்களுடைய மோகனூரில் கவிந்த அரசமரம் ஒன்று இருக்கிறது. நான் சிறு பையனாக இருந்தபோது அடிக்கடி அந்த மரத்தின் நிழலிற் சென்று அமர்ந்து படிப்பது வழக்கம். இதனைப் பார்த்திருந்த யாரோ கரந்தைத் தமிழ்ச்சங்கத்தினரிடம் இச்செய்தியைச் சொல்லிவிட்டார்கள். தமிழ்ச் சங்கத்தார், கவிந்த அரசு என்கிற அந்தப் பெயரையே எனக்குப் பட்டப்பெயராகக் கொடுத்துவிட்டார்கள். மற்றொரு காரணம் என்ன என்பீர்களாயின்: என் வகுப்பு மாணவர்கள் அடிக்கடி என்னைக் குரங்கு என்று கேலிசெய்வது வழக்கம். (கவி= குரங்கு) இதனை உணர்ந்திருந்த சங்கத்தார் பொதுவாகக்

குரங்கு என்று சொல்வது நன்றாக இராது; குரங்குகளுக் கெல்லாம் அரசு என்று சொன்னால்தான் நன்றாக இருக் கும் என்று முடிவு செய்து இப் பட்டத்தை வழங்கினார் கள்,'' என்பார். இதனைக் கேட்பவர்கள் விழுந்து விழுந்து நகைப்பார்கள். கவியரசரின் உரையாடல் பெரும்பாலும் இவ்வாறு நகைச்சுவை மிக்கதாகவே இருக்கும். வீட்டில் தம் வாழ்க்கைத் துணைவியுடன் உரையாடும்போதும் நகைச்சுவை ததும்புமாறே பேசுவது வழக்கம்.

பாடல்

கவியரசர் எளிதாகவும் இனிமையாகவும் விரைவாக வும் பாடுவார். இவருடைய தனிப்பாடல்கள் கேட்பதற்கு நன்றாக இருக்கும். கவியரசர் திருவையாற்றில் இருக்கும் போது கோபாலன் என்னும் மாணவன் ஒருவன் காவிரி யில் நீந்தி விளையாடித் திரிகையில் தண்ணீரில் அமிழ்ந்தி இறந்தொழிந்தான். அவனுக்கு இரங்கற்பாவாகவும் மாண வர்கட்கு அறிவுரையாகவும் கவியரசர்,

“ நீரிலே தாவிமூழ்கி நீந்தியோ டித்திரிதல்
சீரிலாச் செய்கையெனச் செப்புங்கள்—பாரிலே
முன்னவன் சொல்லென்றே முந்துங்கள் என்றுமக்கே
சொன்னவன்கோ பாலனந் தோ ”

என்னும் வெண்பாவைப் பாடினார்.

இல்லறம்

கவியரசர் செகதாம்பாள் என்னும் பெண்மணியைத் திருமணம்புரிந்து, “ அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை, பண்பும் பயனும் அது,'' என்னும் திருவள்ளு வர் திருக்குறளுக்கோர் எடுத்துக்காட்டாக இல்லறத்தை இனிது நடத்திக் காட்டினார். இவருக்குச் சுப்பிரமணியன் என்னும் அருமைத் திருமகன் ஒருவன் தோன்றினான்.

இயற்றிய நூல்கள்

தமிழ்ப்பொழிலில் கவியரசர் அரிய கட்டுரைகள் பல எழுதினர். இவரால் எழுதப்பெற்ற நூல்கள்,

1. ஆசாறுற்றுப்படை
2. சிலப்பதிகார நாடகம்
3. மணிமேகலை நாடகம்
4. அகநானூறு உரை

முதலியன.

இறுதி

கவியரசர் தமது அறுபத்தேழாம் அகவையில் 1953-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் 16-ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். இக் கவியரசரிடங் கல்விகற்றவர்கள் பலர் இன்று சிறந்த நிலையில் உயர்ந்து விளங்குகின்றார்கள்.

கஉ. சிவகுருநாத பிள்ளை

தோற்றம்

ஈண்டிய புகழ்சேர் பாண்டிநன் னாட்டிலே, மட்டிலாப் புகழ்சேர் எட்டையபுரத்தில் சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை 1873-ஆம் ஆண்டிற் பிறந்தார். தந்தையார் பெயர் நமசிவாயம் பிள்ளை. தாயார் பெயர் மகாலட்சுமியம்மை. இவர் தோன்றிய குடி வேளாண்குடி. இக் குடியினர் எட்டையபுரத்துக் குறுநில மன்னர்தம் அரண்மனையில் சித்த மருத்துவத் தொண்டு செய்யுந் திறலினர்.

கல்விப் பயிற்சி

சிவகுருநாதர் அகவை எட்டு நிரம்பும் வரையில் எட்டையபுரத்தில் தமிழ்க் கல்வி கற்றார். பிறகு ஒட்டப்

பிடாரம் என்னும் ஊரையடைந்து அங்குத் தம் உறவின ராகிய அறம் வளர்த்தநாத பிள்ளை என்பவர் நடத்திய ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்ருர். அந்நாளில் இவரோடு ஒரே வகுப்பில் உடன் பயின்ற மாணவர்களுள் கப்பலோட்டிய தமிழன் என்று இப் பாரில் ஒப்பிலாச் சீர்த்திபெற்ற வ. உ. சிதம்பரனுரும் ஒருவராவர்.

தொழில்

1889, 1890, 1891-ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடியில் எஸ். ஏ. வி. பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்து தொண்டாற்றினுர். நுண்மாணுழைபுலம் மிக்க இவருடைய அறிவாற்றல் அந் நாளிலேயே பல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டது.

சமயக் கல்வி

சிவகுருநாதருடைய உள்ளம் சிவபெருமான்பால் அழுந்திய பற்றுடையதாக விளங்கியது. தந்தையார் பெயரோ நமசிவாயம். தம் பெயரோ சிவகுருநாதர். இவ் வாருகவும் இவர் மனம் இறைவன்பால் ஏகாதிருக்குமோ? இறைவழிபாட்டை மிகுதியாகக்கொண்டார். தக்கார்பால் சமயதீக்கை சிவபூசை முதலியவைகளை வரன்முறையாகப் பெற்ருர். தக்கார்பால் சிவப்பிரகாசம், சித்தியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களை முறைமையாகப் பயின்ருர். ஒருமுறைக்குப் பன்முறை பயின்ருர். உலகநூல் கல்வியால் ஏற்படும் பலன் மறுமைக்குப் பயன்படமாட்டாது. அறிவுநூற்கல்வியோ உயிரோடியைந்து மேன்மேலும் மேன்மையை அளிக்கும் விழுமிய பெருமை வாய்ந்தது. இதனை நன்குணர்ந்த சிவகுருநாதர் அறிவுநூற்கல்வியை நன்கு கற்ருர்.

அச்சகத்தொண்டு

1892-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் "சைவப் பிரகாசம் பிரசு" என்னும் அச்சகத்தை ஏற்படுத்தினார். 1944-ஆம் ஆண்டுவரை அதன் செயலாளராக இருந்து தொண்டு செய்தார்.

சோமசுந்தர நாயகர் தொடர்பு

சித்தாந்தத்தில் பற்றுக்கொண்ட சிவகுருநாதர் 1889-ஆம் ஆண்டுமுதல் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் உறுப்பினராக அமர்ந்து தக்க பணிபுரிந்தார். சைவ சித்தாந்த சபையின் வளர்ச்சிக்கு இவர் புரிந்த தொண்டுகள் பல. இவருடைய உழைப்பினால்தான் அச் சபை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந் தோங்கிச் சிறப்படைந்தது. சென்னை சூளையில் சைவ சித்தாந்த சண்டமாருதமாக விளங்கிய சோமசுந்தர நாயகர் 1887-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த சபையின் ஆண்டு விழாவுக்குத் தலைவராக வந்து சைவசித்தாந்தப் பேருரை நிகழ்த்தினார். அந்தப் பேருரையைக் கேட்ட பிறகுதான் சிவகுருநாதர் சைவசித்தாந்தத்தைப் பற்றத் தொடங்கினார். சைவசித்தாந்த நூல்களைச் சிவகுருநாதர் கற்றுணர்ந்ததும் சோமசுந்தர நாயகரிடமே. சோமசுந்தர நாயகர் திருநீறு அணிந்து கண்மணிமாலை புனைந்து பழுத்த சிவக்கோலத்தினராகக் காட்சியளிப்பார். அக்கோலமே சிவகுருநாதருக்கும் அமைவதாயிற்று. நாயகர் சைவசித்தாந்தத்தில் பெரு வன்மையுடையவர். அவ் வன்மை சிவகுருநாதருக்கும் அமைந்ததில் வியப்பொன்றுமில்லை.

சித்தாந்தப் பேராசிரியர்

சைவ சித்தாந்த நூல்களில் தக்கவாறு பயிற்சி பெற்ற சிவகுருநாதர் தக்கார்க்குச் சைவ சித்தாந்த நூல்களைக்

கற்பிக்கும் ஆசிரியராகவும் மாறினர். சைவ சித்தாந்தம் நாடெங்கும் பரவவேண்டும்; மக்கள் சிவநெறியைக் கடைப் பிடித்தல் வேண்டும்; நம் சைவ நூல்களைத் தக்காங்கு போதித்து மக்களை விழிப்படையச் செய்யாமையால்தான் புறச் சமயத்தினர் நம் நாட்டுக்குள் நுழைந்து தம் சமயத்தைப் பரப்பிச் சைவ சமயத்தினை அழிக்கின்றனர் என்னும் செய்தியை நன்குணர்ந்த சிவகுருநாதர் மற்றைய சித்தாந்த ஆசிரியர்களைப் போலின்றிப் பரந்த நோக்கமுடையராய்ச் சமயத் தொண்டு புரிந்தார். சைவ நூற்பயிற்சிக்கு முன்னர் இலக்கண இலக்கியப் பயிற்சி இன்றியமையாததெனக் கொண்டு முதற்கண் பொதுஅறிவு வளர்தற்கான நூல்களைக் கற்பித்தார். பிறகு சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சைவ நூல்களையும் ஆண் பெண் என்னும் மாறுபாடின்றி இரு பாலார்க்கும் பயிற்றிவந்தார். நூல் முடியும் போது தக்கவாறு விழா முதலியன நடத்தி நூலின் பெருமையை எல்லோரும் உணர்ந்து கொள்ளுமாறுஞ் செய்தார்.

சிறப்புப் பெயர்

சிவகுருநாதரின் சிந்தாந்தப் புலமையையும் போதிக்கும் முறைமையினையும் உணர்ந்த அன்பர்கள் சிவகுருநாதருக்குச் சிறப்புப் பெயர் வழங்க வேண்டுமென்று எண்ணினர். நெல்லை, மா. வே. நெல்லையப்ப பிள்ளை தலைமையில் தூத்துக்குடியில் கூடிய பேரவையில், “சித்தாந்த ஆசிரியர்” என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார், “சித்தாந்தப் பேராசிரியர்” என்னும் பட்டத்தை வழங்கினர்.

கழகத்தொண்டு

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் நிறைவேற்றுக் கழக உறுப்பினராகப்

பத்தாண்டுகள் வரை அமர்ந்து நல்ல தொண்டுகள் செய்தார்.

சொற்பொழிவுத்தொண்டு

சிவகுருநாதர் தமது வாணுளில் நிகழ்த்திய சைவ சித்தாந்த விரிவுரைகட்குக் கணக்கு வழக்கே இல்லை. எவ்வெவ் விடங்களில் சைவப் பேரவைகள் உள்ளனவோ அங்கங்கெல்லாஞ் சென்று சொற்பொழிவாற்றித் தொண்டு செய்தார். இவருடைய பணியைப் பெருத சைவப் பேரவை தமிழ் நாட்டில் இல்லை. 1936-ஆம் ஆண்டில் காஞ்சிமாநகரில் நடந்த சைவ சித்தாந்த மகாசமாசத்தின் முப்பத்தொன்ரும் ஆண்டு விழாவில் தலைமை தாங்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினர். பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்து இருபத்தேழாம் ஆண்டுவிழாவில் தலைமைதாங்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினர். 1938-ஆம் ஆண்டில் கொழும்புமாநகர் விவேகாநந்த சபையின் 25, 26-ஆம் ஆண்டுவிழாக்களில் தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றினர். 1939-ஆம் ஆண்டில் காரைக்கால் சைவ சித்தாந்த ஆசிரமத்தின் ஐந்தாம் ஆண்டு விழாவில் தலைமை தாங்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ஆராய்ச்சி

சிவகுருநாதர் சென்ற நாற்பது ஆண்டுகளில் பாடஞ் சொல்லிய காலங்களில் எழுதிவைத்த குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு 1941-ஆம் ஆண்டு மேத் திங்களில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அறநிலையங்களுள் ஒன்ருன தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில் நடந்த மெய்கண்ட சாத்திர மாநாட்டில், “சிவஞான சித்தியார் ஆராய்ச்சி” என்னும் பெயருடன் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். அச்

சொற்பொழிவு கழக அமைச்சர் திருவரங்கம் பிள்ளை முதலிய நல்லோர் பல்லோராலும் போற்றிப் பாராட்டப் பெற்றது. அதனை நூல்வடிவில் வெளிப்படுத்துதல் வேண்டும் என்றும் முடிவு செய்தனர். பிறகு 1949-ஆம் ஆண்டில் அச் சொற்பொழிவு நூல் வடிவாக வெளிவந்து சைவப் பெருமக்கள் பலரானும் போற்றப் பெறுகின்றது. சிவகுருநாதரிடம் இலக்கண இலக்கிய நூல்கள் சைவ சித்தாந்த நூல்கள் முதலியவைகளைப் பயின்ற மாணவர்கள் பலராவர்.

கட்டுரை

சிவகுருநாதர் கட்டுரை எழுதும் வன்மையும் அமையப் பெற்றவர். இவர் தாம் கண்ட புலவர்களைக் குறித்து ஓர் அரிய கட்டுரை எழுதிச் செந்தமிழ்ச் செல்வியில் வெளிப்படுத்தியதுடன் வேறு பத்திரிகைகளினும் கட்டுரைகள் வரைந்துள்ளார். இவருடைய உரைநடை இனிமையும் எளிமையும் அமையப் பெற்றது. மாதிரிக்குச் சிறிது காட்டுவாம்:

"ஓரறிவுடைய தாவரமுதல் ஆறறிவுடைய மனிதன் ஈறாக எல்லா உயிர்களும் இன்பந்தரும் பொருளை அடைவதில் அவாவுடையனவாகக் காண்கின்றோம். அவற்றினுள்ளும் மனிதனே அதன்கண் மிக நாட்டமுடையவனாயிருத்தலையும் அறிகின்றோம். துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை யடைய விரும்புதல் எற்றதொன்றேயாம். ஆயினும் இன்பம் தரும் பொருள் எதுவெனவும், துன்பந் தரும் பொருள் எதுவெனவும் அறிந்து கொள்ளும் ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் வாய்க்கக் காண்கின்றிலேம். தக்க தின்ன தகாதன இன்ன எனப் பகுத்துணரும் ஆராய்ச்சியாளரே அவ் விரண்டினையும் பகுத்துணர்தல் கூடும்."

"கடவுளையொத்த பொருள் வேறு ஒன்றுமில்லை. நாமும் அறிவுடைப் பொருள். கடவுளும் அறிவுடைப் பொருள். நாமும் (உயிரும்) நிலையுடைப் பொருள், கடவுளும் நிலை

புடைப் பொருள். நாமும் நிறையுடைப் பொருள், கடவுளும் நிறையுடைப் பொருள். நாம் இன்பத்தில் அவாவுடையோம். கடவுள் பேரின்ப வடிவினராய்ப் பேரின்பத்தை அளிக்கும் பொருளாயிருக்கின்றார்.”

இவ்வாறே இப் பெரியாருடைய கட்டுரை சிறப்புமிக்குடையதாய்த் திகழும்.

இறுதி

கடல்புடை சூழ்ந்த இப் பேருலகில் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்க அரும் பெருந் தொண்டுகள் செய்து கொண்டிருந்த இப் பெரியார் 1953-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் தம் எண்பத்தோராவது அகவையிலே மூன்று நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச், சிவபெருமானுடைய திருவடி நீழலைச் சேர்ந்தார்.

கள. பூவராகம்பிள்ளை

தோற்றம்

திருத்தில்லையில் வேளாளர் குலத்தில் வைணவசமயத்தில் ஆ. பூவராகம்பிள்ளை 1899-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இருபத்தேழாம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் ஆதிமூலம் பிள்ளை.

கல்வி

இளமையில் தில்லையில் உள்ள ஆறுமுகநாவலர் பள்ளியிலும், நடுநிலைப்பள்ளியிலும் தொடக்கக் கல்வியோடு சிறிது ஆங்கிலமுங் கற்றார். பிறகு பெருங்காலூர் என்னும் சிற்றூருக்குச்சென்று திண்ணைப் பள்ளியிற் சிறிதுகாலம் பயின்றார். பிறகு திருத்தில்லையை அடைந்து இராமாநுச தரிசன வித்தியாசாலையில் சேர்ந்து மிகுந்த ஊக்கத்துடன் பயின்றார். கல்வி பயிலும் மாணவர்கள் எல்லோரினும்

சிறந்தவராய்த் தலைமாணாக்கராக விளங்கினார். மேன்மேலும் கல்விகற்கும் ஊக்கம் மிகுதிப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

1917-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை அடைந்து அதிற்சேர்ந்து கல்வி கற்கலானார். அப்பொழுது திரு. நாராயண ஐயங்கார் அங்கு ஆசிரியராக அமர்ந்திருந்தார். ஐயங்கார் விரிந்து பரந்த பேரறிவும் பெரும் புலமையும் உடையவர். அவரிடம் கல்வி கற்றமையின் பூவராகனாருடைய புலமை நிலையும் தலைமை நிலையை அடையத் தொடங்கியது. பாலபண்டிதத் தேர்வில் தேர்வு எழுதி இரண்டாமவராகவும் வெற்றிபெற்றார். நோய்கள் சில இவரைப் பற்றிநின்றமையானே இவர் முதல்வராகத் தேறாது போயினர் என்ப.

ஆசிரியத்தொழில்

இவருடைய குடும்பம் ஏழ்மைநிலையில் இருந்ததால் மேலும் படிக்க இயலாதவராய் வேலைபார்த்துப் பொருள் தேடும் முயற்சியில் இறங்கினார். முதன்முதலாகத் திருப்பாதிரிப்புலியூர் நகரசபை உயர்நிலைப்பள்ளியில் ஆறு திங்கள் தமிழாசிரியராக வேலைபார்த்தார். வேலை பார்க்குங்கால் இவருடைய புலமைத்திறன் தலைமையாசிரியர் முதலியவர்களுக்கு மிகுந்த களிப்பை யுண்டாக்கியது. பிறகு மேலைச் சிவபுரியை அடைந்து கணேசர் செந்தமிழ்க் கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்தார். அந்நாளில் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் முதலிய அறிஞர்கள் பூவராகனாருக்கு நெருங்கிய நண்பர்களானார்கள்.

தமிழவேள் தொடர்பு

தமிழவேள் உமாமகேசுவரன்பிள்ளை, பூவராகனாருடைய அறிவாற்றல் சொல்வன்மை முதலியவைகளை நன்

குணர்ந்து மிகுந்த பற்றுக்கொண்டார். இருவருக்கும் நண்புண்டாகி நாளும் வளர்ந்தோங்கியது. கரந்தைத் தமிழ்ச் சங்கப்பணிகளிலும் பூவராகனுர் பங்குகொண்டார். கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்கள் எல்லாவற்றிலும் பூவராகனுருடைய சொற்பொழிவு இடம்பெறும்.

புலவர்பயிற்சிக்கல்லூரியில்

மேலேச் சிவபுரியை நீங்கித் தில்லையை அடைந்தார். புலவர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தேறினுர்.

படிப்பும், ஆசிரியத்தொழிலும்

பிறகு தந்தையாருடைய விருப்பப்படி சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து ஆசிரியத் தொழில்புரிந்து வந்ததோடு கல்விகற்றலையும் மேற்கொண்டு தமிழ் வித்துவான் தேர்வுக்குரிய நூல்களையும் பயின்றுர். 1928-ஆம் ஆண்டில் வித்துவான் முதல்நிலைத் தேர்வுக்கு எழுதித் தேர்ச்சிபெற்றுர். பிறகு 1930-ஆம் ஆண்டில் வித்துவான் இறுதிநிலைத் தேர்வுக்குச் சென்று முதல்வராகத் தேறினுர். அதனுல் திருப்பனந்தாள் காசிமடத்தார் வழங்கும் ஆயிரம் வெண்பொற்காசுகளையும் அடைந்தார்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில்

1929-ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் உருப்பெற்றது. அக் கழகத்தின் புலவர் பயிற்சிக் கல்லூரியும் புகுமுக வகுப்பும் தில்லையில் இருந்தன. 1930-ஆம் ஆண்டில் பூவராகனுர், இக் கல்லூரிகளின் ஆசிரியராக அமர்ந்து திறமையாகப் போதனைபுரிந்தார். பிறகு 1938-ஆம் ஆண்டில் புலவர் வகுப்புகட்கு ஆசிரியரானுர். இவருடைய போதனை மிகுந்த திறமை வாய்ந்தது. ஒரு

முறை ஒரு செய்தியைக் கூறுவாராயின் கேட்பவர் மறு முறை அதனைக் கேட்கவேண்டாத முறையில் விளக்கமாக உணர்ந்துவிடுவர். இவரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் பலர் சொல்லாற்றலும் அறிவுநலமும் மிக்கமைந்தவர்களாய் இன்று உயர்ந்த நிலையிற் சிறந்து விளங்குகின்றனர்.

எத்துறையிலுஞ்சிறந்தவர்

இவர் போதனைத்திறம் ஒன்றுமட்டுமன்றிக் கேட்டார்ப் பிணிக்குந்தகையவாகவும் கேளாரும் வேட்பவும் பேசுதல் வல்லவராகவும் உரைநடைகள் எழுதும் திறமை மிக்கவராகவும் ஆராய்ந்து நூல்களைப் பதிப்பித்தலில் வல்லவராகவும் உரைகளைச் சீரிய முறையில் விளக்கமாக எழுதத்தக்கவராகவும் விளங்கினர்.

குணநலம்

பூவராகனர் சிறந்த அறிவாளியாக விளங்கினும் பெருமிதத்தை மேற்கொண்டவரல்லர். அடக்கத்தையும் அமைதியையும் அணிகலனாகக்கொண்டிருந்தார். எப்பொழுதும் நூல்களைப் படிப்பதே இவருக்கு இனிமையான பொழுதுபோக்கு. மாணவர்கள் பலவகையாக இருப்பர். சிலர் ஆசிரியர்களைக் கேலிசெய்பவர்களாகி விளங்குதலும் உண்டு. பூவராகனருடைய மாணவர்கள் அவருடைய பெயரைத் தமிழில் மொழிபெயர்த்து "நிலப்பன்றி" என்று கூறுதலும் உண்டு. பூவராகனர் பொறுமையிற் சிறந்தவராதலின் அதற்குஞ் சினங்கொள்ளாதிருப்பர்.

இவர் இயற்றிய நூல்

இவர் கட்டுரைகள் பல எழுதியதோடு தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனவரைய உரைக்கு விளக்கவுரையும் எழுதி வெளியிட்டார். மற்றும் இவர் செய்த நூல்கள் சில.

இறுதி

இவ்வாறு சிறந்து விளங்கிய இவர் 1953-ஆம் ஆண்டு மேத்திங்கள் இருபத்தேழாம்நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து வைகுந்த பதவிபெற்றார்.

கஅ. செவ்வந்திநாத தேசிகர்

தோற்றம்

செவ்வந்திநாத தேசிகர் என்பவர் ஈழவள நாட்டிலே கரணவாய் என்னும் ஊரிலே 1907-ஆம் ஆண்டு (பிலவங்க ஆண்டு ஆனித்திங்கள் இருபத்து மூன்றாம்நாள்) பிறந்தார். தந்தையார்பெயர் திருஞான சம்பந்த தேசிகர். தாயார் பெயர் சிவபாக்கியம் அம்மையார். இவர் தோன்றிய மரபு சைவ ஆசாரிய மரபு.

கல்வி

செவ்வந்திநாத தேசிகர் பிறந்த ஒன்றரையாண்டுக்குள் தந்தையார் சிவகதி அடைந்தனர். பிறகு செவ்வந்திநாத தேசிகர் தம் தந்தையாருடன் பிறந்தவராகிய நமசிவாய தேசிகர் என்பவரால் வளர்க்கப்பெற்றார். சிறிய தந்தையராகிய நமசிவாய தேசிகர் செவ்வந்திநாத தேசிகருடைய கல்வியிலே மிகுந்த கருத்துச் செலுத்தினர். தொடக்கத்தில் தாமே கல்விகற்பித்தார். பிறகு சுன்னாகத்திலே ஏற்படுத்தப்பட்ட கல்விநிலையத்திற்குச் சென்று வடமொழி தென்மொழிஎனும் இருமொழியையுந் திடமுடன் கற்றுப் புலமைத் தேர்விலும் தேறினார். அப்பாடசாலையில் சிதம்பர சாத்திரி என்னும் வடமொழி வல்லுநர் வடமொழி ஆசிரியராக இருந்தார். சி. கணேச ஐயர் என்னுஞ் செந்தமிழ் அறிஞர் தென்மொழியாசிரியராக இருந்தார். செய்யுளியற்றல்

உரைநடை எழுதல் முதலியவைகளில் தேசிகர் திறம் மிகு தியும் அமையப்பெற்றிருந்தார். பள்ளியிற் கற்குங்காலத் திலேயே இவருடைய திறமையை உடன்கற்கும் மாண வரும் பிறரும் பாராட்டி இவரை நக்கீரரெனச் சிறப்பித் துரைத்தனர். தேசிகர் பள்ளிப்படிப்போடு மனநிறைவு கொண்டு நின்றுவிடாமல் மீமாம்சை, சித்தாந்தம் முதலிய வைகளையும் நன்கு கற்றுத் தேறினர்.

கலைத்தொண்டு

பலருக்குங் கல்விகற்பிக்க வேண்டுமென்னும் பேரவா இவருடைய உள்ளத்திலே தோன்றி வலுப்பெற்றது. சில ருடைய உதவியைக்கொண்டு 1929-ஆம் ஆண்டில், "கரண வாய் வேதாரணியேசுர விதாலயம்" என்னும் கல்விச்சாலை தொடங்கப்பட்டது. அதன் உறுப்பாக, "வித்தியா பிவிருத்திச்சங்கம்" படிப்பகம் முதலியனவும் அமைக்கப் பட்டன. மேலும் தேசிகர் சங்கங்கள் பலவற்றினும் விரி வுரைகளாற்றினர். பத்திரிகைகட்குக் கட்டுரைகள் வரைந் தார். நூல்கள் எழுதினர். உயர்நிலைப்பள்ளிகளில் இலக் கியம் பயில்வார்கட்குத் துணை செய்யும்பொருட்டுத் தமிழில் இலக்கியக் குறிப்புகளையெழுதி தமிழாசிரிய உலகுக்கு முதன்முதல் உதவிய பெருமை இவரையே சாரும். நல்லைச் சின்னத்தம்பிப்புலவரால் இயற்றப்பட்ட கரவை வேலன் கோவையை அச்சிடுதற்குச் செப்பஞ் செய்து கொடுத்தார்.

நூல்கள் வெளியிடல்

தாம் இயற்றிய சில நூல்களைப் பதிப்பித்து வெளி யிட்டதுடன், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் நூல்களை யும் அச்சேற்றினர்.

திருமணம்

1932-ஆம் ஆண்டில் பவானியம்மை என்னும் மாதைத் திருமணம்புரிந்தார். அம்மாதிடம் சேயொன்று தோன்றியதாயினும் தாயுஞ்சேயுஞ் சிவகதியடைந்தனர்.

நூல்கள்

1. தமிழ்மொழி ஆராய்ச்சி
2. முருகன் மும்மணிக் கோவை
3. முருகன் கோவை (நல்லைக்கோவை)

முதலிய நூல்களை இவர் இயற்றினர். இரண்டு அச்சேறின. ஒன்று அச்சேறவில்லை.

இறுதி

இப்பெரியார் தமது முப்பதாம் அகவையிலேயே 1937-ஆம் ஆண்டு (ஈசுவர ஆண்டு ஆவணித்திங்கள் பதினேழாம் நாள்) இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவருடைய மறைவு குறித்துப்பலர் இரங்கற்பாப் பாடி வருந்தினர்.

சி. கணேசையர்

"வடமொழி தென்மொழி யாய்ந்திடும் பண்டித மாமணியாய்த்
திடமொடுஞ் செந்தமிழ் நாட்டினுக் கோர்பெருந் தீபமெனச்
சுடர்குவை என்றிவ் வுலகோர் இருக்கச் சுவர்க்கமுற்றே
அடர்பெருந் துன்பத்தை ஆக்கினை செவ்வந்தி யார்மணியே."

க. கந்தையா

"அச்சூரு மாவையின் மும்மணிக் கோவை அதிநுணுக்கம் |
வைச்சூர் தமிழ்வா லாறிவை யாக்கிநல் வையகத்தோர்
மெச்சூர் தலைக்கொள்ளு நல்லையிற்கோவை விளம்பியுன்றன்
கைச்சாத் துடன்தரு செவ்வந்தி நாதக் கலைக்கடலே."

கக. முத்துசிவன்

தோற்றம்

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பேராசிரியராக விளங்கியிருந்த ஆ. முத்துசிவன் 1910-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் பதினைந்தாம் நாள் திக்கெலாம் புகழும் தென் பாண்டிநாட்டிலே திருநெல்வேலியிலே தோன்றினர்.

கல்வி

தொடக்கப் படிப்பு முதலியவைகளைப் படித்து முடித்தபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்சேர்ந்து கல்வி கற்று 1935-ஆம் ஆண்டில் பி. ஏ. ஆனர்சுத் தேர்வில் தேறினர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற நாளையில் அங்கே பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை முதலிய பேரறிஞர்கள் தமிழாசிரியர்களாக அமர்ந்திருந்தனர். இத்தகைய அறிஞர்களிடம் கல்வி கற்றுத்தேறிய முத்துசிவன் பெரும்புகழடைந்து விளங்கியது இயற்கையே.

ஆசிரியத் தொழில்

கல்வியைக் கற்றுத்தேறிய முத்துசிவன் வாழ்க்கைத் துறையில் இறங்கினர். வாழ்க்கையைச் செலுத்துவதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றன்றோ? முத்துசிவன் ஆசிரியத்தொழிலில் இறங்கினர். திருநெல்வேலியில் உள்ள மதுரைத் திரவியம் தாயுமானர் இந்துக் கல்லூரி, புதுவயலில் உள்ள சரசுவதி வித்தியாசாலை முதலியவைகளில் ஆசிரியராயிருந்தார். பிறகு காரைக்குடியில் அழகப்பா கல்லூரி ஏற்பட்டபின், அதில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து இறுதி வரையில் பணிபுரிந்தார்.

தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு.

முத்துசிவன் தமிழ் வளர்ச்சிக்குத் தக்க ஆக்கவேலை புரிந்தார். எல்லா மொழிகளின் இலக்கியங்களும் நன்கு வளர்ந்து சிறப்படைந்திருக்க நமது தமிழ் இலக்கியம் மட்டும் போதிய வளர்ச்சிபெறாமல் குன்றியிருக்கிறதே என்று உளம்நைந்தார். வியக்கத்தக்கவாறு பெருவளர்ச்சி பெற்றுள்ள ஆங்கிலம் முதலிய மொழிகளின் துணையைக் கொண்டு தமிழ்மொழியை நன்றாக வளர்க்கவேண்டும் என்பது இவருடைய உயரிய நோக்கமாக இருந்தது. தமிழாசிரியர்கள் மதிப்புக் குறைந்தவர்களாகப் பிறரால் எண்ணப்பெறுவதினின்றும் தடுத்துத் தமிழாசிரியர்களை யும் தமிழ்மொழியையும் ஆங்கிலமொழிக்கு நிகராக்க வேண்டுமென்று அதற்குத்தக்க முயற்சிகளை இறுதி வரையிற் செய்துகொண்டேயிருந்தார். தமிழ்மொழியை யும் தமிழ் கற்பவர்களையும் தமிழாசிரியர்களையும் எவரே னும் சிறுமைப்பட எண்ணுகிறார்கள என்று உணர்ந்தால் அவர்களுக்குத் தக்கவாறு சூடுகொடுப்பதற்கு இவர் சிறி தும் தயங்கமாட்டார். புதிய முறையில் நூல்கள் பல வற்றை எழுதி வெளிப்படுத்தினர்.

சொல்லாற்றல்

கல்வியை நன்கு கற்றவர்கள் எல்லோருமே சொல் லாற்றல் மிக்கவர்களாக அமைந்து விடுவதில்லை. சிலர், "வழவழ" வென்று பேசித் தமது கருத்தை நன்கு வெளிப்படுத்தமுடியாமல் திணறுவர். சிலர் பிறருக்கு விளங்காத வகையிற் பேசுவர். சிலர் பேசுவது பிறர் செவிக்கு இன்னாதனவாகவும் இருக்கும். முத்துசிவன் நன்கு சொல்லாற்றல் அமையப் பெற்றவராக விளங்கினர். பொதுமக்கள் கூடிய பேரவையிற் சொற்பொழிவு செய்யத் தொடங்கினும், கல்லூரியில் மாணவர்கட்குப் பாடம்

போதிக்கத்தொடங்கினும் கேட்டார்ப் பிணிக்குந்தகைய வாகவும் கேளாரும் வேட்பவும் மொழியும் பண்பாடும் இவரிடத்தில் நன்ருக அமைந்திருந்தன. எத்தகைய கடுமை யான செய்தியையும் இனிமையாகச் சொல்லி முடித்துக் கேட்பவர் மகிழ்ச்சியடையுமாறு செய்து விடுவார்.

பொதுவான பண்பு

தமிழ் கற்றவர்களை மற்றவர்கள் இழிவாக எண்ணு தல் கூடாது என்னும் எண்ணத்தோடு இவர் தமது நடை யுடை பாவனை முதலியவைகளைச் சிறப்பாகக்கொண்டு ஒழு கிஞர். பிறர், தமக்குச் சிறுமையுண்டாகுமாறு பேசிவிடி னும், இவர் அவ்வாறு பேசியவர்களுடைய மனம் நோகு மாறு உரையாடமாட்டார். எத்தகையாரோடும் அன்புட னேயே பழகுவார். மாணவர்களிடத்தில் மிகுந்த பற்றுக் கொண்டு அவர்கள் கல்வியில் முன்னேறுவதில் தமது முழுக்கருத்தையுஞ் செலுத்திஞர். மற்றவர்களிடம் பேசும் போது தமது கருத்துவெளிப்படுவதற்காகவேண்டிய அளவு மட்டும் பேசுவார். நீண்ட உரைநடையமையப் பேசுபவர் களைக் கண்டால் "தங்களுடைய திருவாய்மொழி தென் குமரிக்கும் திருவேங்கடத்திற்குமாக நீண்டு விளங்குகிறது; பிற்பகுதியைக் கேட்பதற்குள் முற்பகுதி மறந்துபோய் விடுகிறதே. முன்பு என்ன சொன்னீர்கள்?" என்று நகைச் சுவையுடன் பேசுவார். பேசுபவர் கருத்தமைந்த சிறிய சிறிய உரைநடைகளாகப் பேசவேண்டுமென்பது இவருடைய எண்ணமே தவிர மற்றவர்களை இகழ்ந்துரைப் பது இவருடைய நோக்கமன்று. பாடஞ்சொல்லும் வகுப் பிலும் மாணவர்கள் மகிழுமாறு பேசித் தமிழை நன்கு கற்றுக்கொள்ளுமாறு செய்துவிடுவார். இவருடைய சொற் றிறத்தின் இனிமையைக் கண்டே ஈழநாட்டினர் இரண்டு

மூன்றுமுறை ஆங்கழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தனர்.

பா இயற்றல்

பா இயற்றுதலிலும் இவர் தேர்ந்து விளங்கினர். பாரதியார் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பாடினர். புத்தகச் சில செய்யுட்களை இயற்றினர். மழையைக் குறித்து இவர் இயற்றிய செய்யுட்களில் இரண்டைக் கீழே காண்க.

"பன்னரு நலங்கள் கோடி உலகிடைப்பரப்பி னாலும்
உன்னிடங் குறைகள் உண்டு உரைக்குவன் அவற்றைக் கேட்டி
நன்னய மான சேவை நலத்தினில் ஆர்வம் மிக்காய்
இன்னமும் சேவைக் குற்ற இரகசியம் தெரிய வில்லாய்."

"வேண்டிய இடத்து பெய்யாய் விரும்பிய போதும் பெய்யாய்
யாண்டும்நீ மாந்தர் நாட்டம் ஏற்றிடுந் தன்மை இல்லாய்
ஆண்டுதோ றுன்னே டுற்ற அவத்தைகள் கொஞ்சம் அல்ல
பூண்டநின் நெறியில் உள்ள புரையினைப் புகலக் கேளாய்."

நூல்கள் இயற்றல்

தமிழ் வளர்ச்சியிற் பேருக்கம்கொண்ட இவர், நூல்கள் சிலவற்றை எழுதினர். இவருடைய இலக்கியங்கள் புதுமையும் பண்பும் அமைந்தனவாக மிளிர்கின்றன. "நூல்களை எழுதியவுடன் வெளியிட்டு விடுதல்கூடாது. ஓர் ஆறுதிங்களுக்காவது அந்நூலை எழுத்துப் படியாகவே வைத்திருந்து பிறகு எடுத்துப் படித்துப் பார்த்துச் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்த பிறகே பதிப்பித்தல் வேண்டும்," என்பது இவருடைய கொள்கை. இக்கொள்கை போற்றிப் பாராட்டத்தக்கது என்பதை நூலாசிரியர்கள் அனைவரும் ஒரே மனதுடன் ஒத்துக்கொள்வர். ஆறுதிங்கள் வரை இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சிச் செய்தி, புதுச்செய்தி முதலியன நூலிற்சேர்ந்து நூல்

அழகு பெறுமென்பது உறுதி. இதனை நூலாசிரியர் பலரும் தமது நடைமுறை வழக்கத்திலும் நன்ருகக் கண்டிருக்கலாம்.

1. அசோகவனம்
2. கவிதையும் வாழ்க்கையும்
3. அசலும் நகலும்
4. மின்னற் கீற்று
5. மேடைக்கலை
6. கவிதை
7. அமரகவி பாரதி
8. மதம் வேண்டுமா ?
9. நடராச தத்துவம்

என்பன வெளிப்படுத்தப்பட்ட நூல்கள். வெளிப்படா மலும் சில நூல்கள் இருப்பதாகத் தெரிகிறது.

இறுதி

நாற்பதாண்டுகளே நிறையப்பெற்றவராகிய இவர் 1954-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்து மூன்ரும் நாள் காரைக்குடியில் மார்படைப்பினுல் கால மானுர். இவருக்கு இருபதாவது அகவையில் திருமணம் நடைபெற்றது. ஆண் பெண் மக்கள் எண்மர் மக்கட் செல்வமாக அமைந்துள்ளனர்.

உ௦, சங்கர சிந்தாமணிப் புலவர்

தோற்றம்

பாண்டிவளநாட்டிலே மதுரைக்குப் பக்கத்திலே ஒரு சிற்றூரிலே சங்கர சிந்தாமணிப் புலவர் தோன்றிக் கல்வி கற்றுச் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். கல்விச் சிறப் பிணல் சிறந்து விளங்கிஞரேனும் செல்வச் சிறப்பாற் சிறந்து விளங்கவில்லை. வறுமை அவரைப் பற்றிக் கொண்டது.

வாழ்க்கை

பரிசில் வாழ்க்கையையே மேற்கொண்டு காலங்கழித் தார். பக்கத்து ஊரிலே இருந்த ஒரு செல்வன்மீது பல பாடல்களை இயற்றிக் கொண்டுபோய்ப் பாடினர். அச் செல்வனுக்குப் பணம் இருந்ததே தவிர அறிவு கிடையாது. விலைமாதர் மோகத்திலே மூழ்கி, அவன் விலைமாதர்களையே பெரிதும் போற்றிப் பாராட்டிக்கொண்டிருந்தான். அவ னுடைய தன்மையைக் கண்ட இவர்,

"குணமிருந்தாலும் குலமிருந் தாலுங் கொழுந்தமிழின்
மணமிருந்தாலும் மதியிருந் தாலும் வழுத்திடுவங்
கணமிருந்தாலும் ஓர்காசும் பெறுதுசிங் காரவரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரும் அஞ்சலி பண்ணுவரே."

என்று இகழ்ந்து பாடிவிட்டுத் திரும்பினர்.

போடிக்குச் செல்லுதல்

அக்காலத்தில் போடிநாய்க்கனூரில் இருந்த பெரு நிலக்கிழார் புலவர்கட்குப் பொருளுதவி செய்து, அவர் களுடைய அல்லலைப் போக்கும் வள்ளலாக இருந்தார். சிலர் சிந்தாமணிப் புலவரைப்பார்த்து, "நீங்கள் இவ்வாறு ஏன் தொல்லைப்படுகிறீர்கள்? எவ்வளவு நாளைக்கு இப்படி அல்லற்பட முடியும்? போடிநாய்க்கனூர் துரையவர்கள்

புலவர்க்குப் பொருள் வழங்கி வறுமையைப் போக்கு கிறார்கள். நீங்கள் ஒருமுறை போடிநாய்க்கனூர்க்குப் போய் அவர்களைப் பார்த்தால் உங்கள் வறுமைப்பிணி இருந்த இடங்கூடத் தெரியாமல் தொலைந்துபோகும். ஆகையால் ஒருமுறை போய்ப்பார்த்துவிட்டு வாருங்கள்," என்று சொல்லி வற்புறுத்தினார்கள். புலவர் முதலில் இணங்கவில்லை. பிறகு போய்த்தான் பார்த்துவிட்டு வரு வோமே என்று முடிவுசெய்து புறப்பட்டுப் போடிநாய்க்க னூரையடைந்தார். வழியில் உணவு யாதும் கிடைக்காமல் பட்டினியும் பசியுமாகச் சென்றார். புலவர் சென்றபோது சமீன்தார் ஊரில் இல்லை. பழநியாண்டவனைக் கண்டு வணங்கும் பொருட்டுப் பழநிக்குச் சென்றிருந்தார். புலவர் அவர் திரும்பிவரும் வரையில் காத்திருப்பதென்று முடிவு செய்து காத்திருந்தார். ஊரார்களிடம் சமீன்தாருடைய குணநலங்களைக் குறித்து உசாவினார். எல்லோரும், "எங் களுடைய சமீன்தார் கன்னனுக்குப் பின்பு நிலவுலகில் தோன்றிய கொடையாளி இவர்தாம். உங்களுடைய வறுமை இனிமேல் அடியோடு ஒழிந்துபோகும். உங்க ளுடைய நல்ல காலந்தான் இங்குவந்து சேர்ந்தீர்கள்," என்று பலவாறு புகழ்ந்து கூறினார்கள்.

சூழ்ச்சியும், எதிர்ச்சூழ்ச்சியும்

புலவர் சமீன்தார் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருந்தார். இன்னுஞ்சில நாட்களில் சமீன்தார் வந்து சேரப்போகிறார் என்று செய்தி தெரிந்தது. சமீன்தார் அறிவாளியாகவும் வள்ளலாகவும் இருப்பதால் தமது வறுமையைத் திறமையாகக் கூறவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு, சமீன்தார் வரும் வழியில் எதிர்நோக்கிச் சென்றார். வெகு தொலைக்கு அப்பால் காடாக உள்ள ஓர்

இடத்தைப் பார்த்து நின்றுகொண்டிருந்தார். சமீன்தார் தம்முடைய கூட்டத்தார்களோடு பல்லக்கிலே வந்து கொண்டிருந்தார். சமீன்தாரைக் கண்டதும் புலவர், "புலி! புலி!! ஐயோ பாழும் புலி என்னைத் துரத்துகிறது! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று அலறிக் கொண்டு எதிரே ஓடினார். இவருடைய நிலையைக் கண்டதும் சமீன்தாரும் அவரோடிருந்த பணியாளர்களும் ஒரு கணப்பொழுது திகைத்துப்போனார்கள். சமீன்தார், "எங்கே? எங்கே?" என்று கேட்டார். உடனே புலவர்,

"பையா டரவணி சொக்கேசர் கூடல் பதியைவிட்டு
வையா புரிக்கு வரும்வழி யேவழி தான்மறித்து
மெய்யா வறுமைப் புலிதான் மிகவும் வெருட்டுகின்ற(து)
ஐயாதென் போடை அதிபா புலவர்க் கருள்நிதியே."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினார். சமீன்தார் தமது திறமையைப் பாராட்டுவார் என்பது புலவர் எண்ணம். புலவருடைய சூழ்ச்சியைக் கண்ட சமீன்தார் தாமும் ஒரு எதிர்ச்சூழ்ச்சியைக் கையாள்வதென்று ஒரு கணத்தில் முடிவு செய்துவிட்டார். பக்கத்திலிருந்த ஓர் ஆளைப் பார்த்துப், "பிடி இந்த மனிதனை," என்று கட்டளையிட்டார். அவன் அவ்வாறே பிடித்துக்கொண்டான். "கொண்டு போய் நமது காவல் கூடத்திலே போட்டுப் பூட்டிவை. நாம் சொல்லுகிறபொழுது அழைத்துவா; வறுமைப் புலிக்குத் தகுந்த பாடங்கற்பிக்கிறேன்," என்று சொல்லிக் கனைத்தார்.

புலவர் அச்சம்

சமீன்தார் சொல்லிய மாதிரியைப் பார்த்துப் புலவர் கிடுகிடென்று நடுங்கிவிட்டார். அந்தோ நம் சூழ்ச்சி வீழ்ச்சியாகிவிட்டதே. "அகலா தணுகாது தீக்காய்வார்

போல்க, இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்," என்று திருவள்ளுவதேவர் கூறியிருப்பதை நன்குணர்ந்தும் அதனைக் கடைப்பிடிக்கத் தவறி இவரிடம் நெருங்கிவந்து அகப்பட்டுக்கொண்டோமே, "அரசனும் பாம்புஞ்சரி," என்பது உண்மையாகிவிட்டதே. இவர் பார்த்து நம்மை என்னவேண்டுமானாலுஞ் செய்யலாம் அன்றோ? இவர் ஒரே அடியாக நம்மைக் கொன்றால்கூடக் கேள்வி முறையேது? இவர் அரண்மனையில் இருக்கும்போது நாம் இவ்வாறு நடந்திருந்தால் ஒருவேளை நம்மை இவர் பாராட்டியிருந்தாலும் இருக்கலாம். வழிப்பயணத்தில் களைப்படைந்து காட்டு வழியாக வந்துகொண்டிருக்கும்போது நாம் வந்து மாட்டிக்கொண்டதுதான் தவறாக முடிந்துவிட்டது," என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

புலவரைப் போற்றுதல்

நாட்கள் சில சென்றன. சமீன்தார் பார்க்கவேண்டிய அலுவல்களையெல்லாம் கவனித்துவிட்டு ஒருநாள் புலவரைத் தமக்குமுன் அழைத்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டார். அப்பொழுது அவருடைய அவைகூடிப் பலருங் குழுமியிருந்தனர். புலவரை அழைத்துக்கொண்டுவந்தவன் சமீன்தாருக்குமுன் நிறுத்தினான். சமீன்தார் தம் பக்கத்தில் நின்ற வேலைக்காரனைப் பார்த்து, "நாம் பழநியில் இருந்து வந்துகொண்டிருந்தபோது வழியில் ஓடிவந்து, "புலி புலி" என்று கூறி நம்மையும் நம்கூட இருந்தவர்களையும் அச்சுறுத்தி நடுங்கச் செய்தவர் இந்த மனிதர் தாமா?" என்று கேட்டார். அவ் வேலைக்காரன், "ஆம்; இவர்தாம்," என்று மறுமொழி கூறினான். உடனே சமீன்தார் புலவரைப் பார்த்து. "நீர் ஏன் அவ்வாறு வந்து

அச்சுறுத்தினீர்?" என்று கேட்டார். புலவர் சமீன்தாரைப் பார்த்து, "நான் மிக வறியவன். வறுமையினால் பெருந் துன்பத்தையடைந்தேன். வறுமையின் கொடுமை தாங்க முடியவில்லை. அச்சத்தை விளைவித்து என்னை வாட்டி வருத்தி எப்பொழுதும் அச்சுறுத்திக்கொண்டிருந்த வறுமையையே புலி என்று குறிப்பிட்டேன். துரையவர்கள் தவறாக எண்ணிவிட்டீர்கள். இவ்வாறு வறுமையை நான் புலியாக உருவகப்படுத்திக் கூறினால் துரையவர்கள் மகிழ்வீர்களென்றே கூறினேன். அடியேன் செய்த தவற்றினைப் பொறுத்தருளவேண்டும்," என்று சொல்லி வேண்டிக் கொண்டார்.

சமீன்தார் புலவரைப் பார்த்து, "செய்ததையும் செய்துவிட்டுப் பொறுத்தருளவேண்டுமென்றா சொல்லுகிறீர்?" என்றுகூறி அதட்டினார். ஓர் ஆளைப்பார்த்து, "அவருடைய இடுப்புத்துணியைப் பிடுங்கு." என்று கூறினார். அந்தஆள் அப்படியே பிடுங்கினான். அது பல தையல்களையும் பொத்தல்களையும் உடையதாக இருந்தது. அதைப் பந்துபோற் சுருட்டித் தமக்கு முன்னுள்ள பலகைமீது வைக்கச் சொன்னார். ஆள் அப்படியே வைத்தான். சமீன்தார் துப்பாக்கியைக் கையில எடுத்தார். புலவர் நம்மைத்தான் சமீன்தார் சுடப்போகிறார்போலும் என்று எண்ணி நடுங்கினார். மறுகணம், "டுமீல்" என்று ஒலியுண்டாயிற்று. அந்தக் கந்தைதான் சுடப்பட்டது.

சமீன்தார் எழுந்தார்; புலவர் கையைப் பிடித்துத் தழுவிக்கொண்டார். பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த இருசரிகை ஆடைகளை எடுத்துக்கொடுத்துக் கட்டிக்கொள்ளச் சொன்னார். புலவர் அவ்வாறே கட்டிக்கொண்டார். பிறகு அவரை ஒரு நாற்காலியில் உட்காரவைத்து உரையாடினார்.

"புலவரே! உமக்கு மட்டுந்தான் அறிவுஞ் சூழ்ச்சியும் இருக்கிறதென்று எண்ணிக்கொள்ளாதீர். எனக்கும் அறிவுஞ் சூழ்ச்சியும் இருக்கிறதென்பதை அறிந்துகொண்டீரா?" என்று கேட்டார். புலவர் அங்குத் தங்கியிருந்த வரையில் நல்விருந்தளித்தார். பிறகு ஊருக்குப் புறப்பட்டபோது வேண்டிய அளவு பொருளும் ஆடையணிகலன்களும் வழங்கினார். அவைகளைப்பெற்ற புலவர் பிறகு என்றுமே வறுமைப்புலிக்கு இலக்காகாமல் இனிது வாழ்ந்திருந்தார்.

இறுதி

இவர் நூல்கள் யாதுஞ் செய்யவில்லை. இவரிபற்றிய தனிப்பாடல்களிலுஞ் சிலவே அகப்படுகின்றன. சமீன்தாரிடம் பொருள்பெற்றபின் பல பாடல்கள் அவர்மீது பாடியிருக்கலாம். அவைகள் ஒன்றும் அகப்படவில்லை. இவர் வாழ்ந்திருந்த காலம் முதலியவைகளும் நன்கு விளக்கமாகவில்லை.

உக. சொக்கநாதப் புலவர்

தோற்றம்

சொக்கநாதப் புலவர் சோழவளநாட்டிலே திருவாரூரிலே தோன்றினார். உரிய காலத்திலே கல்வி கற்றுச் சிறந்து விளங்கினார். கல்வியறிவு, சொல்வன்மை, அடக்கம், அமைதி, பொறுமை முதலிய நல்லியல்புகளெல்லாம் இவரிடத்தில் ஒருங்கே அமைந்து விளங்கின.

வறுமை

புலவர்கட்குரிய வறுமை சொக்கநாதரையும் பற்றியது. அதனால் இவர் பலவகைத் தொல்லைகளை யடைந்தார்.

வறுமையின் தொல்லைகளை நுகர்தல் அழகே தவிரப் பிறரிடஞ் சென்று கூறிப் பல்லெலாந்தெரியக்காட்டி இரத்தல் அழகன்று என்னும் முடிவுக்கு வந்தார். பட்டினியும் பசியுமாகக் காலத்தைப் போக்கினர். ஒருநாள் ஆரூர் இறைவனைத்தொழச் சென்றபோது, "இறைவனே! உம்மிடத்தில் நேர்மை சிறிதையுங் காணோம். கல்லால் அடிப்பவர்க்கும், செருப்பால் உதைப்பவர்க்கும், வில்லால் புடைப்பவர்க்கும் நல்லருள் செய்கிறீரேயல்லாமல், எல்லாம் உம்முடைய செயல் என்று உம்மைநம்பி இருப்பவர்கட்கு யாதுங்கொடுக்கமாட்டேன் என்கிறீரே," என்னும் பொருளை அமைத்து,

"நல்லாளை இடமருவும் தியாகையா
உமதிடத்தில் நியாயம் காணோம்
கல்லாலே எறிந்தோர்க்கும் செருப்படியால்
உதைத்தோர்க்கும் கடிந்து போரில்
வில்லாலே அடித்தோர்க்கும் கொடுத்தீரே
அல்லாமல் விழிநீர் சோர
எல்லாமஉம் செயலென்றே இருப்போர்க்கு
யாதொன்றும் ஈகிலீரே."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினர்.

கறுப்ப முதலியாரிடஞ் செல்லுதல்

அந்நாளில் கறுப்ப முதலியார் என்பவர் தொண்டைவளநாட்டிலே சிறந்த செல்வராகவும் வள்ளலாவும் நிலவியிருந்தார். "அவரிடஞ் சென்றால் வறுமை தொலையும். அம்முதலியார் வறுமைப் பிணிக்கு மருத்துவன்," என்று தக்கோர்களால் அறிந்தார்.

"நிணம்போதத் தள்ளிப் பெரும்பூதம்
போலப்பின் நேற்றுச்செத்த,
பிணம்போற் கிடந்து புரளுவர்
காண்பிறர்க் கீட்டிவைத்த,

பணம்போன பின்பு விவேகமுண்
டாகும்அப் பஞ்சைகள்வங்
கணம்போதும் போதுங் கறுப்பாதென்
மாவையில் காவலனே.'

"ஏவைக்குங் கூன்சிலை தொட்டான்
அநங்கன் இருவிசும்பில்
தீவைக்குந் திங்கட் குடையெடுத்
தான்தென்றல் தேருகைத்தான்
காவைக்குங் கண்மணி கத்தூரி
ஈன்ற கறுப்பன்வரை
மாவைக்கும் பாவைக்கும பூவைக்கும்
போது வடுவைக்குமே."

என்பன முதலிய பாடல்களைப் பாடிக்கொண்டுபோய் அச் செல்வரைக் கண்டார். இவருடைய புலமை நிலையை நன்குணர்ந்த அவர் தக்கவாறு நன்கொடைகள் வழங்கினார். மேலும் அவரைப் பல பாக்களாற் புகழ்ந்து பாடித் தம்முடைய ஊருக்கு மீண்டார். கறுப்ப முதலியார் வழங்கிய பொருளைக்கொண்டு சில காலம் நலமாக வாழ்ந்திருந்தார். பொருள் விரைவிற் செலவாகியது. மீண்டும் வறுமை வந்து தொடர்ந்தது. திப்பையராயன் என்னுஞ் செல்வன் ஒருவன் வள்ளலாக விளங்குகிறான் என்று உணர்ந்தார். புறப்பட்டுச் சென்று அவனைப் பார்த்தார். இவருடைய அறிவு நலத்தை அவன் எளிதில் உணர்ந்தான். இவரைப் பார்த்து, "உங்களுக்கென்ன குறைவு?" 'அறிவுடையார் எல்லாம் உடையார்,' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார். பூவேந்தர்களைப் போலப் பாவேந்தர்களும் சிறப்பு மிக்கவர்கள். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு," என்று புலவரைப் பலவாறு புகழ்ந்து உரையாடத்தொடங்கினான். அவனுடைய புகழ்ச்சி வஞ்சகப் புகழ்ச்சியாக இருந்தது. அதனைக்கேட்டுப் புலவர் ஏமாந்து

போகவில்லை. "ஆம்! ஆம்!! நீங்கள் கூறும் புகழ்ச்சி உண்மை யானது தான். இந்திரனே எனக்கு ஆடையாக இருக்கிறான். தீக்கடவுளோ என்னுடைய வயிற்றைவிட்டு அகலுவதே இல்லை. நான் சிவபிரான் என்று நினைத்து நமன் என்பால் நெருங்குவதே இல்லை. வருணனே என்னுடைய இருகண்களையும்விட்டு எப்பொழுதும் நீங்கமாட்டான். என்னுடைய இல்லத்திலே என் மக்களும் நானும் காற்றுக் கடவுளைச் சாப்பிடுவோம். இத்தகைய பெருவாழ்வுடைய எனக்கு உலகில் எவர் ஒப்பாவர்? எப்பொழுதும் இந்த மேன்மையைப்பெற்று வறுமைக் கடவுளை வணங்கித் திகழும் எம்மைச் சாளுவகோப்பையனுடைய அருமைத் திருமகனாகியவனும் மந்தரமலையைப் போன்ற தோள்களை யுடையவனுமாகிய திப்பையராயன் தன்னுடைய வாய் மொழியினாலே என்னைக் குபேரனாக்கினான். அவனை இறைவனென்றே கூறவேண்டும்," என்னும் பொருளை அமைத்து,

"இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான்
அக்கினி உதரம்விட் டகலான்
எமனெனைக் கருதான் அரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்,
அந்தமாம் வருணன் இருகண்விட் டகலான்
அகத்தினில் மக்களும் யானும்
அநிலமதாகும் அமுதினைக் கொள்வோம்
யாரெதிர் எமக்குளார் உலகில்,
சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய் சற்கீர்த்தி
சாளுவ கோப்பையன் உதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா அன்னேன்
வாக்கினல் குபேரன் ஆக்கினன் அவனே
மாசில்ஈ சானபூ பதியே."

என்று செய்யுள் ஒன்றைப் பாடினர். திப்பையராயன் பெரும் பொருள் வழங்கியனுப்பினன். மேலும் இவர் அடிக்கடி பரிசின்மேற் சென்று பொருள் பெற்றே தமது வாழ்க்கையை நடத்தினர்.

அரிகரபுத்திரன்

சொக்கநாதப் புலவர் பல்லக்கிலேறி ஒருமுறை வேறோர் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது வெற்றிச் சின்னங்கள் பல இவரிடம் இருந்தன. சொக்கநாதப் புலவர் சென்றுகொண்டிருக்கும்போது தட்டார வகுப்பில் தோன்றிய அரிகரபுத்திரன் என்னும் புலவர் ஒருவர் சொக்கநாதப் புலவருக்குமுன்னே வந்து தோன்றினர். அப்புலவர் சொக்கநாதப் புலவரிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் இருந்தும் வேறு பல நூல்களில் இருந்தும் பல கேள்விகளைக் கேட்டார். அட்டாவதானஞ்செய்து காட்டவேண்டுமென்று வற்புறுத்தினர். அரிகரபுத்திரன் திடீரென்று வந்து தோன்றிச் சொற்போரிடத் தொடங்கியபடியால் சொக்கநாதப் புலவர் திணறினர். பல கேள்விகட்கு விடையளிக்காமல் விழித்தார். அவ்வளவில் அரிகரபுத்திரனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. கேட்பதற்குத் தக்கவாறு மறுமொழி கூறத்தெரியாத உனக்குப் பல்லக்கும் வெற்றிச் சின்னங்களும் எதற்கு என்று கூறிப் பல்லக்குக்கொம்பைப் பிடித்து முறித்தெறிந்துவிட்டுப் போய்விட்டார். அரிகரபுத்திரனுடைய இச்செயல் சொக்கநாதப் புலவருக்கு மிகுந்த மனவருத்தத்தை அளித்தது:

"அட்டாவ தானமுந் தொல்காப்
பியமும் அகப்பொருளும்
தொட்டாதி தொட்டப்ர பந்தமெல்லாம்
சும்மைச் சொல்லச்சொல்லி

ஒட்டாரங் காட்டிநம் பல்லக்குக்
கொம்பை ஒடித்தெறிந்த
தட்டாரப் பையல் அரிகர
புத்ரனைச் சண்ணினனே."

என்று பாடினார். நிகழ்ந்ததை ஒரு செல்வன் உணர்ந்து புலவருடைய பல்லக்கு முதலியவைகளை ஒழுங்குசெய்து கொடுத்தான்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு குறை

சொக்கநாதப் புலவர் பாண்டி நாட்டில் உள்ள சில வள்ளல்களைக் கண்டு பரிசு பெற்றுவரலாம் என்னும் நோக்கத்தோடு புறப்பட்டு மதுரைக்குச் சென்றார். சொக்கநாதப் பெருமானைப் போற்றி வழிபட்டுவிட்டுக் கோயிலிலே ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அங்கு உண்பதற்குக்கூட அவரிடத்தில் காசில்லை. அப்பொழுது இறைவழிபாட்டிற்கு வந்த ஒரு மனிதனைப் பார்த்துச் "சிறிது பொருள் கொடு; உணவுச் செலவுக்கு வேண்டும்," என்று கேட்டார். அவன் இவரை நன்கு உசாவினான். "தாங்கள் எந்த ஊர்? இங்குவரக் காரணம் யாது?" என்று விளக்கமாகக் கேட்டான். புலவர் தமது வரலாற்றைக் கூறினார். கேட்ட அவன், "தாங்கள் பலரிடத்திலும் பெரும்பொருள் பெற்றும் இவ்வாறு அடிக்கடி வறுமையால் வருந்துவானேன்? வறுமைப் பிணி உங்கட்கு உரிமைப் பிணியோ?" என்று கேட்டான். உடனே இவர், "நான் வறுமைப் பிணியால் வாடுவது ஒரு வியப்பா? தேவர்கட்குக்கூட ஏதேனும் குறை இருந்துகொண்டே இருக்கிறதே; திங்கட்கு உடல்குறை, குபேரனுக்கோ கண்ணிற் பழுது; தேவேந்திரனுக்கோ உடலெல்லாம் பெண்குறி; இயமனுக்கோ புழுக் கால்; கதிரவன் மைந்தனாகிய சனிக்கோ கால் நொண்டி; நான்முகனுக்கோ ஒரு தலை

குறைந்துபோய்விட்டது. தேவர்களே இவ்வாறு இருப்பார்களாயின் மனிதர்கள் குறையுடையவர்களாக இருப்பது ஒரு வியப்பா?" என்று கூறியதுடன் இச்செய்திகளை ஒரு பாட்டில் அமைத்து இறைவனை முன்னிலைப்படுத்தி,

" சந்திரனுக் குடல்ஊனம் தனதனுக்கோர்
　　கண்ணூனம் தருவி னீழல்,
இந்திரற்கோ பகக்குறியாம் இயமனுக்கோ
　　புழுக்காலாம் இரவி ஈன்ற,
மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர்
　　தலைகுறையாய் வாழ்வ ராயின்,
பந்தமுள மானிடரை விதிவிடுமோ
　　ஆலவாய்ப் பதியு ளானே."

என்று செய்யுள் ஒன்றையும் பாடினர்.

பலசரக்குப் பாட்டு

முருகனைப் போற்றி வழிபடும் பொருட்டுத் திருவேரகத்துக்குச் சென்றிருந்தபோது,

" வெங்காயஞ் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல், தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே."

என்று ஒரு வெண்பாவைப் பாடினர். இச் செய்யுளில் பொருள் வேறாயிருக்கவும், வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் முதலிய பலசரக்குப் பெயர்கள் வந்திருத்தலைக்கண்டு பாட்டைக் கேட்டவர்கள் பாராட்டினர்கள். முருகனுக்குச் செட்டி என்றும் பெயருண்டு. செட்டியார்கள் பலசரக்கு வாணிகஞ் செய்பவர்கள். அதைக் கருதியே புலவர் இவ்வாறு பாடினர். இதன்பொருள், "திருவேரகத்தில் இருக்கும் செட்டியார் எனப்பெறும் திருப்பெயரையுடைய முருகப் பெருமானே! வெம்மை

பொருந்திய இவ்வுடம்பு தவத்தினால் காய்ந்தால் கொடிய தீவினையினால் வரக்கூடிய தீங்கு யாதிருக்கின்றது? இந்த உடலாகிய சரக்கை யார் சுமந்துகொண்டிருப்பார்கள்? அழியாத சிறந்த வீட்டினைக் கொடுப்பீரானால், இனிமேற் பெரிய உடம்பினை நான் தேடமாட்டேன்" என்பதாம்.

வேடிக்கைப் பாடல்கள்

வேடிக்கையாகச் செய்யுள் இயற்றுவதில் இவரும் திறமுடையவர்:

"பண்காணுந் தமிழ்ப்புலவீர் இனத்தோடே
இனஞ்சேரும் பரிசே போலத்,
தண்காவி மலர்த்தடஞ்சூழ் காவிரிநாட்
டொருபுதுமை சாற்றக் கேளீர்,
கண்காண நரையான்மேல் வெண்காடை
வீற்றிருக்கக் கண்டோம் அந்த
வெண்காடை இடப்புறத்தே பச்சையன்னம்
கலந்திருக்கும் விதங்கண் டோமே."

[நரையான் - வெள்ளிய காளை, ஒரு பறவை. வெண்காடை - வெள்ளிய நிறமுடைய காடை என்னும் பறவை, திருவெண்காட்டிலே எழுந்தருளிய இறைவன். பச்சையன்னம் - உமாதேவி.]

"மன்னுநரை யானை வனப்பினுக் கொக்கானை
மாந்தியஉச் சிட்டனை மங்கைதங் காக்கையனை
பன்னரிய வலியானைத் தோல்விலங் காடையனைப்
பஞ்சரங்க ளமைப்பானைப் பகருமளி யானை
உன்னுதவி லாநெஞ்ச மடையானைப் புகழ்ந்தே
யோதினர்க் கருளுகவு தாரியெமுள் ளானைத்
தன்னிகரி லாக்கிழவிக் காட்காட்டி னானைத்
தமிழ்சேர் வெண் காடையருட் கருடனையேத் துவமே."

இச் செய்யுளில் நரையான், கொக்கு, உச்சிட்டன், காக்கை, வலியான், காடை, பஞ்சரம், மடையான், கவுதாரி, உள்ளான், கருடன் முதலிய பறவைப் பெயர்கள் வந்து பொருள் வேறுபடுதலைக் காண்க.

தனிப்பாடல்கள்

இவர் நூல்கள் செய்ததாகத் தெரியவில்லை. தனிப் பாடல்கள் பல பாடியிருக்கிறார். அவைகள் அருமையும் பெருமையுந் தங்கியவை. ஏறக்குறைய நாற்பது பாடல்கள் வரை தனிச் செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு முதலிய நூல்களிலே சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இறுதி

இவர் தோன்றிய மறைந்த காலங்கள் தெளிவாக வில்லை.

---

௨௨. பொன்னம்பலக் கவிராயர்

தோற்றம்

ஈண்டிய புகழ்சேர் பாண்டிமாநாட்டில், வரம்பிலாப் பெருமை நிரம்பிய பரம்பக்குடியெனும் ஊரில், பொன்னம் பலக் கவிராயர் தோன்றினார். இலக்கண இலக்கியங்களை வழுவறப் பயின்று விழுமிய புலமைத் திறம் பெற்றார்.

வாழ்க்கை

புலமைத் திறம் எவ்வளவு மிகுதியாக அமைந்ததோ அவ்வளவு மிகுதியாக வறுமைக் கொடுமையும் முடுகி நின்றது. தந்தை வழியால் வந்த சிறுநிலப் பகுதியைக் கொண்டு சிறிது காலம் குடும்பத்தைப் பாதுகாத்தார். பிறகு குடும்பத்தைக் காப்பதற்கு நில வருவாய் போத வில்லை. ஆகவே, மற்றைய புலவர்களைப்போல் இவரும் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டார். சில செல்வர்கள் மேல் செய்யுட்கள் பாடிக்கொண்டு சென்றார் அச்செல்வர் கள் இவர் பாட்டைக் கேட்கவுமில்லை. இவரைக் கண்ணெடுத் துப் பார்க்கவுமில்லை. அதனால் இவருடைய மனம் புண்

பட்டது. மதுரைமாநகரை அடைந்தார். மீனாட்சி அம்மை திருமுன்பு நின்று,

"காசும் பொன்னும் கனத்திட்ட பேர்க்கிரு
காதுங் கேட்கில கண்ணுந் தெரிகில,
பேசும் பேச்சுமென் பேய்க்கோல முங்கண்டால்
பேயென் றாலும் இரங்கும் இரங்குமே,
பூசும் பூச்சும் சந்தான விருட்சத்தின்
போதும் வையை கொழிக்குந் துறையெலாம்,
வீசுங் கூந்தல் பிடியே சவுந்தர
மீனவன் பங்கின் மீனாட்சி யம்மையே."

"ஏட்டைக் கட்டி எழுத்தோ டெழுத்தைவைத்
திணைத்துக் கட்டி இசைகட்டி லோபர்மேல்,
பாட்டைக் கட்டியென் தொண்டையுங் கட்டிய
பாவந்தான் இனி என்றைக்குத் தீருமோ,
தோட்டைக் கட்டுங் குழலே நினதடித்
துணையைக் கட்டிய பேர்க்குப் பரகதி
வீட்டைக் கட்டிய தாயே சவுந்தர
மீனவன் பங்கின் மீனாட்சி யம்மையே."

என்னும் பாடல்களைப்பாடி நெஞ்சுருகினார்.

வறுமையின் கொடுமை

வறுமையின் கொடுமை இவரை நாளும் மிகுதியாகவே வருத்தியது. இவருடைய ஆடையோ பல ஓட்டை. ஒரு நாள் இவருக்குச் சிறிது பணம் கிடைத்தது. அதனைக் கொண்டுபோய்க் கடைத்தெருவில் அரிசி வாங்கிக்கொண்டு வர எண்ணினார். மேலே துண்டுபோட்டிருந்தார். ஆயினும் அதில் அரிசியை முடிய முடியாது. வேறு ஏனந்தேடிக் கொண்டு அரிசி வாங்குவதற்குச் சென்றார். அதற்குள் அரிசி விற்றுப்போய்விட்டது. காசிருந்தும் அரிசியகப்படாமல் வருந்தித் திரும்பினார். அப்போது அவ்வூர்ச் சொக்கநாதர்மீது பாட்டு ஒன்று எழுந்தது.

“சந்தியிலே மூத்தமகன் தன்னைவைத்துப்
பயித்தியங்கொள் சாமியே வெள்
கந்தியிலே பவனிவரும் தென்பரம்பைச்
சொக்கேசா நவிலக் கேண்மோ
அந்தியிலே உந்திதனக் காதர வாம்
அங்காடி அரிசி வாங்க
முந்தியிலேன் சந்திரனோ இந்திரனாய்
இருந்ததனால் முடியொண் ணாதே.”

என்று பாடிக்கொண்டு திரும்பினார்.

[உந்தி - வயிறு, அங்காடி - கடைத்தெரு, சந்திரன் - கலை வேட்டி. இந்திரன் - ஆயிரங்கண்ணன் - வேட்டி பல ஓட்டை, யுடையதாக இருந்தது என்க.]

இறுதி

நன்கு கல்வியைக் கற்றிருந்தும் ஆதரிப்பாரைப் பெறாதபடியினால் இறுதிவரை வறுமைப் பிணியால் வாடியிருந்த இவர் தனிப்பாடல்கள் பல பாடியிருத்தலைத் தவிர நூல்கள் செய்திருப்பதாகத் தெரியவில்லை. மற்றும் பிறந்த காலம் மறைந்த காலம் முதலியவைகளும் விளக்கமாகவில்லை.

உரு. மதுரைச் சிதம்பரம் பிள்ளை

தோற்றம்

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் தந்தையாராகிய சிதம்பரம் பிள்ளை என்பவர் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்குமுன் மதுரையம் பதியிலே தோன்றினார். இவருடைய முன்னோர்கள் மீனாட்சி கோயில் பணியில் அமர்ந்திருந்தார்கள். சிதம்பரம் பிள்ளை சிறிது காலம் அப்பணியில் ஈடுபட்டிருந்தார். பிறகு மதுரையை விட்டுப் புறப்பட்டுப் பல ஊர்களுக்குஞ் சென்றார்.

கல்வி

மதுரை மாநகரில் தோன்றிய இவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவராய்ச் செய்யுள் செய்யும் திறமை அமையப் பெற்றவராக விளங்கினர்.

ஆசிரியர்

மதுரையைவிட்டுப் புறப்பட்டவர் பலவூர்களையுங் கடந்து திரிசிரபுரத்திற்கு மேற்கே காவிரியின் தென்கரையில் உள்ள எண்ணெய்க்கிராமம் என்னுஞ் சிற்றூரையடைந்தார். அவ்வூரினர் சிதம்பரம்பிள்ளையின் கல்வித் திறமையை அறிந்தனர். அவ்விடமே தங்கச் செய்ய வேண்டுமென்னும் எண்ணமுடையவர்களாய் இருத்தற்கு இல்லம் வாழ்க்கைக்குரிய பொருள்கள் முதலியவைகளை அமைத்துக்கொடுத்துத் தங்கச் செய்து அவரிடம் பல நூல்களைப் பாடங்கேட்டனர். அதனல் அவ்வூரார் நல்லறிவு மிக்கவர்களாய்ச் சிறந்து விளங்கினர்கள்.

மழைபொழியப் பாட்டு

அந்நாளில் அப்பகுதியில் நன்ருக மழைபெய்யவில்லை. அதனல் நாடு வளங்குன்றியதாய் அலக்கணுற்றிருந்தது. சிதம்பரம் பிள்ளை கடவுளன்பிலும் கல்வியறிவிலும் தலை சிறந்தவராக விளங்கியபடியால் மக்கள் சிதம்பரம் பிள்ளையைப் பார்த்து, "மழைபெய்யுமாறு தாங்கள் ஒருசெய்யுள் இயற்றவேண்டும்," என்று வேண்டிக்கொண்டனர். சிதம்பரம் பிள்ளை இறைவனை உள்ளத்தில் எண்ணி,

"சோகங்கள் உற்றவுயிர்த் துன்பகல வேணியிடை
மேகங் களைத்தாங்கும் வித்தகனே—போகங்கள்
பாலித் தருளும் பரமனே கார்மழையை
ஆலித்துப் பெய்ய அருள்.

என்னும் வெண்பாவைப் பாடினர். சில நாட்களில் நல்ல மழை பொழிந்து நாடு செழித்தது. இவருடைய பெருமையும் சிறந்து விளங்கியது.

அதவத்தூர்

சிதம்பரம் பிள்ளையைப் பற்றிப் பக்கத்து ஊரார்களும் உணர்ந்தனர். அதவத்தூர் என்னும் ஊரிலிருந்த அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி அவ்வூரை யடைந்து அவ்வூரார்கட்குத் தமிழ் விருந்து அளித்துக்கொண்டிருந்தார் பிறகு அவ்வூரில் பள்ளிக்கூடம் அமைத்துக் கணக்காயராக இருந்து சிறுவர்கட்குங் கல்வி கற்பித்தார். இவருடைய போதனையால் சிறுவர்கள் கல்வி யறிவிற் சிறந்தவர்களாய் விளங்கினர்.

மதுரைக்கேகி மீளல்

மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரப் பெருமான் மீதும் அங்கயற்கண்ணிமீதும் பேரன்புகொண்டிருந்த இவர், ஆண்டு தோறும் மதுரையை அடைந்து வழிபாடு செய்து சிலநாள் தங்கியிருந்து பிறகு தம்மிருப்பிடத்திற்குத் திரும்புவார்.

பிள்ளைப்பேறு

இவ்வாறு இவர் கணக்காயராக அமர்ந்து வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த காலத்தில் 1815-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆறும்நாள் இவருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. மதுரையம்பதிப் பெருமானிடத்தும் பிராட்டியிடத்தும் பேரன்புடைய இவர், அக்குழந்தைக்கு மீனாட்சிசுந்தரம் என்று பெயரிட்டார். பின்னாளில் பெரும்புலவராகிப் புகழ்பெற்ற மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே இக்குழந்தை.

சோமரசம்பேட்டை

பிறகு சிதம்பரம் பிள்ளை சோமரசம்பேட்டை என்னும் ஊரிலிருந்த அன்பர்களுடைய வேண்டுகோட்படி அங்குச் சென்று அவ்வூரார்கட்குக் கல்வி போதித்துக் கொண்டு அங்கே தங்கியிருந்தார். அப்போது இவருக்கு மேலும் ஓர் ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தைக்குச் சொக்கலிங்கம் என்றும், பெண் குழந்தைக்கு மீனாட்சி என்றும் பெயரிட்டார்.

தந்தை மகற்காற்றும் நன்றி

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து, முந்தி யிருப்பச் செயல்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளினார் அதற்கேற்பச் சிதம்பரம் பிள்ளை தம் மகற்குக் கல்வியைத் தக்கவாறு போதிக்கலானார். மற்றைப் பிள்ளைகளோடு சேர்ந்து அக்கால முறைப்படியே நெடுங்கணக்கு ஆத்திசூடி, நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூல்களையும் எளிய நடையில் உள்ள அருணகிரியந்தாதி, முதலிய அந்தாதி நூல்களையும் மற்றும் பல இலக்கியங்களையும் நன்கு கற்பித்தார். "மகனறிவு தந்தையறிவு," என்பது எல்லா இடங்களினும் உண்மையாகாமற்போயினும் சில இடங்களிலாவது உண்மையாவது கண்கூடு. மீனாட்சிசுந்தரமும் தந்தையாரைப் போலவே நுண்மாணுழை புலமுடையவராய்ச் சிறந்து விளங்கினார். சிதம்பரம் பிள்ளை தம் மகனுக்குப் புலமையுண்டாகுமாறு கல்வியை நன்கு கற்பித்ததோடு செய்யுள் இயற்றுதல், உடன் கற்கும் மாணவர்கட்குப் பாடஞ்சொல்லுதல் முதலிய வழிகளிலும் நன்கு பயிற்றினார்.

இறுதி

கல்வி கேள்விகளிலும் தெய்வ வழிபாட்டிலுஞ் சிறந்து விளங்கிய இவர் தம்முடைய மகனாகிய மீனாட்சி

சுந்தரம் பதினைந்தாண்டுப் பருவத்தில் வளர்ந்து கொண்டிருக்கும்போது 1830-ஆம் ஆண்டில், இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடிநீழலை யடைந்தார். சிதம்பரம் பிள்ளையின் மனைவியாராகிய அன்னத்தாச்சியம்மையாரும் மக்களும் பெரிதும் வருந்திக் கலங்கினர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை,

"மூந்தை அறிஞர் மொழிநூல் பலகவிற்றும்
தந்தை எனைப்பிரியத் தான்செய்த—நிந்தைமிகும்
ஆண்டே விரோதியெனும் அப்பெயர்நிற் கேதகுமால்
ஈண்டேது செய்யாய் இனி."

என்பது போன்ற பல இரங்கற் பாக்களைப்பாடி உள்ளம் வருந்தினர்.

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்."

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."

என்னும் இருதிருக்குறள்கட்கும் இவர்கள் இருவரும் (தந்தையும் மகனும்) எடுத்துக்காட்டாயினமையை நாம் நன்குணரலாம்.

உ௪. வெண்பாப்புலி வீரகவிராயர்

தோற்றம்

வெண்பாப்புலி வீரகவிராயர் என்பவர் மதுரை மாவட்டம் மேலூர்க் கூற்றத்தைச் சேர்ந்த மணப்பச்சேரி என்னும் சிற்றூரில் பாடுவார் முத்தப்ப செட்டியார் காலத்திலே வாழ்ந்திருந்தவர். சைவப் பண்டார மரபினர். மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் வழிமுறையினர் இவருக்கு உறவினர். மிதிலைப்பட்டியைச் சேர்ந்த வேலுக் கவிராயர் என்பவர் இவருக்கு மருகனாவர்.

வாழ்க்கை முறை

வீரன் என்பது இப் புலவருக்கு இடப்பட்ட பெயர். கல்வியை நன்கு கற்றுச் செய்யுள் பாடுந் திறமடைந்த பின் கவிராயர் என்னுஞ் சிறப்புப் பெயர் பெயரை ஒட்டியது. வெண்பாக்களை மிக விரைவாகப் பாடுவதில் இவர் வல்லவர். ஆகவே வெண்பாப்புலி என்னுஞ் சிறப்புப் பெயரும் பெயருக்கு முன் கூடியது. இவரிடம் தெய்வத் திருவருளும் நன்கு அமைந்திருந்தது. இவர் ஒருவர்மீது இசையோ வசையோ பாடுவாரானால் அஃது அவ்வாறே பலிக்கும். இவர் அக் காலத்திலே இருந்த புலவர்களையெல்லாம் வெற்றிகொண்டு தமக்கு நிகர் தாமே என்று எங்கும் உலவினர்.

விருதுகள்

புதுக்கோட்டையரசர், சேதுமன்னர், சிவகங்கை யரசர், நத்தம் சிற்றரசர், இம்முடி லிங்கேந்திரர் முதலியோர் வீர கவிராயரை ஆதரித்துப் பல சிறப்புக்கள் செய்தனர். பல்லக்கு வெற்றிச் சின்னங்கள் முதலியன வழங்கினர். இவர் எங்கேனுஞ் செல்லப் புறப்பட்டால் பல்லக்கிலேறி விருதுகளுடன் பேராரவாரமாகச் செல்வர். புலவர்கள் கண்டால் அஞ்சிப் பதுங்கி விடுவர். அல்லது போற்றிப் பணிந்து தாழ்ந்துவிடுவர். புலவர்கள் நிலையே இவ்வாறு என்றால் பொது மக்களைப்பற்றிக் கேட்க வேண்டுமோ? "வில்லேருழவர் பகை கொளினுங் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய் மலர்ந்தார். பொதுவான மக்களில் இருந்து பெருநிலக் கிழவர்களாகிய சிற்றரசர்கள் வரை இவரிடம் பகையேற்பட்டுவிடாமல் மிக விழிப்பாக நடந்து கொண்டனர்.

வீராச்சாமிமீது வசை

அந்நாளில் வீராச்சாமி என்பவன் ஒருவன் வீரகவிராயருடைய பகையை எவ்வாறே தேடிக்கொண்டான். புலவர் தமது கணையை எடுத்து வீசத் தொடங்கி,

"கந்தனே நீயானல் கற்றவனே நானானல்
இந்தவரு டமபோய் எதிராண்டில்—வந்தவினை
தீரா வினையாய்த் திரும்பா வியாதியாய்
வீராச்சா மிக்கே விதி."

என்று வசைப்பா ஒன்றைப் பாடிவிட்டார். மறு ஆண்டில் வீராச்சாமி நோய்கண்டு மாண்டு முடிந்து போனான்.

முத்தப்பரோடு பகை

அந்நாளில் ராசுநகரம் என்னும் ஊரில் இம்முடி லிங்கேந்திர துரை என்னும் பெருஞ் செல்வன் ஒருவன் இருந்தான் அவன் தீமைகள் செய்வதில் பேர் பெற்றவன். ஆனல், வெண்பாப்புலி வீரகவிராயரிடம் ஒழுங்காக நடந்து நன்கொடைகள் வழங்கி இவருடைய அருளைப்பெற்றிருந்தான். அந்த இம்முடிலிங்கேந்திரனிடம் தொப்பை வீரன் என்னும் ஏவலன் ஒருவன் இருந்தான். அவன் ஏதோ சிறு தவறு ஒன்றைச் செய்துவிட்டான். அதனல் சினங்கொண்டு பொங்கியெழுந்த இம்முடி லிங்கேந்திரன் பிற ஆட்களைக்கொண்டு தொப்பை வீரனை வேலை தீர்த்துவிட்டான் தனக்கு மாறுபாடாக நடப்பவர்கள் மாண்டொழிவது திண்ணம் என்பதை மற்றவர்கட்கு அறிவிக்கக்கருதி வெண்பாப்புலியாரைக் கொண்டு,

"இம்முடிலிங் கேந்திரனுக் கேற்ப நடந்தோர்கள்
தம்முடிகொண் டேயுலகில் தாம்வாழ்வார்."—

என்று பாடச் செய்து இதனை வீடுகள்தோறும் எழுதச் செய்திருந்தான். எல்லோரும் இம்முடிலிங்கேந்திரனுக்கு

அஞ்சி நடந்தார்கள். இச் செய்தியை அவ்வூருக்குச் சென்றிருந்த முத்தப்ப செட்டியார் அறிந்தார். பொருளினிடத்திலே பேரவாக்கொண்டு கொடியவனைப் புகழும் வெண்பாப்புலியாரை வெறுத்ததோடு அத்தீயவனையும் வெறுத்தார். அப்பாட்டைத் தாம் நிறைத்துப் பாடக் கருதினர்:

—சும்மாவோ,
தப்பில் தலையிழப்பர் சாட்சியொன்று வேண்டுமெனில்
அப்பனெனும் தொப்பவீர னும்."

என்று அப் பாட்டை முடித்தார். பிறகு தாம் பழநிக்குப் போய்விட்டுத் தம்மூருக்குப் போய்விட்டார்.

பாட்டு நிறைக்கப்பட்ட செய்தியை இம்முடிலிங்கேந்திரன் உணர்ந்தான். செய்தியை வெண்பாப்புலியாருக்குத் தெரியப்படுத்தினன். வெண்பாப்புலியார் புலிபோற் சீறியெழுந்தார். உடனே தமது திருக்கூட்டத்துடன் முத்தப்ப செட்டியார் வீட்டிற்குச் சென்றார். அப்போது முத்தப்ப செட்டியார் வேலுக் கவிராயர் என்னும் தம்முடைய நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தார். வெண்பாப்புலியாரும் அங்குச் சென்றார். இருவருக்கும் சொற்போர் மூண்டது. பிறகு இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். வேலுக் கவிராயர் வீட்டு வாசலில் ஆட்டுக்கடா ஒன்று கட்டப்பெற்றிருந்தது. வெண்பாப்புலியார் தாம் தம்முடைய வசையினல் அவ்வாட்டின் தலை வெடிக்குமாறு பாட முடியும் என்றார். முத்தப்ப செட்டியாரோ வெண்பாப்புலியார் அவ்வாறு செய்துவிட்டால் தாம் அந்த ஆட்டை உயிர்ப்பித்துப் பழைய நிலைமையை அடையச் செய்துவிட முடியும் என்றார். "நீர் அவ்வாறு செய்துவிட்டால் நான் உமக்குத் தோற்றவனவேன்" என்றார் வெண்பாப்புலியார். சிலர் நடுநிலைமையாளராக இருந்தார்கள். வெண்பாப்புலியார்,

"எற்கவிக்கு நேரே எதிர்க்கவியும் சொல்லுதற்கோர்
பொற்கவியும் உண்டோஇப் பூவுலகில்—நற்கவிசொல்
வேலுக் கவிராயர் வீட்டுக் கடாத்தலையே
சால இரு துண்டாவாய் தான்."

என்று வெண்பா ஒன்றைப் பாடினார். ஆட்டுக் கடாவின் தலை பிளந்தது. அது கீழே விழுந்து துடிக்கத் தொடங்கியது. உடனே முத்தப்ப செட்டியார் விரைந்து,

"கலையது புடித்த வெண்பாக் கவிப்புலி கவியைக் கேட்டுத்
தலையது வெடிப்புண் டாடு தவிக்கிற தந்தோ முன்போல்
நிலையது பொருந்த என்று நிகழ்த்தினேன் முத்தப் பன்யான்
உலகினில் உள்ளோர் காண்பீர் உமையவள் சுதன்காப் பாமே."

என்னும விருத்தப்பாவைப் பாடி முருகனைப் போற்றினார். கீழே வீழ்ந்து துடித்த ஆடு திடீரென்று எழுந்துவிட்டது. தலையின் வெடிப்புஞ் சேர்ந்து மூடிவிட்டது. முத்தப்ப செட்டியாரும் தம்மைப்போல் பெருமையுடையவரே என்பதை வெண்பாப்புலியார் உணர்ந்து மகிழ்ந்தார்.

"கற்றவர் கல்விக்(கு) உரையாணி நீ தங்கக் கட்டி நின்னைப்
பெற்றவ ளேசெல்வப் பேறுள்ள தாய்நின் பிதாமுன் செய்த
நற்றவமே தவம் நாட்டார் வணிகர்க்கோர் ரத்தின நீ
கொற்றவ ரும்புகழ் முத்தப்ப பூப குணரத்னமே."

என்று போற்றிப் புகழ்ந்தார். அதுமுதல் இருவரும் நண்பர்களாக விளங்கியிருந்தார்கள். வெண்பாப்புலியார் தம் ஆர்ப்பாட்டங்களையெல்லாம் விட்டுவிட்டார்.

கருத்தான்

வெண்பாப்புலியாருடைய ஊரிலே கருத்தான் என்னும் பெயருடைய கீழ்மகன் ஒருவன் இருந்தான். அவன் நண்டு தின்பதில் மிகுந்த பேரவா உடையவனாக இருந்தான். அவன் வயல்கள் குளங்குட்டைகள் முதலிய இடங்களில் நண்டுகளைக் கண்டால் உடனே பிடித்துக் கால்களை

ஒடித்துவிட்டு வீட்டிற்குக் கொண்டுபோய்க் கறி சமைத்துச் சாப்பிட்டுவிடுவான். ஒருநாள் வெண்பாப்புலியார் கருத்தானைப் பார்த்து, "அடேய் கருத்தான்! நண்டுகளைப் பிடித்துத் தின்னாதே. இப் பிறப்பில் நண்டுகளைப் பிடித்துக் கால்களை ஒடித்துக் கறி சமைத்துத் தின்பாயாகில் மறு பிறப்பில் தொழுநோய்கொண்டு வருந்துவாய்; பெரியோர்கள்,

"அக்கேபோல் அங்கை ஒழிய விரல் அழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்."

என்று கூறியிருக்கின்றார்கள்" என்று அறிவுரை கூறினார். கருத்தான் தான் நண்டுக்கறி தின்பதை விட்டுவிடுவதாக வாயாற் கூறினானே தவிர உண்மையில் விடவில்லை. ஒரு நாள் கருத்தான் வெண்பாப் புலியாரைப் பார்த்தான். "பெரியீர்! தாங்கள் கூறியபடி நான் நண்டு தின்பதை விட்டுவிட்டேன்; இனிமேல் ஒருநாளும் உண்ணவேமாட்டேன்" என்று கூறினான். இதனைக் கேட்ட வெண்பாப் புலியார், "இப்பொழுது நண்டு அகப்படாதபடியினால் தின்பதை விட்டுவிட்டாய் போலும். நண்டு அகப்படுகிறபொழுதன்றோ உன்னுடைய மொழியின் மெய்ம்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று சொல்லி,

"வண்டுவந் தால்தெரி யும்மலர் வாசம் வழிநடத்திக்
கொண்டுவந் தால்தெரி யும்பரி வேகம் குணத்துடனே
கண்டுவந் தால்தெரி யும்பிறர் வாஞ்சை கறிக்குதவும்
நண்டுவந் தால்தெரி யுங்கருத் தானுடை நாநயமே."

என்னும் கட்டளைக் கலித்துறையைப் பாடினார்.

குத்தகையில் வெற்றிலை

இவர் ஒரு முறை தம் கூட்டத்துடன் வேறோர் ஊர்க்குச் சென்றிருந்தார். வெற்றிலைத் தோட்டக்காரன் ஒரு

வன் இவருக்கு ஒரு கட்டு வெற்றிலைகொடுத்தான். அவர் அதனைத் தமமூருக்குக் கொண்டு வந்தார். வெற்றிலை மிகுதியாக இருப்பதைக்கண்ட சுங்கச் சாவடிக்காரன் இவருடைய தன்மையை உணர்ந்து கொள்ளாமல் வெற்றிலைக்குச் சுங்கப் பணம் கொடுக்க வேண்டும் என்று மறித்துக் கொண்டான். உடனே இவருக்குச் சினமுண்டாகியது.

"தம்பா முதலி சகலகலை ஞானமுள்ள
வெண்பாப் புலியென்றால் வேறோ—திண்புவியில்
குத்தகையில் வெற்றிலையைக் கொண்டுவந்தால் என்னபயம்
புத்திகெட்ட மாடேநீ போ."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினார். சுங்கச் சாவடிக்காரன் வெண்பாப் புலியாருடைய தன்மையை உணர்ந்து கொண்டு வாலை மடக்கிக்கொண்டான்.

முத்து

வெண்பாப்புலியார் எட்டையபுரத்திற்குச் சென்றார். தெருவிற் சில பெண்கள் உரையாடி நகைத்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய பல்லழகு வெண்பாப்புலியாருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கியது. உடனே,

"தூது மதுரை துவரை கடையிடைமுன்
ஓதுகின்ற மூன்றெழுத்தை ஒக்குமே—நீதிச்
செகராச ராசர்கள்தம் சிங்கே றிளசை
நகரார் இளையார் நகை."

என்னும் வெண்பா ஒன்றைப் பாடினார். தூது, மதுரை, துவரை ஆகிய மூன்று சொற்களின் கடை யிடை முன் ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள மூன்று து 'முத்து' என்றுதலைக் காண்க.

வேட்டைப்பாட்டு

வெண்பாப்புலியார் சிவகங்கை நாட்டில் பெருநிலக்கிழாரோடு தங்கியிருந்தார். அப்போது அவர் வேட்டைக்

குச் சென்றார். வேட்டையைப் பார்க்க விரும்பிய வெண்பாப் புலியார் தாமும் உடன் சென்றார். பெருநிலக்கிழார் வேட்டையாடி முடிந்த பின்பு மறுநாள் வெண்பாப்புலியாரைப் பார்த்து, "நேற்று நாம் வேட்டையாடியதைப் பார்த்தீரே எவ்வாறிருந்தது?" என்று கேட்டார். உடனே இவர்,

"கெசபதி போத குருமகராச கிரீடி நென்னல்
முசல்கலை மான்கொன்ற வேட்டைப்ர தாப முசுவிசும்பில்
சசிகண்டு கோட்டையிட் டுள்ளிருந் தப்புறந் தானகன்று
நிசிகொண்டு மெல்லச் சமுத்திரம் புக்கனன் நிச்சயமே."

என்று பாடினார்.

தனிப்பாடல்கள்

இவர் நூல்கள் இயற்றியதாகத் தெரியவில்லை. ஆனால், அவ்வப்போது சமயத்தை நோக்கி இயற்றிய தனிப்பாடல்கள் பல. அவைகளும் ஒன்றுபடுத்தப்பெறாமல் மூலைக்கொன்றாகச் சிதறிப்போயின. தனிச்செய்யுட் சிந்தாமணியில் ஐந்தாறு பாடல்கள் மட்டும் சேர்ந்துள்ளன. இவர் பிள்ளையார்மீது இயற்றியது,

"பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைபட்டு நிற்குமே—வாசநறும்
காரார் வரைபயின்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தென் உளத்து."

இறுதி

முத்தப்ப செட்டியார் காலத்தவராகிய இவர் முத்தப்ப செட்டியாருக்கு முன்போ பின்போ இவ்வுலக வாழ்வைத் துறந்தார். இவருடைய வழிமுறையினர் மிதிலைப்பட்டி செவ்வூர் முதலிய இடங்களில் இருக்கிறார்கள்.

உரு. கல்போது பிச்சுவையர்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே கல்போது என்னும் ஊரிலே பிச்சுவையர் வாழ்ந்திருந்தார். இவர் சிறந்த புலவர். வேடிக்கையாகச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர். கல்போது பெருநிலக்கிழாரின் அவைக்களப் புலவராக இருந்ததோடு வேறுபல பெருநிலக்கிழார்கள்மீது தனிப்பாடல்கள் நூல்கள் முதலியன இயற்றியும் தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

பாட்டியல்பு

இவருடைய பாடல்கள் படிப்பதற்கு மிக வேடிக்கையாக இருக்கும். மொழிகளின் எழுத்துக்களை மூலைக்கொன்ருகப் பிய்த்துப் பிடுங்கி வைத்துவிடுவார். பாட்டைக் கேட்பவர்கள் விழுந்து விழுந்து நகைப்பார்கள். இவருடைய பாடலின் போக்குக் கவிச்சிங்க நாவலராகிய மாம்பழக் கவிராயருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கியது. அவர் இவருடைய பாடல்கள் சிலவற்றைப் பார்த்துவிட்டு,

> "உச்சிதமா முன்னோர் உரைத்த தமிழையெல்லாம்
> அச்சரங்கள் அச்சரங்கள் ஆகவே—நிச்சயமாப்
> பிச்சுவைப்ப தாலேயின் பேர்பிச்சு ஐயனென
> வைச்சனன் கல்போது மன்."

என்று பாடினார்.

திருவாடானை அந்தாதி

இவர் திருவாடானையில் எழுந்தருளிய சிவபெருமான் மீது அந்தாதி ஒன்று பாடினார். அவ் வந்தாதி எளிதிற் பொருளறிய இயலாதவாறு மிகவுங் கடுமையாக அமைந்தது.

“முன்னவனைப் பாம்பிரவி கொடுநரகில்
புகுவனென மொழியும் வேதம்
அன்னவனைச் சிறுகாலோ திமம்பழனம்
பவன்கயிலை அடைவான் என்றும்
கன்னநெடுங் கமுகினஞ்சூழ் பொழில்பெருகு
மாடானைக் கருத்தன் பேரை
இந்நிலத்தில் கீர்த்திநெல்லி தரித்திடுமோ
என்றுமடி யேற்குத் தானே.”

[பாம்பு இரவி - பணியாதவன். சிறுகாலோதிமம் பழனம் பவன் - வந்தனம் செய்யாதவன். கீர்த்திநெல்லி தரித்திடுமோ - புகழாமல் அகம் தரித்திடுமோ.]

போடிக்குச் சென்றது

இவருடைய காலத்தில் போடிநாயக்கனூர்ப் பெருநிலக் கிழார் சிறந்த கொடையாளியாக விளங்கியிருந்தார். அவர் மீது இவர் சில செய்யுட்களை இயற்றிக்கொண்டுபோய்ப் பார்த்தார். எக் காரணத்தினாலோ பெருநிலக்கிழார் இவரைப்போற்றி நன்கொடை வழங்கவில்லை. உடனே பெருநிலக்கிழாரைப் பார்த்துப் பிச்சுவையர், “நான் இங்கு வந்ததில் எனக்குத்தான் சிறப்பில்லாமற்போய்விட்டது. என் மனைவிக்குத் தகுந்த சிறப்புக் கிடைத்தது. எவ்வாறென்றால், இதற்கு முன்பெல்லாம் என் மனைவிமீது எனக்குச் சினமுண்டானால், “போடி,” என்று நான் அவளைப் பார்த்துக் கூறுவது வழக்கம். இனிமேற் சினமுண்டாகும்போது அவ்வாறு சொல்லமாட்டேன்; ஏனென்றால், ‘போடி’ என்பது தங்களுடைய ஊரைக் குறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இனிமேற் சினமுண்டாகும்போது, ‘வாடி, வாடி,’ என்றுதான் கூறுவேன்,” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.*

* வாடி - கல்போது. போடி - போடிநாய்க்கனூர்.

"வாடி நகரிருக்க மன்னன் தயவிருக்க
ஓடிப் பணிவிடைசெய் வோரிருக்கப்—போடிநகர்க்(கு)
என்தான் பெரியமலை ஏறிவந்தேன் ஐயையோ
நான்தான் இனிவருவ ேனு."

என்னுஞ் செய்யுளைப் பாடிக்கொண்டே சென்றார்.

திருமங்கலம்

இவர் ஒருநாள் திருமங்கலத்திற்குச் சென்றார். ஊரார்கள் இவரைப் பாராட்டி ஆகவேண்டிய காரியங்களைமுடித்து அனுப்பவில்லை. இவருக்கு அவ்வூரைப்பற்றி மனதில் சினமுண்டாகியது.

"நீரோ தொடுமுன் பிடித்திடு காங்கை நிறைந்திருக்கும்
ஊரோ கொடிய உவர்த்தரை யாமிந்த ஊரிலுள்ள
பேரோ அருமை தெரியாத பேரிதைப் பேய்த்தனமா
ஆரோ திருமங் கலமெனக் கூறினர் அன்புவைத்தே."

என்று செய்யுளை அவ்வூர்ப் பொதுமண்டபத்தில் எழுதிவைத்துவிட்டுச் சென்றார். இதனைப் பார்த்தவர்கள், ஐயரைப் போற்றி நல்ல பாட்டுக் கேட்காமற் போனேமே என்று எண்ணி வருந்தினர்கள்.

விநாயக முதலியார்மேற் பாட்டு

சென்னை வியாசர்பாடியில் இருந்த விநாயக முதலியார் திருமயிலையில் அழகிய அறச்சாலை ஒன்று கட்டி அதிற் பல ஓவியங்கள் எழுதி அதற்குச் சித்திரச் சத்திரம் என்று பெயரிட்டார். அச் சத்திரத்தையும் அதிலமைந்த ஓவியங்களையும் பார்த்துப் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய பல புலவர்கள் புகழ்ந்து பாடினர்கள். அப்போது அங்கிருந்த இவரும் அவ் வறச்சாலையைப் புகழ்ந்து,

"அத்திரத்தை ஒத்தவிழி அம்பிகைபா கன்பதத்தில்
அன்பாய் என்றும்
பத்திரத்தைத் தூவிநிதம் பணியும்விநா யகமகிபன்
பண்பாய்ச் செய்த
சத்திரத்தைப் பார்ப்பவர்க்குச் சத்திரத்துள் வாய்ந்தசுவர்த்
தலமேல் ஓங்கும்
சித்திரத்தைப் பார்ப்பவர்க்கும் ஆயிரங்கண் வேண்டுமயன்
செய்தி லானே."

"புருடநர சிங்கமெனப் புகழுமருச் சுனநிருபன்
புதல்வா செம்பொன்
வருபுலவர்க் கருள்புரியும் மதனவிநா யகமகிபா
வழுத்தக் கேண்மோ
திருமயிலை ஊரினில்நீ கட்டிவைத்த சத்திரத்தின்
சிறப்பை யெல்லாம்
இருநிலத்தைத் தாங்குமரா அதன்நாவால் எடுத்துரைக்க
ஏலா தன்றே."

என்பன முதலிய பாடல்களைப் பாடித் தக்கவாறு நன்கொடை பெற்றார்.

வேடிக்கைப் பர்டல்கள்

வேடிக்கையாகப் பாடல்களை இயற்றுவதில் மிகவும் வல்லவர். விடுகதைப் பாடல்களை அப்பாடலுக்குள்ளேயே விடையும் அமைத்துப் பாடுவார். அத்தகைய பாடல்கள் எல்லோருக்கும் மிகுந்த உவப்பை விளைப்பனவாம். சிலவற்றைக் காண்க :

"அன்புடனே இச்சைகொள்வார் அவனி யோர்கள்
அன்றியப்பா னலமுறுமோ ரணிலுண் டாகும்
வன்படிக நிறமாமற் றங்கேண் மோக
வளங்கவன மாயிருக்கும் ஆடைக் குள்ளாம்

இன்பமுள்ள சுந்தரதா சேந்த்ரா மிக்க
இயல்பான மதுரவுரை இயம்பு நீதா
முன்பினுள்ள ஈரெழுத்துஞ் சேர்த்துப் பார்க்கில்
மொழிந்தகதை இன்னதென மொழிய லாமே."

[இப்பாட்டின் விடுவிப்பை நண்பர்கள் முயன்று கண்டு பிடிப்பார்களாக.]

"என்னசொல்ல வானாலுந் தானே முந்தும்
இன்னமுங்கேள் கவியுமத னுல்உதிக்கும்
வின்னமில்லை தண்ணீர்மேல் வாசஞ் செய்யும்
மேலாகத் தந்தத்தை ஒப்புக் கொள்ளும்
அன்னமுதற் பட்சிக்குஞ் சேர்க்கை ஆகும்
ஆவலப்ப சாமிமகிழ் பழநி யாண்டி
மன்னவா பயனுனக்குச் சொல்லு வேனு
வல்லவா இக்கதையை வழுத்து வாயே.

[தடித்த எழுத்துக்குள் விடுவிப்பு அமைந்திருத்தலைக் காண்க.]

"அன்னமருந் தாதிருக்கும் பூவில் வாழும்
அனுதினமும் மச்சமுண்டாம் படிக்கு மேலாம்
சொன்னகரம் இல்லாத அனலை மேலாத்
தோயுமப்பா எந்நாளும் தொலையா தப்பா
வன்னமுட னேயழகா னகரை யாரும்
வாஞ்சைகொளும் படிகாட்டு மயிலூர் வேலா
என்னிடத்தில் கதைப்பயனைக் கேட்கிற் சொன்னே
னேதடா கம்தாநீ இயம்பு வாயே.

[சொன்னகரம் இல்லாத அனலை—அலை.-தடித்த எழுத்துக்களுக்குள் விடை அமைந்திருத்தலைக் காண்க.]

இவர் இயற்றிய நூல்கள்

1. சுந்தரதாசுத் தேவர் ஒருதுறைக்கோவை
2. திருவாடானை அந்தாதி

முதலியன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவரால் அவ்வக்காலங்களில் இயற்றப்பட்ட தனிப் பாடல்கள் பல.

அவற்றுள் ஒரு சில மட்டுந் தனிச்செய்யுட் சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன.

இறுதி

பெரும்பாலும் பரிசில் வாழ்க்கையையே மேற்கொண்டிருந்த இவர் 1848-ஆம் ஆண்டில் காலமானார்.

உசஅ. களத்தூர் வேதகிரி முதலியார்

தோற்றம்

தொண்டைமண்டலத்திலேயுள்ள களத்தூரில் வேதகிரி முதலியார் ஏறக்குறைய நூற்றெழுபத்தைந்து யாண்டுகட்குமுன்பு தோன்றினார். இவருடைய குலம் வேளாளர் குலம். அந்நாளில் சென்னையிற் சிறந்து விளங்கிய இராமநுச கவிராயர் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தேறினார்.

வாழ்க்கை

இவர் மாணவர்கட்குப் பாடஞ் சொல்லுதல் நூல்களைப் பரிசோதித்து அச்சிடுதல் முதலிய தொழில்களிலே தம்முடைய காலத்தைச் செலவிட்டார்.

இயற்றிய நூல்கள்

நீதி சிந்தாமணி, மநுநீதி சதகம் முதலிய நீதி நூல்கள் இயற்றியதுடன் இலக்கணக் களஞ்சியம் இலக்கியக் களஞ்சியம் என்னும் இலக்கண இலக்கிய நூல்களும் எழுதினார். இலக்கணக் களஞ்சியத்தில் அகத்தியம், தொல்காப்பியம், இலக்கணத் திரட்டு, பிரபந்ததீபம், கவிசர்கரம், குவலயாநந்தம், அரியவிதி, மயேச்சுரம், அவனியம், பஞ்சலட்சணப்பயன் முதலிய இலக்கண நூல்களில் இருந்து

பல சூத்திரங்கள் எடுத்துக் காட்டினார். இலக்கியக் களஞ்சியத்திலே ஆசிரிய நிகண்டு, கயாகர நிகண்டு, பொதிய நிகண்டு முதலிய நிகண்டுகளையும் பிறவற்றையும் எடுத்துக் காட்டினார்.

நாலடியார் உரை

நாலடியாருக்கு இவர் ஓர் உரை எழுதினார். அவ்வுரை இலக்கணக் குறிப்புப் பொழிப்பு முதலியவைகளுடன் அமைந்து கற்பவர்களுக்கு நற்பயன் அளிப்பதாகச் சிறந்து விளங்குகிறது.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையைக் காண்டல்

இவர் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்தினர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் தங்கியிருந்தபோது வேதகிரி முதலியார் ஏதோ அலுவல் ஒன்றை முன்னிட்டுத் திரிசிரபுரத்திற்குச் சென்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பொறாமை கொண்ட சிலர், 'இம் முதலியாரை அப்பிள்ளையிடம் அழைத்துக்கொண்டுபோய் விடுவோமாயின், இலக்கணப் புலியான இவர் அவரை ஏதேனும் கேள்வி கேட்பார். அவர் பதிற் சொல்லமுடியாமல் விழிப்பார். கொட்டம் அடங்கிவிடும்,' என்று எண்ணியவர்களாய் வேதகிரி முதலியாரை மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் அழைத்துக்கொண்டு சென்றனர். முதலியார் பிள்ளையைப் பார்த்துச் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தார். முதலியாரை அழைத்துக்கொண்டு சென்றவர்கள் பிள்ளையவர்களைப் பார்த்து, "முதலியார் பெரிய இலக்கணப் புலவர் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட இலக்கணச் சூத்திரங்கள் முதலியாருக்கு மனப்பாடமாக உள்ளன. இக்காலத்தில் முதலியாருக்கு மேற்பட்ட இலக்கணப் புலவர்கள் இல்லை," என்று புகழ்ந்து கூறினார்கள்.

இதனைக் கேட்டவுடன் பிள்ளையவர்கட்கு மிகுந்த வியப்புண்டாகியது. அவர் தம் அண்மையில் இருந்த தியாகராசச் செட்டியாரைப் பார்த்து, "முதலியார் அவர்கட்கு மனப்பாடமாகியுள்ள சூத்திரத்தொகைகளை எழுதிக் கூட்டிச் சொல்," என்று கட்டளையிட்டார்.

சூத்திரத்தொகை

முதலியார் இலக்கணச் சூத்திரத் தொகைகளைச் சொல்லத்தொடங்கினர். நன்னூல், சின்னூல், தொல்காப்பியம், தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம், புறப்பொருள், அகப்பொருள் முதலிய இலக்கணச் சூத்திரங்களையெல்லாஞ் சொன்னதன்றித் திருக்குறளும் சூத்திரந்தான் என்று அதனையுஞ் சேர்த்துச் சொன்னர் எல்லாவற்றையுந் தியாகராசச் செட்டியார் சேர்த்துக்கூட்டிக் கணக்குக் கொடுத்தார். சில ஆயிரங்களுக்குமேல் கணக்குச் செல்லவில்லை. தியாகராசச் செட்டியார் பொல்லாதவர், விடாக்கண்டர்; "இவ்வளவு தானா? பத்தாயிரங்கூட ஆகவில்லையே," என்று கூறிக்கிண்டல் செய்யத்தொடங்கினர். பிள்ளையவர்களோ செட்டியாரை அடக்கிவிட்டார். பிறகு வேதகிரி முதலியார் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

முதலியார் உரைநடை

"ஆன்மாவாவது அறிவிற்கு இடனுயுள்ளது. அது சீவாத்துமா, பரமாத்துமா என இருவகை உடம்பு உயிரின் போகத்திற்கிடனுயுள்ளது. அஃது அண்டசம் முதலிய நால்வகையுடையது. இந்திரியம் மெய்வாய் முதலியன. அர்த்தம், பிருதிவி அப்பு முதலியன. புத்தி அறிவு. மனமாவது சுகம் முதலிய அநுபவிக்குங் கருவியாகிய இங்

திரியம். பிரவிருத்தியாவது தொழிற்பாடு. தோடம்—குற்றம். அது காமம், வெகுளி, மயக்கம் என மூவகை. பிரேத்தியபாவம் மறுபிறப்பு."

உஎ. வண்டானம் முத்துச்சாமி ஐயர்

தோற்றம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வண்டானம் என்னும் ஊரில் முத்துச்சாமி ஐயர் அந்தணர் குலத்திலே தோன்றினர்.

கல்வி

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை யாதீனத்தில் அமர்ந்து பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தபோது முத்துச்சாமி ஐயர் அங்குக் கல்விகற்கச் சென்றார். குமாரசாமித் தம்பிரான் என்பவரிடம் நூல்களைக் கற்றார். இவர் மிகுந்த நாணமுடையவர். எல்லோரோடும் நெருங்கிப் பழகமாட்டார். பெரும்பாலும் தனித்தே பொழுது போக்கும் இயல்புடையவர். ஒவ்வொன்றையுஞ் செய்யவேண்டிய காலத்திலே செய்யமாட்டார். ஆடைகளைத் தோய்த்து அழுக்கறக் கட்டமாட்டார். பார்வைக்குப் பித்துக்கொள்ளியைப்போல் இருப்பார். இவர் இவ்வாறாக இருக்கவே இவரை மற்றவர்கள் ஒருபொருட்படுத்தவில்லை.

பாட்டு

இவருக்கு உணவு, அறச்சாலையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உண்பதற்கும் செல்லவேண்டிய வேளையில் செல்லமாட்டார். காலங்கடந்தே செல்வார். இதனால் இவருக்கு உணவும் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. உணவு

அகப்படாதபடியினால் திண்டாடிய இவர் ஒருநாள் அறச் சாலைச் சுவரிலே, கீழ்க்கண்டவாறு எழுதிவைத்தார்.

"இந்தஅறச் சாலைதனி லேஇரவும் பகலும்
வந்தவரி முதன்மதிதம் வரைவாங்கிக் கொண்டே
அந்தணருக் கடிசிலிட யாதுமிலை எனலால்
சுந்தரசுப் பிரமணிய தேவனிடஞ் சொல்மின்."

இந்த நிலையில் அந்தணர் ஒருவர் அங்குக் கல்வி பயின்று கொண்டிருத்தல், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கோ ஆதீனத்தலைவராக அப்போது அமர்ந்திருந்த சுப்பிரமணிய தேசிகருக்கோ தெரியாது. ஒருநாள் ஓர் அந்தண மாணவர் உண்பதற்குச் சென்றார். அவர் இந்தப் பாட்டைப் படித்துப் பார்த்தார். இவ்வாறு ஒரு பாட்டு எழுதிவைக்கப்பட்டிருக்கிறதென்று மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

பாராட்டுஞ் சிறப்பும்

இப் பாட்டு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையும் பிறரையும் தன்வழிப்படுத்தியது. இப் பாட்டை யார் எழுதியிருக்கக்கூடும் என்று அவர்கள் ஆராய்ச்சியில் இறங்கினார்கள். இறுதியில் முத்துச்சாமி ஐயரே இதனைச் செய்தவர் என்று தெளிவாகியது. நல்ல அறிஞராகிய இவர் இவ்வாறு இருக்கிறாரே என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளை மிகவும் இரங்கினார். இவருடைய நிலையை உயர்த்தவேண்டுமென்று உள்ளத்தில் எண்ணினார். "இவர் நல்ல அறிவாளி. எத்தனையோ செய்யுள்களைப் பாடியிருந்தால்தான் இவ்வாறு பாடுதற்கு இயலும். இவருடைய அறிவு நல்ல நுண்ணறிவு. இத்தகைய அறிஞர் ஒருவர் இந் நிலையில் இங்கிருத்தலை நாம் உணர்ந்துகொள்ளவில்லையே. கற்றவர்களைக் கற்றவர்களாகிய நாமே உணர்ந்து போற்றவில்லையென்றால் வேறு எவர்தாம் உணர்ந்துபோற்றுவர்? ஒருவருடைய தோற்றத்தைக்

கண்டு நாம் ஏமாந்துபோதல் கூடாது. 'உருவுகண் டெள் ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க், கச்சாணி யன்னா ருடைத்து,' என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவர் கூறியிருப்பதை நீங்கள் அறியீர்களா?" என்று உரைத்தார்.

தேசிகர்க்குப் பாட்டு

பிறகு இவருக்கு நல்லாடைகள் வழங்குதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணினார். ஐயரைப் பார்த்து, "ஆதீனத் தலைவரவர்கள் தங்கள் செய்யுளைப் பார்த்தால் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். ஆடைகள் வழங்கவேண்டு மென்று ஒரு செய்யுள் அவர்கள்மீது இயற்றுங்கள்," என்றார். உடனே ஐயர்,

"மாசாரக் கவிநுவல்வோர் குறைகள்தமை
அடியோடே மாற்ற எண்ணித்
தூசார நிதியமுண அடிகள்தரல்
தெரிந்துபெறத் துணிந்து வந்தேன்
ஏசார வறுமையெனுங் கொடும்பிணியால்
நெடுந்துயருற் றிருக்கின் றேற்கின்(று)
ஆசாரம் அளித்தருள்சுப் பிரமணிய
தேசிகமெய் யறிஞ ரேறே."

என்னுஞ் செய்யுளை விரைந்து பாடினார். பிள்ளையவர்கள் தம் மாணவர் ஒருவரைப் பார்த்து, "இவ்வரை அழைத்துக் கொண்டுபோய்த் தேசிகர் திருமுன்புவிட்டு நிகழ்ந்ததைக் கூறும்," என்று சொல்லியனுப்பினார். அம் மாணவரும் அவ்வாறே அழைத்துக்கொண்டு சென்றார். நிகழ்ந்ததைக் கூறினார். தேசிகர் ஐயரின் பாடலைக்கேட்டு மகிழ்ந்தார். சரிகைக்கரையுள்ள இரு வேட்டிகளைக் கொடுத்துக் கட்டிக் கொள்ளச் சொன்னார். பிறகு இவருக்கு அவ்விடத்தில் மிகுந்த நன்மதிப்பு ஏற்பட்டது. இவர் அங்கு நன்கு பாடங்கேட்டு நல்ல புலவராய் ஊரையடைந்தார்.

வாழ்க்கை

நூறு யாண்டுகட்கு முன்பு தமிழ்ப்புலவர்கள் வாழ்க்கை இன்றைய நிலைமையைவிட மிக இழிந்த நிலையில் இருந்து துன்புறுத்திக்கொண்டிருந்தது. செல்வர்கள்பால் பாட்டியற்றிக் கொண்டுபோய்ப் பரிசில் பெற்று வாழ்க்கையை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. அந்நாள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். தமிழ்மொழி தலையெடுக்க முடியாமல் அடங்கிப்போயிருந்தது. உயர்நிலைப் பள்ளிகளில் தமிழறிஞர்கள் தமிழாசிரியர்களாக அமர்த்தப்பெறவில்லை. ஏதோ சில பெரிய கல்லூரிகளில்தான் இரண்டொருவர் பெயரளவுக்கு அமைந்து அடிமை வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தனர். அக்காலத் தமிழ்ப் புலவர்கள் நிலைக்கும் இக் காலத்திய தமிழ்ப் புலவர்கள் நிலைமை அரச போகமென்றே அறையவேண்டும். இதனைக் கருதியே ஒரு புலவர்,

"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்.''

என்று அலறிப் புலம்பினர். பாடப் படிக்க நன்கு கற்றுக்கொண்டு சிறந்த அறிஞராக எழுந்த முத்துச்சாமி ஐயர் தமது இரத்தல் தொழிலை மேற்கொண்டு பலவாறு அலைந்தார். அந் நாளில் ஊற்றுமலைப் பெருநிலக்கிழாராக இருந்த இருதயாலயமருதப்ப தேவர்மேல்,

"சுரும்பனங்கன் றிடச்செய்யும் விழிநடையும்
மாதுமுகைத் துணைக ளின்மேல்
கரும்பனங்கன் சூதமலர்க் கணையெய்ய
மிகவுமவை கனத்த லாலே
இரும்பனங்கத் திசையான் றன் ஊர்போலும்
இடைதாங்கா தெய்த்தாள் சேர்வாய்
விரும்பனங்க ணகம்புலவர்க் கருளுமித
யாலயநல் விவேக மாலே.

கற்பகமு மலரடையக் கருமுகிலு
மிடியாரக் கவினார் சங்கும்
அற்பகலும் பயமேவிப் புலம்பவன
சமும்பங்கம் அடைந்து நிற்பத்
தற்பகரும் கவிஞருக்கு வரையாது
கொடுத்தருளும் தகுதி யுள்ளாய்
நற்பகவற் போற்றுமித யாலயவென்
வேட்டலினை நடத்து வாயே.''

என்பன முதலிய பல செய்யுட்களை இயற்றிக் கொண்டு போய்த் திருமணத்திற்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவர் இவருடைய திருமணச் செலவுக்கு இருநூறு வெண்பொற் காசுகள் வழங்கினார். இவ்வாறே மற்றும் பல பெருநிலக்கிழார்கள் ஆதீனத் தலைவர்கள் முதலியோரைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுத் தம் வாழ்வை முடித்தார்.

இவர் இயற்றிய நூல்

பசுந்தையந்தாதி என்னும் அந்தாதி நூல் ஒன்றும் தனிப்பாடல்கள் பலவும் இவரால் இயற்றப்பெற்றன. திரிபு, யமகம், சிலேடை முதலியன அமையுமாறு செய்யுள் இயற்றுவதிலும் பிறர் பேசுவதை நகைச்சுவை ததும்புமாறு பிரித்துக் காட்டிப் பொருள் விளக்குவதினும் இவர் வல்லவர்.

சிவப்புத்தேள்

ஒருநாள் சிவனடியார் ஒருவர் இவரைப் பார்த்துக் கேலி செய்தார். உடனே இவர் அவரைப் பார்த்து, "நீங்கள் சிவப்புத்தேள்,'' என்று கூறினார். இச்சொல், சிவமாகிய புத்தேள் என்று பொருள்படுதலோடு, செம்மை நிறம் பொருந்திய தேள் என்றும் பொருள்படுதலைக்கண்டு மற்றவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். ஒரு

நாள் வேறொருவர் இவரைப் பார்த்து, "உண்டு வந்தீரா?" என்று கேட்டார். அதற்கு இவர், "உண்டு உவப்பதற்கு நான் சாப்பாட்டு ராமன் அல்லன்," என்று மறுமொழி கூறினார். இப் பதிலைக்கேட்ட முன்னவர், "உண்டு வந்தீரா?" என்று கேட்டதை உண்டு உவந்தீரா என்று பிரித்துக் கொண்டீரா? நன்று நன்று," என்றுகூறி மகிழ்ந்தார்.

இறுதி

இவருடைய பிற வரலாறும் இறுதி முதலிய செய்தியும் விளக்கமாகத் தெரியவில்லை.

உஅ. சூலியன் வின்சோன்

தோற்றம்

வீரமாமுனிவர் போப்பையர் முதலியோர் செந்தமிழ்த் தொண்டு செய்த மேலை நாட்டாராவர். சூலியன் வின்சோன் என்பவர் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை அந்தக் காலத்தில் இந்தியாவில் காரைக்காலில் நீதிமன்ற நடுவராக இருந்தார் அப்பொழுது சிறுவராயிருந்த சூலியன் வின்சோனைத் தமிழ்ப் படிக்கச் செய்தார். சூலியன் வின்சோன் தமிழை நன்கு படித்துத் தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்றார். பிறகு தந்தையார் தாய்நாட்டுக்குப் போய்விட்டபடியால் சூலியன் வின்சோனும் உடன் சென்றுவிட்டார்.

தமிழாசிரியர்

தாய்நாட்டுக்குச் சென்ற சூலியன் வின்சோன் தமிழ் மொழியை மறந்துவிடவில்லை. மேலும் பல தமிழ் நூல்களைப் படித்துத் தமிழறிவைப் பெருக்கிக்கொண்டார். இவருடைய தமிழறிவை நன்குணர்ந்த பாரிசுப் பல்கலைக்

கழகத்தார் இவரைக் கீழைநாட்டு மொழிகளுக்கு ஆசிரிய ராக அமர்த்தினார்கள்.

தமிழன்பு

உ. வே. சாமிநாதையர் சீவகசிந்தாமணியை ஆராய்ச்சி செய்து அச்சிற்பதிப்பித்து வெளியிட்டதும் புத்தகப்பிரதி பாரிசு பல்கலைக் கழகத்துக்குப் போயிற்று. அதனைச் ஜூலியன் வின்சோன் பார்த்துப் பெருமகிழ்ச்சி யடைந்தார். சாமிநாதையரைப் பாராட்டித் தமிழில் கடிதம் எழுதினார். மேலும் தமிழ்மொழியில் வெளிவராதிருக்கும் நூல்களை யெல்லாம் வெளிப்படுத்தவேண்டுமென்று அடிக்கடி கடி தங்கள் எழுதி ஐயரை ஊக்கினார். ஐயர் வெளியிட்ட சிந்தா மணியைப் படித்துப் பிரஞ்சு மொழியில் சீவகசிந்தாமணிச் சுருக்கம் என்னும் நூல் ஒன்றையும் வெளிப்படுத்தினார். அந் நூலில் சாமிநாதையரை மிகவும் பாராட்டி எழுதினார்.

இயற்றிய நூல்கள்

இவர் தம்மிடம் தமிழ்மொழியைப் பயிலுபவர்களுக் குப் பயன்படும் பொருட்டுத் தமிழ் இலக்கணச் சுருக்கம் ஒன்றை எழுதினார். திருக்குறள் முதலிய நூல்கள் சில வற்றைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார். இவர் உ. வே. சாமிநாதையருக்கு எழுதிய கடிதங்களில் கீழ்வரும் பாடல்களையும் புதிதாக இயற்றி எழுதியிருந்தார்.

“சிந்தா மணியாஞ் சிறப்புடைய காப்பியமே
பொன்றுதின் மாலை பொருந்திவரக்—கண்டேன்
சிலப்பதி காரமுதல் சீர்நூல்கள் நான்கும்
அளித்தலாம் என்மர் அறைந்து.”

ஆசிரியப்பா

“இளங்கதிர் ஞாயிறு இருள்தொறு நீக்கியபின்
விளங்கிடைச் சங்கெறி வெண்டிரைக் கடல்சூழ்

மாநில மதனில்வாழ் மறைமிகு சோழப்
பூநிலத் தலர்ந்த புகார்நக ரத்துக்
கோவலன் கண்ணகி கூறரும் அன்பொடு
பாவல முடையாட்குப் பற்பொருட் பரத்தலும்
ஆங்கவன் துயரமும் அணிகிளர் சிலம்பு
வாங்குபு போயது மதுரை யிற்கொலைப்
படலு முதலிய பறைதருஞ் சரிதை
அடல்வினைப் பயனெறி அமைபொருள் இன்பம்
வீடெனயாந் தெளிவுற வின்மொழிக் காப்பியம்
சிலப்பதி காரஞ் சிறந்த பெயரால்
உலகெலாம் அறிய ஒளிர்தரு சென்னைக்கண்
அச்சிட வளர்த்தீர் அடைந்த பெரும்புகழ்
மாசிலா நாமகள் மதிதெரிந் திசைக்கு
ஒருபேர் அகத்தியன் உருக்கொடு
மருளுடை மண்மிசை வந்துதோன் றினனென."

இறுதி

செந்தமிழிடத்திலே கழிபெருங் காதல் கொண்டு பாரிசுமாநகரில் தமிழ்த்தொண்டு செய்துகொண்டிருந்த இவர் உ. வே. சாமிநாதையருக்குப் பல கடிதங்கள் எழுதியதுடன் அந் நாட்டிலிருந்த நூல் நிலையத்தில் இருந்து தமிழ் நூல்கள் சிலவற்றை ஐயர் விருப்பப்படி எழுதியனுப்பினர். இவருடைய பிற வரலாறுகளும் பிறந்த இறந்த காலங்களும் தெரியவில்லை. ஒரு காலத்தில் உலகெலாம் நந் தமிழ்மொழி பரவி யிருந்ததென்பர் ஆராய்ச்சியாளர். இத்தகைய நிகழ்ச்சிகளால் ஆராய்ச்சியாளர்களுடைய கூற்றுக்களும் உண்மையேயென நாம் ஊகிக்கலாம்.